Registered as a News Paper

பக்கம் – 16

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly

விலை: 12.00

நாதம் -13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | 10 - 16 ஜனவரி 2003 | ஓசை 326



## ஐந்தாம் கட்டப்பேச்சுக்களை நோக்கி...

## நான்காம் கட்ட பேச்சுவார்த்தை; தாண்ட முடியாத கட்டங்களைத் தாண்டுமா?

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி 10.01.2003


## தடைதாண்டல் சாத்தியமா?

இலகுவான பிரச்சினைகளுக்கு சுலபமான தீர்வு காணக்கூடிய வாய்ப்புக்களை நழுவவிட்டுவிட்டு அதனை இடியப்பச் சிக்கலாக்கிப்பின் தீர்வுகாண முயற்சிப்பது சிறிலங்காவின் அரசியலில் ஒரு வழமையாகவே உள்ளது.

சிக்கலாக்கப்பட்ட பின் சிக்கெடுப்பதே ஒரு பாரிய பிரச்சினையாகி , அதனையொரு பெரும் விவகாரமாக்கி, அந்தவிவகாரத்தை தமது அரசியலுக்கான கோட்பாடாக மாற்றுவதில் சிறிலங்காவின் அரசியல்வாதிகள் கை தேர்ந்தவர்கள்.

சுதந்திரத்துக்குப் பின்னர் சிறிலங்காவின் அரசியல் கோட்பாடானது சகல பிரச்சினைக்கும் இன-மத-மற்றும்மொழி எனப்படும் முலாம்களைப் பூசி அதனை பூதாகாரமாகக் காட்டி மக்களிடையே முரண்பாடுகளை வளர்த்து அந்த வெக்கையில் அரசியல் வாதிகள் குளிர்காய்வதற்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்ட தாகவே இருந்து வந்துள்ளது.

தேசிய நலன் என்ற பொதுவான கொள்கையானது சிறிலங்காவின் சகல அரசியல்கட்சி களாலுமே புறம் தள்ளப்பட்டு தேசியம் என்ற சொல் இனம்,மதம், மொழி என்ற வார்த்தைகளுக்குள் மூழ்கடிக்கப்பட்டு நச்சுப்படுத்தப்பட்டது.

இந்த நச்சுத்தன்மை கொண்ட அரசியல் சித்தாந்தங்களின் வழிகாட்டல் முழுமக்களையுமே தேசப்பற்றை மறந்து சுயநல நோக்குடன் செயற்படும் குறுகிய சிந்தனை கொண்டவர்களாக்கியது.

இதற்கு கல்விமான்களும், துறவிகளும், பொது உடமைச்சிந்தனையாளர்களும் கூடத் தப்பவில்லை.

இதன்விளைவுகளைத்தான் இன்று இந்த நாடு அறுவடை செய்து கொண்டிருக்கிறது.

எனினும் இந்த நிலையிலும் கூட அவர்கள் இன்னமும் மூர்க்கத்தனமும், வெறியுணர்வும் கொண்ட அவர்களின் அரசியல் சுபாவங்களை மாற்றிக் கொண்டு தேசிய நலனில் அக்கறை கொண்டவர்களாகத் தம்மை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை என்பது தான் பரிதாபகரமான விடயமாகும்.

பதவிப்பதர்களாகிவிட்ட இந்த அரசியல்வாதிகளின் தியானம் அடுத்தபதவியை எப்படி வெல்வது? அல்லது இருக்கும் பதவியை எப்படிக் காப்பாற்றுவது என்ற இலக்கு நோக்கியதாக உள்ளதே அன்றி, அடுத்த தலைமுறையின் நலன் மற்றும் இன்றைய தலைமுறையின் எதிர்காலம் குறித்ததாக இல்லை.

ஆளும் கட்சி எதிர்க்கட்சியை விமர்சிப்பதிலும், எதிர்க்கட்சி ஆளும் கட்சியைக் கவிழ்ப்பதிலும் குறியாக இருக்கையில் வாழும் மனிதர்கள் குறித்த சிந்தனை அவர்களுக்கு இல்லாமலே போய்விட்டது.

அதனால்தான் எமது பிரச்சினைகள் குறித்து தாய்லாந்திலும், நோர்வேயிலும், யப்பானிலும் வைத்து வெளிநாட்டவர்களின் மத்தியஸ்தத்தில் பேசவேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

பிரச்சினைகளுக்கு தீர்வுகான நிபந்தனைகளை முன்வைப்பது பிரச்சினைகளைத் தொடர விரும்பும் மனோபாவத்தின் நிலைப்பாடேயாகும். இன்றைய அரசியல், இராணுவ மதபீடத் தலைமைகளின் போக்கு மக்களின் இயல்புவாழ்வை நிராகரிக்கும் தன்மையையே கொண்டுள்ளது. இதனால்தான் சமாதானம் என்ற நகர்வுக்கான முயற்சிகள் இதுவரைகாலமும். சாணேற முழம் சறுக்கும் கதையாகி வந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதென்பதற்கு நிபந்தனைகள் தடையாக இருக்குமெனில் அதனைத் தகர்க்கும் வழியை மேற்கொள்வதே சிறந்த நடைமுறையாகும். அதைவிடுத்து அதனைச்சமாளிக்க - அனுசரிக்க முயல்வது அல்லது நிற்பந்திப்பது சம்மந்தப்பட்டவர்களின் மறுபக்கத்தையே வெளிப்படுத்தும். தாய்லாந்தில் ஆரம்பித்த முதற்கட்டப் பேச்சுவார்த்தை முதல் தற்போது நடைபெறும் நான்காவது கட்டப் பேச்சு வார்த்தைவரை ஒவ்வொருகட்ட முடிவிலும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்ட போதிலும் நடைமுறையில் அரசதரப்பு, சனாதிபதி தரப்பு, மற்றும் படைத்தரப்புச் செயற்பாடுகள் யாவும் பல்வேறு சந்தேகங்களை எழுப்புவதாகவே உள்ளன.

இதன் காரணமாகவே தற்போதைய பேச்சுவார்த்தை இத்தகைய சந்தேகங்களை தெளிவுபடுத்த வேண்டிய ஒன்றாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு உபகுழுவை கலைப்பதற்கும், மீள்குடியேற்றம் குறித்துப் புதிய நடைமுறைக்கு இணக்கம் காணவும் முடிவெடுக்கப்பட்டுள்ளமை முக்கியமான விடையமாகும்.

எதனையும் நடைமுறைப்படுத்துவதிலேயே அதன் நம்பகத்தன்மை அமைந்துள்ளது. பேச்சுவார்த்தை சேசையில் எடுக்கப்படும் முடிவுகள் வெறும் அறிக்கைகளாக கோப்புக்களில் சேர்க்கப்படுவதில் எந்தவித பயனும் கிடையாது.

ஆனால் அரசின் தீர்மானங்கள் சனாதிபதியால் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்ற நிலையில் இருப்பது தான் நடைமுறைப்படுத்தல்கள் குறித்த சிக்கல்களுக்கே காரணமாகும் என்பது அனைவரும் அறிந்த விடையமே.

அரசின் முடிவை அரசே பாராளுமன்றத்தினூடாக அமுல்படுத்தும் அதிகார வலு அரசின் தலைமைக்கு இல்லாதவரை பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நடைமுறைப்படுத்துதல் என்பது கடினமே.

இதற்கு சிறிலங்காவின் சனாதிபதி, சிறிலங்காவின் எதிர்க்கட்சிளுக்கும் தலைமை தாங்கும் அரசிற்கெதிரான பகைமை உணர்வுடன் செயற்படும் ஒருவராக, நிறைவேற்றதிகார வலுக் கொண்டவராக, சமாதானத்துக் கெதிரானவராக, போர்மூலம் அமைதியை ஏற்படுத்த முடியும் என்ற கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவராக, அத்தகைய கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டவர்களுடன் கூட்டு வைத்துள்ளவராக இருப்பதே காரணமாகும்.

ஆக - சமாதானத்துக்கான பெரிய தடை சனாதிபதி வடிவில் இருப்பதுதான் அரசுக்குத் தாண்ட முடியாத விடயமாக முன்னிக்கிறது.



### தூரனின் பார்வையில்

## சமாதானத்திற்கு முட்டுக்கட்டை போடமுனையும் சிங்கள - பௌத்த அரச, இராணுவ, மதபீடத்தலைமைகள்

இன்று சிறிலங்கா மூன்று தலைமைகளின் கீழ் இயங்கிவருகிறது.

ஒன்று; நிறைவேற்று அதிகார வலுக்கொண்ட சனாதிபதியின் தலைமையிலான அரசாங்கத் தலைமை.

இரண்டாவது; அதேசனாதிபதியின் கீழ் இயங்கும் முப்படைத்தலைமை - குறிப்பாக இராணுவத்தலைமை

மூன்றாவது; அரச தலைமையையும், இராணுவத் தலைமையும் ஆட்டிப்படைக்க வல்லதான பௌத்தமதபீடங்களின் தலைமை.

இன்று இந்த மூன்று தலைமைகளும் தான் சிறிலங்கா எதிர் கொண்டுவரும் பன்முகப்பட்ட நெருக்கடிகளுக்கும் - துன்பங்களுக்கும் பொறுப்பேற்க வேண்டியவர்களாவர்.

பதவிவெறி - போர்வெறி - மதவெறி இம்மூன்றினதும் எதிரொலியே இந்த நாட்டின் அனைத்துக் கஷ்ரங்களுக்கும் காரணமாகியுள்ளது.

சனநாயகம் என்ற பெயரில், அரசியல் யாப்பு அளித்துள்ள அபரிதமான அதிகாரங்களின் பலத்துடன், மக்களிடையே செல்வாக்கினை இழந்துள்ள போதிலும் கூட, சர்வாதிகார வெறியும், பதவிப்பற்றும் கொண்டவராக - அச்சுறுத்தல் அரசியல் ஒன்றை நடத்திவரும் சனாதிபதி - ரணில் தலைமையிலான பாராளுமன்ற ஆட்சி நிர்வாகத்துக்கு ஓயாது மிரட்டலை விடுத்துவருபவராகவும், எல்லாவகையிலும், சமாதான செயற்பாடுகள் உட்பட அதன் எல்லாநடவடிக்கைகளுக்கும் ஏதோ ஒரு விதத்தில் முட்டுக்கட்டை போடுபவராகவுமே விளங்கி வருகின்றார்.

இவரே முப்படைத் தளபதியாகவும் இருந்து வருவது தான் சிறிலங்காவின் அடுத்த சிக்கல்களுக்கு காரணமுமாகும். பாதுகாப்பு அமைச்சின் கீழ் முப்படைகள் செயல்படுவதா? சனாதிபதியின் கட்டளைகளுக்கேற்ப அவைகள் இயங்குவதா? என்பதற்கு இன்னமும் ஒரு தெளிவான தீர்வு சிறிலங்காவில் ஏற்படவில்லை. பாதுகாப்புப் படைகளுக்குள்ளேயே ரணிலின் அரசுக்கு சார்பான பிரிவொன்றும், சந்திரிக்காவின் ஆட்சி அதிகாரத்திற்கு விசுவாசமான பிரிவொன்றும் இயங்கிவருவது வெளிப்படையான விடயமேயாகும், இராணுவத்தளபதி லயனல் பலகல்லே, கடற்படைத் தளபதி தயாசந்தகிரி போன்றோர் சந்திரிகாவின் விசுவாசிகளேயாவர். சந்திரிகா இவர்களுக்கான சேவை நீடிப்பை, வழமையான விதிமுறைகளையும் மீறி பல்வேறு எதிர்ப்புகள் விமர்சனங்களுக்கு மத்தியில் வழங்கியுள்ள விதம் இதனை உறுதிப்படுத்துகிறது.

போர்நிறுத்த - புரிந்துணர்வு உடன்பாட்டின் அம்சங்களை, பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ற காரணத்தைக் காட்டி மீறுவதில் கடற்படைக்கு இராணுவமும் சளைத்ததாக இல்லை.



இன்றையசமாதானப் பேச்சுவார்த்தைகளில் மிகவும் சிக்கலான பிரச்சினையாக உள்ள விடயங்கள் பலவற்றுள் மிகவும் முக்கியமானது உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான நெருக்கடியேயாகும்.

தற்போதைய தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளில் இந்தவிடயம் மிகவும் முக்கியமானதாக ஆராயப்படும் என்று அனைத்துத் தரப்பாலும் கூறப்படுகின்ற போதிலும் இப்பிரச்சினை குறித்த இறுதித் தீர்வை எடுக்க வேண்டியவராக சந்திரிகாவே உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதுடன் இவரே இதற்கு ஒரு நியாயமான தீர்வு ஏற்படத்தடைக்கல்லாக இராணுவத்திற்கு ஆலோசனையும், கட்டளைகளையும் வழங்கும் பிற்பலமாகவும் இயங்கி வருகிறார்.

அவர் இதை மறுத்தாலும் கூட இதுவே உண்மையானதாகும்

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக வட பிராந்திய சிறிலங்காவின் இராணுவத்தளபதியான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கையளித்த அறிக்கையில் காணப்படும் - விடுதலைப்புலிகளினால் முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது என்று நிராகரிக்கப்பட்ட - ஆலோசனைகளும் நிபந்தனைகளும், அந்த இராணுவ அதிகாரியாலே தயாரிக்கப்பட்டதாகவே அனைவரும் கருதி அவரை நோக்கிய கண்டனங்களையும் விமர்சனங்களையும் தெரிவித்த போதே அவர் உண்மையை வெளிப்படுத்தினார்.

அந்த அறிக்கையை தான் தயாரிக்கவில்லை என்றும் அதனை இராணுவத்தளபதியான லயனல் பலகல்லேயும், பாதுகாப்பு செயலர் ஒஸ்டின் பெர்னான்டோவும் தான் தயாரித்தாகள் என்றும், தான் அதனைக் கையளிக்கும் பொறுப்பையே மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

இந்த அறிவித்தலானது ஒரு விடயத்தை மேலும் தெளிவுபடுத்துகிறது. அதாவது இதனைத் தயாரித்தது இராணுவத்தளபதி லயனல் பலகல்லே தான் என்பதே அதுவாகும்.


ஒஸ்ரின் பெர்னான்டோ பாதுகாப்புச் செயலராக இருந்தாலும் கூட அவருக்கு இராணுவம் தொடர்பான திட்டங்களை , நடவடிக்கைகளை வரையறை செய்வதற்கோ, தீர்மானிப்பதற்கோ அனுபவ ஆற்றல் அதிகமில்லை என்பது அதற்குக் காரணமுமாகும்.

இந்த நிலையில், லயனல் பலகல்லே சுயாதீனமாக இந்தமுடிவை எடுத்திருப்பார் என்று கூறிவிடவும் முடியாது. நிச்சயமாக அவர் அரசின் (ரணிலின்) ஆலோசனையை இவ்விடயம் தொடர்பாக நாடவில்லை என்பது தெளிவு.

அமைச்சர் G.L பீரிஸ் இது இராணுவத்தரப்பு ஆலோசனையும் அபிப்பிராயமுமே அரசின் தீர்மானம் அல்ல என்று பகிரங்கமாகக் கூறியதன் மூலம் தெளிவாகின்றது. எனவே நிச்சயமாக இந்த யோசனைகளினதும், நிபந்தனைகளினதும் பின்னணியிலே முப்படைத் தளபதியான சந்திரிகாவின் சமாதான விரோத சிந்தனைகளின் தாக்கம் இருக்கவே செய்கிறது. லயனல் பலகல்லே, சந்திரிகாவின் தீர்மானங்களை, ஆலோசனைகளைப் புறந்தள்ளி விட்டு சமகால அரசியல் சூழலுக்கேற்ப, யதார்த்த நிலைகளைக் கருத்தில் கொண்டு நியாயமாகவும் ரணில் அரசின் சமாதான நகர்வுகளுக்கு அனுசரனையாகவும் முடிவுகளை ஒருபோதும் எடுக்கவும் மாட்டார் என்பது தெளிவான விடயமுமாகும். இந்தவகையில் இந்த அறிக்கையின் சூத்திரதாரிகள் தம்மை இனங்காட்டாது சரத் பொன்சேகாவை இனங்காட்ட முயன்றுள்ளார்கள்.

(15ம் பக்கம் பார்க்க..)

# பிரமுக அறிமுகம்



**மீன்வளத் துறை அமைச்சர்**
**மகிந்த விஜேசேகர**

**மாத்துறை** மாவட்டக்காரர்.

அண்மைகாலத்தில் பரவலாக ஊடகங்களில் அடிபட்ட பெயருக்குரியவர் தனது அருமை மகனின் செயல்களால் அவரும் பிரபலமாகியுள்ளவர்.

ஐந்துநட்சத்திர விடுதிகளிலும், இரவு விடுதிகளிலும் கலாட்டா செய்வதில் புகழ்பெற்ற காஞ்சன விஜேசேகராவின் தந்தை என்றால் இப்போது அனைவரும் அவரை அறிந்து கொள்வர்.

தனது மைந்தனுக்குத் துணையாக இரவு விடுதியொன்றிற்கு போகமறுத்த கடமை பொறுப்புமிக்க தனது மெய்ப்பாது காவலர்களை பணியில் இருந்து நீக்கிய பொறுப்புள்ள தந்தை இவர்.

1970களில் ஜே.வி.பியின் முக்கியஸ்தராக விளங்கிய இவர் ஒருகாலத்தைய இடது சாரிப் புரட்சிவாதியாவார்.

ரோகண விஜேவீரவின் நம்பிக்கைக்குரிய நபராக விளங்கிய இவர் 1971 ஏப்ரல் கிளர்ச்சியின் போது கைதாகி சிறையில் அடைக்கப்பட்டவர்.

ஒரு பாடசாலை அதிபரின் மகனாகப் பிறந்து பொதுவுடமைச் சித்தாந்தங்களில் நம்பிக்கை கொண்டு அந்நாளைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களான டொக்டர் S.A விக்கிரமசிங்க, B.Y துடாவை போன்றோரை அரசியல் வழிகாட்டிகளாக ஏற்று மாணவ இயக்கங்களில் இணைந்து புரட்சிக் கோஷமிட்டவர்.

1960 இல் கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினராக அரசியலில் நுழைந்து, பாட்டாளிகளின் கூட்டாளியாகத் தன்னை இனம்காட்டியவர். தொழிலாளவிவசாய சமூகத்தவரின் மேம்பாட்டிற்காக இயங்கியவர்.

பாராளுமன்ற அரசியலை நிராகரித்து ஆயுதப் புரட்சியின் மூலம் சமதர்ம ஆட்சியை ஏற்படுத்தக் கனவு கண்டவர் (வெறும் கனவுமட்டுமே!)

ஜே.வி.பி.யின் உருவாக்கத்தில் இணைந்து ஆயுதப்புரட்சியில் இறங்கியவர். வித்யோக பல்கலைக் கழகப் பட்டதாரி. பல்கலைக் கழக மாணவசம்மேளனத்தலைவராகவும் இருந்தவர். 1971 தேசபத்த மாணவ அமைப்பினூடாக ஜே.வி.பிக்குள் பிரவேசித்தவர். அக்கட்சியின் உத்தியோக பூர்வ பேச்சாளராகவும் இருந்தவர்.

பல்கலைக்கழக வளாகத்தில் ஜே.வி.பியை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகித்தவர். ரோகண விஜேவீராவை பல்கலைக் கழகத்தினுள் மறைந்து வாழவும் உதவியவர்.

ஏப்ரல் கிளர்ச்சிக் குற்றவாளிகளில் 25ஆவது எதிரியாக குற்றம் சாட்டப்பட்டு நான்காண்டு கால சிறைவாசத்தை அனுபவித்தவர். தனது வழக்கைத் தானே வாதிட்டு விடுதலையாகி வெளிவந்ததும் சட்டக்கல்லூரியில் இணைந்து 1981இல் சட்டத்தரணியானார். அவரது கொள்கைகளில் அப்போது மாற்றம் ஏற்பட்டது. சிவப்பு கொள்கைகள் மங்கி நீலக் கொள்கைகளுள் ஊறித் திழைத்து சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் சரணடைந்தார். தேவிநுவரத் தொகுதியின் அமைப்பாளரானார்.

1983இல் ஐ.தே.கட்சி பிரமுகராக விளங்கிய ரொனிடீமெல்லை தோற்கடித்து பாராளுமன்றம் நுழைந்தார்- பின் இடைத் தேர்தலில் தோல்வியுற்றார். பின் மீண்டும் தேர்தலில் வென்று உறுப்பினராகி சந்திரிகாவின் அரசில் அமைச்சராகவும் இருந்தார்.


கடந்த தேர்தலில் மீண்டும் நிறம்மாறினார். கட்சிமாறி - கொள்கை மாறி ஐ.தே.கட்சியின் உறுப்பினராகி, இப்போது அமைச்சருமாகி அதிகாரம் பண்ணுபவராக உள்ளார்.

சந்திரிகா ஆட்சியில் போர்மூலம் சமாதானம் என்று கோஷமிட்டவர். இப்போது ரணில் பின்னால் சமாதானம் என்கிறார். இந்த முன்னாள் புரட்சிவாதி இப்போது மகன் செய்யும் ஐந்து நட்சத்திர ஹோட்டல் புரட்சிகளை சமாளிப்பதே அவரின் பொழுது போக்கு.

எந்தவகையிலோ 'புரட்சி' என்பது அவரது வாரிசால் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று கூறலாமா?

**அரசியல்** பேச்சுக்கள் எப்பொழுதும் இராஜதந்திரத்தையே ஆதாரமாகக் கொண்டவை. பேச்சின் அடிநாதமான சமரசத்தை அடையும் முயற்சி அதிகார வரம்புகளையே இராணுவம் கொண்டிருந்திருக்க வேண்டும். அதனையே அரசாங்கம் கொடுத்திருக்கவும் வேண்டும். திரும்புதல் என்ற மனிதாபிமானப் பிரச்சினைக்கான நியாயபூர்வமான வாதங்களும், நிலைப்பாடுகளும் கூட இரண்டாம் கட்ட நிலையிலேயே தேங்கிவிடும்.

# பேச்சைப் பாதுகாக்கும் பின்னோக்கிய பாய்ச்சல்



பிரச்சினை சர்வதேச அரங்கிற்கு வந்தபின்பும், சர்வதேச கவனத்தை ஈர்த்த பின்பும் மக்களின் வாழ்வியல் பிரச்சினைக்கான நியாயமான வேதனைக் குரல்களை அதற்கான வாதங்களை சர்வதேச அரங்கில் ஒலிக்காமலும், ஈர்க்காமலும் செய்துவிடும்.

இதுவே அரசின் உயர்பாதுகாப்பு வலய உபகுழுவுக்கான உள்நோக்கமாக இருப்பின் இது ஒரு 'பொறி'யாகவே கொள்ளத்தக்கது.

இத்தகைய நிலையில் தமிழ்

என்பதில் அவரவருடைய நலன்களில் முன்னேறிச் செல்வதென்பது இராஜதந்திர ரீதியிலான அணுகுமுறையில் அமைந்தவையே.

ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்துடனான சமரச முயற்சி என்ற வகையில் அதுவும் பலமான ஒரு இராணுவ அமைப்பை அவர்கள் பேணுகின்ற நிலையில் அரசின் இராஜதந்திரம் என்பது மக்களின் நம்பிக்கையைக் கட்டி வளர்ப்பதை மறுதலித்து அவர்கள் தரப்பின் நியாயபூர்வ குரலை பலவீனப்படுத்தி பொறிகளை விரிப்பதாக அமைந்தால் முற்றியுள்ள முரண்பாடு தணிவதற்குப் பதிலாக மீண்டும் பூதாகரமாக வெடிப்பதற்கே வழி வகுக்கும்.

உயர் பாதுகாப்பு வலய விவகாரம் இத்தகைய ஒரு அச்சத்தைக் கிளப்பி தாய்லாந்து பேச்சில் வைத்து இப்பொழுது சற்று தணிக்கப்பட்டுள்ளது.

இதுவரை நடந்த பேச்சு அரங்கில் விடுதலைப்புலிகள் மக்களின் அன்றாட அவசிய தேவைகளுக்கே முக்கியத்துவமளித்திருந்தனர். அதற்கு அரசாங்கம் உடன்பட்டு இணக்கம் கண்டதன் அடிப்படையில் பேச்சில் ஒரு முன்னேற்றத்தொனி இருப்பதான தோற்றப்பாடு உணரப்பட்டது. அதைத் தொடர்ந்து சமநேரத்தில் அரசியல் தீர்வு பற்றியும் ஆராய புலிகள் சம்மதம் தெரிவித்தனர்.

இதனடிப்படையில் பேச்சு அரங்கில் மக்களின் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு புனரமைப்பு, அரசியல் தீர்வு எனும் முப் பிரிவுகளாக இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உபகுழுக்களை அமைப்பதென நோர்வேப் பேச்சின் போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஆனால் உயர் பாதுகாப்பு வலயம் பற்றி ஆராய்ந்து மக்களின் மீள் குடியேற்றத்தை சாத்தியப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட உபகுழுவில் இராணுவத்தரப்பு அதற்கான தனது அதிகாரங்களை அகட்டிச் செய்படத் தொடங்கியது.

உண்மையில் பேச்சுவார்த்தை மேசையில் எடுக்கப்பட்ட அரசியல் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான



ஆனால் இராணுவத்தரப்பு நடைமுறைச் செயற்திட்டம் என்ற கோதாவில் பேச்சுவார்த்தை மேசையில் எடுக்கப்பட்ட அரசியல் தீர்மானங்களுக்கு மேலான அதி முக்கியத்துவமான அரசியல் தீர்மானங்களை எடுத்தது. அதற்கான அதிகாரம் தன்னிடமே இருப்பதாக அது தோற்றப் படுத்தியது.

உயர்பாதுகாப்பு வலயத்தை படிப்படியாகக் குறைத்து மக்களை மீளக்குடியேற்றுவதென்று பேச்சில் ஒப்புக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்பு அதனை நடைமுறைப்படுத்தும் உபகுழுவில் அதற்காகப் புலிகள் ஆயுதங்களை வைக்க வேண்டும்

**பிரவீன்**

என நிபந்தனை இடும் அரசியல் அதிகாரம் எவ்வாறு உபகுழுவில் இராணுவத்திடம் இருக்கமுடியும்.

இத்தகைய முரண்நிலையை எவ்வாறு கண்காணிப்புக் குழு ஆதரித்து அறிக்கைவிட முடியும்?

இத்தீர்மானங்கள், இணக்கம் காணப்பட்டதற்கு முரணாக ஒடுக்கப்பட்ட மக்களின் அவசர வாழ்வியல் பிரச்சினைகளுக்கு அபத்தமான பதிலாக அமையும் போது பேச்சுவார்த்தை அரங்கில் பேச்சு அடுத்த கட்டத்திற்கு நகர்த்தப்படுமானால் மக்கள் தமது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்புதல் என்ற மனிதாபிமானப் பிரச்சினை இரண்டாம் நிலைப் படுத்தப்பட்டுவிடும்.

அரசியல் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரங்களை இராணும் கொண்டிருக்கும் போது உபகுழுவில் வைத்து இப் பிரச்சினை தொடர்ந்து அணுகப் படுமானால் மக்கள் தமது சொந்த வாழ்விடங்களுக்கு

மக்களின் பிரதிநிகளாகப் புலிகள் இவ்விவகாரத்தை உபகுழுவில் விட்டு பேச்சை மறுகட்டத்திற்கு முன்னேற்ற முடியாது. முன்னேற்றவும் கூடாது.

விடுதலைப்புலிகள் இராணுவத்தின் இந்த அதிகாரநிலைப்பாடு தொடர்பாக பலமுறை வலியுறுத்தியிருந்த போதும் பலனேதுமளிக்கவில்லை.

இப்போது மீள்குடியேற்றப் பிரச்சினை பேச்சுவார்த்தை மேசையில் இப்போதைக்கு மையப்பொருளாக மீண்டும் எடுக்கப்பட வேண்டியதாயிற்று. உயர் பாதுகாப்பு வலய உப குழுவும் நிறுத்தப்படவேண்டியதாயிற்று.

இத்தகைய இப் பின்னோக்கிய பாய்ச்சல் சமாதான முயற்சிக்கு ஏற்பட்ட ஒரு தேக்கம் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஆனால் பின்னோக்கிய இப் பாய்ச்சல் நிகழாமல் சமாதானத்திற்கு ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து அதன் ஆயுளை நீட்டுவதென்பது கடினமானதொன்றாகவே இருந்திருக்கும்.

இறுதியாக தாய்லாந்தில் மீண்டும் இது தொடர்பான அரசியல் தீர்மானங்களைப் பேச்சுவார்த்தை மேசையில் வைத்து எடுப்பதென்ற இணக்கப்பாடு சமாதான முயற்சியின், ஆரோக்கியத்தை மட்டுமல்ல அதன் ஆயுளுக்கெழுந்த அச்சுறுத்தலையும் சற்றுத் தளர்த்தி விட்டிருக்கிறது.

இந்த இணக்கப்பாடு அவசியமானது. குறைந்த பட்சம் அரசு மீது தமிழ் மக்கள் பேச்சின் முன்னேற்றமற்ற தேக்க நிலை ஒன்று ஏற்பட்டது பற்றி அதிருப்தி அடைந்தாலும் அரசு மீது சந்தேகக்கண் கொள்ளாது, நம்பிக்கை இழக்காது இருப்பதற்காயினும் அவசியமானது.



# திருகோணமலையில் எழாத சுற்றுலாத்துறை

தமிழா தாயகத்தின் முக்கியமான உல்லாசப் பயணத்தலம் திருகோணமலை. அங்கு ஏராளமான வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் வருகை புரிவர். இதனால் அது ஒரு தொழில்த் துறையாக வளர்ச்சி பெற்றிருந்தது.


கடந்த காலப் 'போரால் - உல்லாசப்பயணத்தலங்கள் சிறிலங்கா இராணுவப் பிரசன்னத்துக்குட்பட்டிருந்தன.

குறிப்பாக பிரெட்றிக் கோட்டை, புறாத்தீவு, நிலாவெளி, கன்னியாய் ஆகியன முக்கிய தலங்களாகும் இன்னமும் அங்கு இராணுவ பிரசன்னமும் கெடுபிடியும். உள்ளது.

பிரெட்றிக் கோட்டைக்குள் நுழையும் சகலரும் வாசலில் படையினரால் மறித்து பதிவு செய்யப்படுகின்றனர்.

கோட்டை வாசலில் இராணுவச்சிப்பாய் ஒருவர் நிற்கிறார். பழையகால ஐரோப்பிய கோட்டை நுழைவாயில் பீரங்கிகளுடன் நிற்க அந்தவாசலை உல்லாசப்பயணிகள் படம் பிடிக்க தடைசெய்யப்படுகின்றது.

கோணேசர் ஆலயத்துக்கு 200மீற்றர் தூரம்வரை - வீதியின் இரு



திருகோணமலை அலெக்ஸ் தோட்டப்பகுதியில் உள்ள முதற்தர உல்லாச விடுதியான 'ஓசனிக் ஹோட்டல்' பகுதியில் இராணுவத்தினர் ரோந்து செல்லும் காட்சி.

புறவீதிகளிலும் இராணுவ முகாம்கள், 2ம் கஜபாகு படைப்பிரிவு தலைமையகம் என்பன உள்ளன. இந்தப் பகுதிகளில் மான்கள் கூட்டம் கூட்டமாக ஓடித்திரிகின்றன. ஆனால் அவற்றை இராணுவ முகாமைக் காரணம் காட்டி படம் பிடிக்கத்தடை செய்யப்பட்டுள்ளது.

கோணேசர் ஆலயத்தை பொறுத்தவரை அதனருகே தொலைத்தொடர்பு கோபுரம் கட்டப்பட்ட அருள் மலை - ஆலயத்தின் ஒரு பகுதியாக உள்ளது. அதில் சென்று வழிபடலும் - அதில் ஏறி நின்று - கோணேசர் ஆலயத்தினை, சூழவுள்ள அமைதியான கடலைப்பார்ப்பது சுவாரஸ்யமான ஒன்று. ஆனால் அந்த மலையின் படிக்கட்டு வாசலில் முட்கம்பிச்சுருள் போடப்பட்டு எவரும் செல்லக்கூடாது என படையினர் தடை விதித்துள்ளனர். கோணேசர் கோவில் தீர்த்தமான பாவநாசம் - சுனைக்கு செல்லவும் முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. திருவிழாவின் போது மட்டும் பூசகர் அங்கு செல்லலாம் அது மட்டுமல்லாது - புதிதாக ஒரு பௌத்த விகாரைபாரிய உயரமான புத்தர்சிலை என்பன கோணேசர் மலைப்பகுதியில் நிர்மாணிக்கப் பட்டுள்ளது. தொலைவிலிருந்து கோணேசர் மலையப்பார்த்தால் முதன்மையாக பிரகாசமாகத் தெரிவது - வெள்ளைநிற புத்தர்சிலையும், விகாரையுமாகும். இது கோணேசரின் பண்பாட்டுச்சூழலை குழப்புவதாகும்.

வரலாற்றுச் சிறப்புமிகு பிரெட்றிக் கோட்டையும், கோணேசர் ஆலயமும். இராணுவ முட்கம்பி சுருள்களுக்கு மத்தியில் முகாம்களுக்கு மத்தியில் இருக்கையில் உல்லாசப்பயணிகள் எப்படிச் செல்லமுடியும்.

குறிப்பாக இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். புரிந்துணர்வு உடன்பாட்டின் பின் பெருமளவில் சிங்கள மக்கள் கோவிலுக்கு வந்து போவதாகவும், ஆனால் இராணுவ அச்சத்தால் தமிழர்களின் வருகை குறிப்பிடக்கூடிய அளவுக்கு அதிகரிக்கவில்லை என்றும் - கோவில் பூசகர் தெரிவித்துள்ளார்.

கன்னியாய் என்ற மற்றொரு தலம் - வெந்நீரூற்றுகளால் சிறப்புப் பெற்றது. இராணுவமுகாம் ஒன்றின் காவலுடன் அது உள்ளது. இதன ருகே தான் 'வெல்கம் விகாரை' என்ற பழைய விகாரை உள்ளது.

கன்னியாயை ஒரு சிங்கள பௌத்தமையமாக மாற்றும் வகையில் -அப்பகுதியில் படையினரால் அழிக்கப்பட்ட நிலையில் சைவக் கோவில் ஒன்று மீளக்கட்டப்பட ஆயத்தமாக அங்கு தொல்கட்டுமான செங்கற்கள் எடுக்கப்பட்டன. அதைக் கேள்வியுற்ற பௌத்த பிக்கு ஒருவர் அது பௌத்த விகாரைக்குரியதென பிரகடனம் செய்து - அதன் கட்டுமாணத்தை அரச அதிபரின் உத்தரவின் பேரில் நிறுத்தி விட்டார்.

கன்னியாயை - முழுச்சிங்கள பூமியாக்க பிக்குகள் முயற்சிகளை துரிதமாக மேற்கொள்கின்றனர். (பௌத்தம் இருக்கும் இடமெல்லாம் சிங்களவருடைய தல்ல ஒரு கால கட்டத்தில் பௌத்தம் - தமிழர்களால் தமிழகத்திலும், ஈழத்திலும் மிகத் தீவிரமாக கடைப்பிடிக்கப்பட்டது வரலாற்றில் உறுதி செய்யப்பட்ட உண்மையாகும்.)

**த.அறிவன்**

அடுத்த தலம் நிலாவெளி வனப்பான கரையோரத்தால் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடம் நிலாவெளி. நிலாவெளியில சிறிலங்காப் படையினர் உயர்பாதுகாப்பு வலயத்தை வைத்திருக்கின்ற காரணத்தால் - சிங்கள மக்களைத் தவிர ஏனைய உல்லாசப்பயணிகள் வரக்கூடிய இடமாகவில்லை.

திருகோணமலையில் சுற்றுலாத் துறை அதிக வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதாகும். அது ஒரு தொழிற் துறையாக உள்ளது.

இந்த தொழிற்துறையில் பல ஆயிரக்கணக்கான மக்கள் ஈடுபட்டிருந்தனர்.உப்புவெளி,அலெக்ஸ் தோட்டப்பகுதிகளில் - உல்லாசப் பயணிகளுக்காக பெரும் எண்ணிக்கையில் விடுதிகள் உள்ளன. இவையாவும் வெறிச் சோடிக் கிடக்கின்றன. அவற்றை நம்பி தொழில் புரிந்த மக்கள் முடங்கிக் கிடக்கின்றனர்.

'ஹொட்டேல்கிளப் ஒசெனிக்' இது திருகோணமலை அலெக்ஸ் தோட்டத்தில் உள்ளது. திருகோணமலையின் முதற்தர உல்லாசப் பயணிகள் தங்கு விடுதி இதுவாகும். மிகப்பெரிய கட்டடம், நீச்சல்தடாகம், கடற்கரை என்பவற்றை உள்ளடக்கி சர்வதேச தரத்திலுள்ள ஒசெனிக் விடுதி - 'ஜோன் கீல்ஸ்' என்ற சர்வதேச நிறுவனத்தினுடையதாகும்.

கடந்த காலங்களில் படை முகாமாக இது இருந்தது. இப்பொழுது அது நிர்வாகத்தால் மீட்கப்பட்டு விட்டது. ஆனால் அதனருகே சிறிலங்கா இராணுவ முகாம் உள்ளது. இராணுவத்தினர் தமது ரோந்து நடவடிக்கைகளை இந்த விடுதி வளாகத்துள்ளால் மேற்கொள்கின்றனர்.

இந்த நிலையில் எப்படி திருகோணமலைக்கு உல்லாசப்பயணிகள் அதிகரிக்கும். எப்படி அந்த தொழிற்துறையில் மக்கள் விருத்தியடைவர்.

புறாத்தீவு என்ற பாறைத்தீவுக்கு உல்லாசப்பயணிகளை கொண்டு செல்வதையே தொழிலாக கொண்டோர் முடங்கிக் கிடக்கின்றனர். சுற்றுலாத்துறைத் தொழிலாளர்கள் முடங்கிக் கிடக்கின்றனர்.

தெற்கில் இராணுவபிரசன்னங்கள் இல்லாத நிலையில் சுற்றுலாத்துறை பெரிய வருமானத்தை ஈட்டிக் கொடுத்து கொண்டிருக்கிறது.

திருகோணமலையில்.......?

# அழகிய கனிதான் இனியுமா?

(1) பல இடங்களில் சில உத்தியோகத்தர்கள் எரிந்து விழுவதை நீங்களெல்லோரும் பார்த்திருப்பீர்கள். சில உத்தியோகத்தர்களிடம் கடிவாங்கிய அனுபவங்களும் உங்களுக்கிருக்கலாம். சில அலுவலகங்களில் வேலைசெய்வோர் உங்களை 'நடத்தும்' விதத்தையும் மிகக் கசப்புடன், எரிச்சலுடன், கோபத்துடன் உணர்ந்திருப்பீர்கள்.

'என்ன செய்வது எல்லாம் காலம்தான்' என்று யார்யாரையோவெல்லாம் நினைத்து மனம் புழுங்கிக் கொள்கிறீர்கள். 'வேறு என்னதான் செய்யமுடியும்' என்று உங்களுக்குள்ளேயே கேட்டுக் கொள்கிறீர்கள்.

ஆனால், இப்படியாக நீண்டு விரிந்து, முடிவற்றுச் செல்லும் இத்தகைய 'நடத்தை' களின் பின்னே மக்களிடம் ஒரு மனநிலை உருவாகி வருவது மட்டும் உண்மை. இவ்வாறானவர்களின் மீதான மதிப்பின்மையே அது.

உடனடியாக இத்தகைய நடத்தைகளுக்கு, மதியாமை களுக்கு சாதாரண மனிதர்களால் எந்தத்தீர்வையுமோ மாற்றத்தையுமோ கொண்டு வந்துவிட முடியாத அளவுக்குத் தான் நிலைமைகளுமிருக்கின்றன.

பதவியும் அதிகாரமும் பிறவசதிகளும் இத்தகையவர் களைச் சிலகாலம் காப்பாற்றி விடுகிறது. ஆனால் நிரந்தர மாகவல்ல.

(2)

இப்போது இப்படி அதிகாரமாக, அலட்சியமாக, உதாசீனப்படுத்துவதாக நடந்து கொள்பவர்களில் பலரும் இந்தப்பதவிகளைப் பிடிப்பதற்கு முன்பு மிகச்சாதாரணமாக நடந்து கொண்டவர்களே. இன்னும் சொல்வதானால் தமக்கொரு வேலை



வாய்ப்பு மட்டும் கிடைத்தால் போதும்.மக்களுக்கு முழுமையாகச் சேவை செய்வோம் என்று கருதியிருந்தவர்களே.

ஏனென்றால் இவர்கள் வேலை தேடும் போதும் பிற தேவைகளுக்காக உத்தியோகத்தர்களை நாடும் போதும் அவர்களிடம் பெற்ற கசப்பான அனுபவங்கள் இவர்களை இப்படி நினைக்கத் தூண்டியது. ஆனால் வேலை கிடைத்து விட்டால், 'பிடி' உறுதியாகி விட்டால் பிறகென்ன 'அதிகாரப் போதை' யும் தலைக்கேறி விடுகிறது.

(3)

உத்தியோகமொன்றைப் பெறுவதற்காக அல்லது புதவியொன்றைப் பிடித்துவிடுவதற்காக சேவையாளர்களாகவே பலரும் தம்மைக்காட்டிக் கொள்கிறார்கள்.

சம்பளமோ, பிற உதவிகள் சலுகைகளோ கூட இல்லாமல் பல இடங்களிலும் தொண்டர்களாகவும் சேவையாளர்களாகவும் இணைந்து பலரும் பணிசெய்யத் தொடங்குகிறார்கள்.

பாடசாலைகளில், மருத்துவமனைகளில் மற்றும் பல அலுவலகங்களிலும், நிறுவனங் களிலும், அமைப்புகளிலும் இதை நீங்கள் அவதானிக்கலாம். இங்கெல்லாம் இந்தச் சேவையாளர்கள் பெருகியிருக்கிறார்கள். இதில் பலர் உண்மையான விசுவாசமான மனிதநேயமுடைய சேவையாளர்களாகவும் இருக்கிறார்கள்.

மொத்தமாகப் பார்த்தால் தொண்டர்களாகவோ இலவசச் சேவையாளர்களாகவோ இருந்து முழுமையாகப் பலர் பணியாற்றுகிறார்கள் என்று கூடச் சொல்லலாம்.

குறிப்பாகச் சொல்வதென்றால் நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர், உத்தியோகத்தரை விட வேதனம் பெற்று ஊழியம் செய்வோரைவிட தொண்டராக இருப்போர் செய்யும் சேவை அதிகம் எனலாம். இதில் பொது மக்கள்அன்பாக நடத்தப்படுகிறார்கள். விவரங்கள், விளக்கங்கள் தெளிவு படுத்தப்படுகின்றன. அத்துடன் ஒரு உறவுத்தன்மை மலர்வதையும் அவதானிக்க முடியும்.

தொண்டர் அல்லது இலவசச் சேவையாளர்கள் தங்களின் பணியுடன் நிரந்தர உத்தியோகத் தர்களோ ஊழியர்களோ பணிக்கும் வேலைகளையும் 'மிகப்பயபக்தி'யுடன் செய்கிறார்கள். அப்படிச் செய்ய வேண்டியுமுள்ளது. (அப்படியொரு நிலை உருவாகியுள்ளது நமது சூழலில் என்பது கவனிக்கப்பட வேண்டியது)

**வெளிவாசல் பாலன்**

இப்படிக் கூடுதலான சேவையை, விசுவாசமான பணியைச் செய்யும் இந்தத் தொண்டர்களின் மீது அல்லது இலவசச் சேவையாளர்களின் மேல் பொதுமக்களுக்கு நிறைய விருப்பமும் ஏற்பட்டு விடுகிறது.

ஊதியம் - பெறுவோர் அதிகாரத்துடன் நடக்கையில் அவர்களைவிட ஊதியம் பெறாமலே நிறையச் சேவைகளை அன்பிணைப்புடன் செய்யும் இந்தப் பணியாளர்களின் மீது ஒருவித நல்ல அபிப்பிராயம் மக்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. அதேவேளையில் இவர்களின் பிரதியுபகாரமற்ற அர்ப்பணிப்பு மக்களை ஈர்ப்புக்குள்ளாக்கி இவர்களின் மீதான மதிப்புப் பெறுமானத்தை உயர்த்தியும் விடுகிறது.

இப்படியிப்படி இவர்களுக்கான ஆதரவும், மதிப்பும் இவர்களின் மீதான கவனிப்பும் மக்களிடம் வளர்ந்து கொண்டே வருகிறது. தமது சேவைகளின்போது இந்தத் தொண்டர்களும் தம்மால் முடிந்தளவுக்கும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தியே பாடுபடுகிறார்கள். மக்களுடன் அன்பாகப் பழகுகிறார்கள். விடுமுறை நாட்களைக் குறைத்தே எடுக்கிறார்கள். எந்த வேலையென்றாலும் பரவாயில்லை 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதாக ஓடியோடிப் பாடுபடுகிறார்கள்.

ஆனால்-

அவர்களுக்கு அதாவது இந்தத் தொண்டர்கள் அல்லது சேவையாளர்களுக்கு ஒரு உத்தியோகமோ அன்றிப் பதவியொன்றோ நிரந்தரமாக உத்திரவாதமாகக் கிடைத்து விடுகின்ற போது எல்லாமே தலை கீழாக மாறிவிடும் சந்தர்பங்கள் அதிகமாகவுள்ளன.

பெரும்பாலானவர்கள் உத்தியோக உத்திரவாதம் கிட்டும் வரை பெட்டிப்பாம்பாக இருந்துவிட்டு அவர்களுடைய 'பிடி' சரியென்று உறுதிப்பட்டு விட்டாறபோதும் பிறகு 'அதிகாரம்', 'அலட்சிய மனோபாவம்' எல்லாம் எங்கிருந்தோ வந்து குதித்துக் கூத்தாடத் தொடங்கி விடுகிறது.

"தள்ளிநில்"

"அங்காலே போ"

"சொன்னது விளங்கவில்லையா"

"இதுக்கு மேல சொல்லமுடியாது"

"இதோட முடிஞ்சுது"

"எங்களுக்கு இதுக்குமேல தெரியாது"

"போய் மேல விசாரிச்சுப் பாருங்கோ"

என்ற மாதிரி சில Trade வார்த்தைகளைக் கைவசம் வைத்துக் கொண்டு பெரும்தர்பாரையே நடத்தி விடுகிறார்கள். அட இந்தப்பாம்புதானா முன்பு அப்படி 'அன்பின் விளை முகமாக' இருந்தது என்ற ஆச்சரியம் பலரையும் பிடித்துலுப்பியிருக்கிறது.

முன்பு அன்பாக நடந்தவர்கள் பின்பு 'பிடி' கிடைத்தவுடன் பாராமுகமாகவே, தெரியா உறவாகவே தட்டிக்கழித்து வெட்டிப்போய் விடுகிறார்கள்.

ஏன் இப்படி நடக்கிறது?

(4)

படித்துவிட்டு வேலைக்காகக் காத்திருப்போருடன் பேசிப்பாருங்கள்.

எந்த வேலை கிடைத்தாலும் செய்வேன் என்பார்கள். அதிலும் அந்தவேலையை ஆத்மசுத்தியுடன் மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு செய்வேன் என்று சொல்வார்கள். ஏற்கனவே அதிகாரத்திலிருப்பவர்கள் (சகல இடங்களிலும்) பலர் மக்களை மதிப்பதில்லை, சேவையை ஒழுங்காகச் செய்வதில்லை என்பதால் பதிலாகத்தாம் ஒரு முன்மாதிரியாகச் சேவை செய்து காட்டுவோம் என்பார்கள்.

ஏனெனில் அப்போது இவர்கள் சாதாரண பொது மக்கள். பாதிப்பும் அலைச்சலும், கஸ்ரங்களும் இவர்களுக்குண்டு. அவை இவர்களை நேரடியாகப் பாதிக்கின்றன. எனவே இப்படியான எண்ணத்துக்கும், தீர்மானத்துக்கும் வருகிறார்கள்.

பிறகு உத்தியோகம் கிடைத்து

(15ம்பக்கம் பார்க்க..)

# நறுக்கென...

## மகன்மார் தந்தையருக்கு ஆற்றும் உதவி...



**சிறிலங்காவின்** அமைச்சர்கள், அரசியல்வாதிகள் சிலர் அவர்களின் புத்திரசிகாமணிகளால் பெயர் பெற்றவர்களாக விளங்கிவருகிறார்கள். தந்தைமார் அரசியல் பிரமுகர்களாகவும், அமைச்சர்களாகவும் இருப்பதால் அவர்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி, அவர்களின் புதல்வர்கள் ஆடும்கூத்து அரசியல் உலகில்மட்டுமல்ல, அரசமரத்தடியில் கூட சிரிப்பாய் சிரித்துப் பேசப்படும் விடயமாகிவிட்டது.

கொஞ்சக் காலத்திற்கு முன்னர்...அதாவது கடந்த பொதுத்தேர்தலின் போது உடத்தலவின்ன பகுதியில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்கள் படுகொலை சம்பவங்களில் முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரின் - அதுதான் ரத்வத்தையாரின் புதல்வர்களான லொகான் ரத்வத்தை, சானக்க ரத்வத்தை ஆகியோர் குற்றம் சாட்டப்பட்டு தந்தையான 'ஜெனரலுடன்' பிணை மனுநிராகரிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

லொகான் ரத்வத்தை முன்னர் பப்புவா நியூகினியைச் சேர்ந்த 'றகர்' விளையாட்டு வீரரான 'ஜோயல்பெரா'வின் கொலையுடன் சம்பந்தப்பட்டு, பின் அப்போதைய அரசியல் செல்வாக்கினால் தப்பியவராவார்.

ரத்வத்தையின் மற்றொரு மகனான மகேன் ரத்வத்தை மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் கொலையுடனும் சம்பந்தப்பட்டவரென முன்னர் சந்தேகிக்கப்பட்டவர், அண்மையில் 'ஜிப்ஸி' இசைக்குழுவின் முன்னணிப் பாடகர் சுனில் பெரேராவை ஐந்து நட்சத்திர ஹோட்டல் விழாவொன்றில் வைத்து தாக்கினார். பின்னர் தந்தையும் மகனுமாய் பெரேராவின் வீடு தேடிப்போய் மன்னிப்புக் கேட்ட சம்பவம் பிரசித்தமானது.

மற்றொரு ஐந்து நட்சத்திர விடுதிச் சம்பவத்தில், அமைச்சர் S.P.திசநாயக்காவின் புத்திரபாக்கியங்களான நாரத மற்றும் விதுர திசநாயக்காக்கள் அமைச்சர் மகிந்த விஜேசேக்கராவின் புத்திரரான 'காஞ்சன' வுடன் சேர்ந்து மற்றொரு பிரமுகரின் மகனை தாக்கியுள்ளனர்.

ஹோட்டல்களில் குடித்து, வெறித்து, கூத்தாடி 'கொழுவல் எடுப்பதில்' இவர்கள் மூவரும் பெயர் பெற்றவர்கள்.

இதில் காஞ்சன விஜேசேக்கர தனது தந்தையின் மெய்பாதுகாவலர்களை - அமைச்சுப் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளை இரவு விடுதியொன்றிற்கு தனக்கு துணையாக வருமாறு கேட்டபோது அவர்கள் மறுத்ததால் தந்தையைக் கொண்டு அவர்களைப் பணியினின்றும் நீக்கிய உத்தமன்: இவை வெளிவந்தவை சிலவே....வெளி வராதவை பல...

தங்கள் பிள்ளைகளை நெறிப்படுத்த முடியாத இவர்கள் நாட்டை நெறிப்படுத்தும் அமைச்சர்களாக - 'அதிகௌரவ' மனிதர்களாக-உலாவருகின்றனர்.

பாவம் சிறிலங்கா மக்கள்.... பரிதாபம் சிறிலங்காவின் அரசியல்....

## சமாதானத்தை இலக்கு வைத்து வீழ்த்த சந்திரிகாவின் சதி...



**எது** எப்படி இருந்தாலும் சந்திரிகா நாளொரு மிரட்டலையும் பொழுதொரு அச்சுறுத்தலையும் விடுத்தவண்ணமேயுள்ளார்.

இது தான் இன்னமும் அதிகாரவலுவைக் கொண்ட நிறைவேற்று அதிகார சனாதிபதியாகவே உள்ளார் என்பதை தன் எதிரிகள் அனைவருக்கும் நினைவூட்டிக் கொண்டே இருப்பதற்கான ஒரு உத்தியேயாகும்.

விடுதலைப் புலிகளுக்கு வானொலி ஒலிபரப்புச் சாதனங்களை வழங்குவதில் நோர்வேயின் சிறிலங்காவுக்கான தூதுவர் பெரும் அக்கறையுடன் செயற்பட்டார் என்று குற்றம் சாட்டி அவரை - 'ஜோன் வெஸ்ற்பேர்க்கை' பதவியிலிருந்து விலக்க தனக்கு அதிகாரம் உண்டு - காரணங்களும் உண்டு என அண்மையில் அவர் விடுத்துள்ள அறிக்கையானது சமாதான நடவடிக்கைகளில் குழப்பத்தை ஏற்படுத்தும் மற்றுமோர் மூலோபாயத்தின் அடிப்படையில் அமைந்ததேயாகும்.

முன்னரும் ஒரு தடவை எரிக் சொல்ஹெய்ம் அவர்களின் விடயத்தில் இப்படித்தான் சந்திரிகா நடந்து கொண்டார்.

சமாதான முயற்சிகளில் இருந்து நீக்கப்பட்டதாக கூறி கும்மாளமடித்த சந்திரிகா-கதிர்காமர் கூட்டுக் கும்பல், ரணில் ஆட்சிபீடமேறியதும் மீண்டும் சமாதான முயற்சிகளுக்கான தனது செயற்பாடுகளைத் தொடங்கிய போது சந்திரிகாவால் எதுவுமே செய்ய முடியவில்லை - புலம்புவதைத் தவிர..... இப்போது வெஸ்ற்பேர்க் மீது பாயத் தொடங்கியுள்ளார்.

இதற்கிடையே வெஸ்ற் பேர்க்கும் இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளார் என்ற செய்தியும் வெளிவந்துள்ளது.

மீண்டும் ஒரு தடவை தனது மிரட்டல் நடவடிக்கை பலித்தமைக்காக சந்திரிகா கும்மாளமிடலாம்..

ஆனால் இதனால் சமாதான நகர்வுகள் இடைநிறுத்தப்படாது. இது அம்மணிக்கும் தெரியும்.

ஆகவே தான் இராணுவம் மற்றும் கடற்படையினரை வைத்து மற்றொரு வியூகத்தையும் அமைத்து வருகிறார். உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றக்கூடாது என்ற 'இராணுவத்தரப்பு' பிடிவாதத்தின் பின்னணியில் சரத் பொன்சேகா வெறும் அறிக்கை கொடுத்த தூதுவன் தான்.

அறிக்கையைத் தயாரித்தவர் அம்மையாரின் அருளாசி பெற்றவரான இராணுவத்தளபதி லயனல் பலகல்லே தான். சரத் பொன்சேகாவே இதனை பகிரங்கமாக்கி விட்டார். எப்படியோ சமாதானம் தோற்க வேண்டும் என்பதில் சந்திரிகா அழுங்குப்பிடியாகவே இருக்கிறார் என்பது தெளிவு.

- பாதுகாப்பு வலயப் பிரச்சினையை சமாதானப் புறாவை பொறிக்குள் சிக்கவைக்கும் ஒரு 'வலை' யாகவே சந்திரிகா கையாளத் தொடங்கியுள்ளார்.

- சமாதானத்திற்கான யுத்தம் நடத்தியது அந்தக் காலம். சமாதான எதிர்ப்பு யுத்தம் நடத்துவது இந்தக் காலம்.

## சந்திரிகாவுக்கு ராஜபக்ஷவின் எச்சரிக்கை அறிவுறுத்தல்...



**சிறிலங்காவின** சனாதிபதியைக் கொலைசெய்ய சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ஐக்கிய தேசிய முன்னணி அரசைச் சேர்ந்த சிலருடன் இணைந்து சதி செய்தார் எனக்குற்றம் சாட்டப்பட்ட,'மகிந்த ராஜபக்ஷ', சந்திரிகாவினால் இலக்கு வைத்து தாக்கப்படவுள்ள நபர்களில் முக்கியமானவராக உள்ளார்.

"எதிர்க்கட்சித் தலைவரையும் என்னால் நீக்கமுடியும், அவரது பதவியையும் பறிக்க முடியும்" என்று இன்னமும் அம்மையார் அறிக்கை விடவில்லையே தவிர மகிந்த ராஜபக்ஷவை கட்சியில் இருந்து ஓரங்கட்டவோ, அல்லது அவராகவே ஒதுங்கி ஓடச்செய்யவோ தேவையான அனைத்தையும் செய்தே வருகிறார்.

ஆனால் மகிந்தவும் அசைந்து கொடுப்பவராகத் தெரியவில்லை. அவர் கொஞ்சம் அசைந்தால் போதும் அநுரா அவரைத் தள்ளிவிட்டு எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்தில் அமர்ந்து கொள்வார் என்பதும் அவருக்குத் தெரியும்.

அதேபோல் தன்னை எப்படியாவது அகற்றிவிட ஜே.வி.பியும், மங்கள சமரவீரா போன்ற அநுராவின் பிற்பாட்டுக்காரர்களும் முனைந்து வருவதும் அவருக்குத் தெரியும். இதெல்லாம் தெரிந்தும் கூட அவர் அலட்டிக் கொள்ளாமல் இருப்பது தான் சந்திரிகாவுக்கு எரிச்சல்தரும் விடயமாகும்.

ஆனால் இந்த கொலைச் சதிப்பிரச்சினையின் பின்னர் ராஜபக்ஷ விழித்துக் கொண்டு விட்டார். குட்ட வேண்டிய இடத்தில் குட்ட வேண்டியது அவசியம் எனத் தெரிந்து கொண்டு செயற்படத் தொடங்கிவிட்டார் போல் தெரிகிறது.

சந்திரிகாவின் 'நிறைவேற்று அதிகார' மிரட்டலுக்கு ஒரு போடு போட்டுள்ளார். மக்களின் ஆதரவுடன் மட்டுமே நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த முடியுமே தவிர, அதனை மீறி அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தினால் எதிர்க்கட்சித் தலைவரான தான் உட்பட கட்சியின் ஆதரவாளர்கள் அனைவருமே நாட்டை விட்டுத் தப்பியோட வேண்டிய நிலை தான் ஏற்படும்' என அவர் சந்திரிகாவுக்கு முதற்தடவையாக ஒருகடும் எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அதனையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கிளையொன்றின் புனரமைப்பு கூட்டத்திலே வைத்தே கூறியுள்ளார்.

இதன் மூலம் சந்திரிகாவுக்கு வெறும் எச்சரிக்கையை மட்டுமல்ல ஒரு செய்தியையும் கூட விடுத்துள்ளார் என்றே கூறவேண்டும்.

வெறும் அதிகார பலம் மட்டும் போதாது.... அதிகாரத்தைப் பயன்படுத்தும் உரிமையை மக்களிடமிருந்து பெறவும் வேண்டும். இல்லையேல் மக்கள் ஓடஓட விரட்டி விடுவார்கள் என்பதே அதுவாகும்.

அம்மணியும் நாட்டைவிட்டு ஓடத் தயாரென்றால் அதிகாரபலத்தை பயன்படுத்தலாம். அப்படித்தானே ராஜபக்ஷ... நீங்கள் சொல்கிறீர்கள்!

## ஓர் அறிக்கையின் பின்னணியில்....



**கடைசியில** அந்தப் பெருஞ் சர்ச்சைக்குரியதான - உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான - அப்பகுதியில் பொதுமக்களின் மீள்குடியேற்றம் பற்றிய விவகாரம் சம்பந்தப்பட்ட இராணுவத்தரப்பு ஆலோசனைகள் அடங்கிய அறிக்கை பற்றிய ரகசியமும் வெளியாகிவிட்டது.

யாழ். குடாநாட்டுக்கான சிறிலங்காவின் இராணுவத் தளபதியால் கையளிக்கப்பட்ட அந்த அறிக்கையில் விபரிக்கப்பட்ட ஆலோசனைகளையும், விதிக்கப்பட்ட நிபந்தனைகளையும் விடுதலைப் புலிகள் முற்றாக நிராகரித்ததையடுத்து பிரச்சினை கடும் சிக்கலுக்குள்ளாகியது.

மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவினால் கையளிக்கப்பட்ட எழுத்துப் பிழைகளுடன் கூடியது என விமர்சிக்கப்படும் ஐந்து பக்கங்களைக் கொண்ட அந்த இராணுவத் தரப்பு ஆலோசனைகள் அடங்கிய அறிக்கையின் பிரதிகள் முதலில் முப்படைத் தளபதிகளுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோவுக்கும் அனுப்பப்பட்டதுடன் பின்னர் அதன் பிரதியொன்று விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பப்பட்டது.

இதனையடுத்து அந்த அறிக்கை மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவினால் தயாரிக்கப்பட்டதாகவே அனைவராலும் கருதப்பட்டது.

அந்த அறிக்கையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கையொப்பமோ, குறிப்போ இருக்கவில்லை. கையொப்பமில்லாத இந்த அறிக்கையை உறுதி செய்தது யார் என்ற கேள்விக்கு விடை எவருக்கும் தெரிவதாக இல்லை.

சரத் பொன்சேகா தான் இதனைத் தயாரித்தார் என்ற ஊகங்களுக்கு மத்தியில் தனி ஒரு இராணுவ அதிகாரியால் ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினை பற்றி முடிவு செய்து எப்படி அறிக்கையைக் கையளிக்க முடியும் என படைதரப்பு அதிகாரிகள் மத்தியில் கூட கடும் விமர்சனங்கள் எழுந்ததையடுத்து -

'அந்த அறிக்கையை நான் தயாரிக்கவில்லை பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோவும், இராணுவத் தளபதி லயனல் பலகல்லேயும் தான் தயாரித்தார்கள் அதற்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை...அதனை கையளிக்கும் வேலையை மட்டுமே நான் செய்தேன்... என்மீது வீண் பழி சுமத்தப்படுகிறது' என்று மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பொன்சேகாவின் இந்தவாக்கு மூலம் ஒரு நாடகத்தின் இரகசியத்தை வெளிக் கொணர்ந்துள்ளது.

ஒஸ்ரினே அறிக்கையைத் தயாரித்து விட்டு, 'அவரிடமே' அந்த அறிக்கையை கையளிக்க பொன் சேகாவை பயன்படுத்தியது ஒரு நாடகமல்லாமல் வேறென்ன?

'எதுவானாலும் இந்த அறிக்கை இராணுவத்தரப்பு அறிக்கை மட்டுமே... இது அரசின் முடிவல்ல' என்று அமைச்சர் பீரிஸ் சொல்வதை எப்படி நம்புவதாம்? ஒஸ்ரின் அரசின் பிரதிநிதியல்லவா?!

செங்குட்டுவன்

அன்பினால் சிங்கத்தின் மீசையைப் பிடுங்க முடியும். - அரேபியப் பழமொழி

# போர் குறித்த சிந்தனையின் வெளிப்பாடாகவுள்ள இராணுவத்தின் படைவலுச்சமநிலைக் கோட்பாடு...

**ஈழத்தமிழர்களுக்கு** சிறிது காலத்திற்கு முன்பு மிக அவசியமாகத் தேவைப்பட்ட செயற்பாடு பற்றி வலியுறுத்தப்பட்டது. அப்போது யாழ்ப்பாணத்தில் அதனை வரிந்து கட்டிக் கொண்டு எதிர்த்தவர்கள் இருந்தார்கள்; அது ஒட்டு மொத்தக் குடாநாட்டுத் தமிழர்களினதும் எதிர்ப்பாக இருக்கவில்லை; புலிகளுக்கு விரோத மாகவும் பேரினவாதக் கட்சிகளை அடிவருடுவதுமான கொள்கைகளைக் கடைப்பிடித்த சிலரே அந்த எதிர்ப்பைக் காட்டினார்கள்.

ஆனால், இப்போது அதே கருத்தை - தேவை மிக அவசியமானதொன்று எனக் கூறத் தொடங்கி விட்டார்கள் இந்தத் தரப்பினர். அது வேறொன்றுமில்லை, படைவலுச் சமநிலை சீர்குலைக்கப்படக் கூடாது என்ற விடயம் தான்.

**சனநாயக சூழல் என்ற ஒரு கருத்தாயுதத்தை வைத்துக் கொண்டு தமது முன்னைய கொலைக்கரங்களுக்கு கையுறை போட்டுக் கொள்ள முயன்றார்கள். இப்போது அந்த சனநாயக பாதுகாப்புக்கு படைவலுச் சமநிலைஅவசியமானது என்றார்கள். எல்லாவிடயங்களையும் தர்க்கரீதியாகப் பேசுவதென்பது சரிதான். சிலவேளைகளில் தர்க்க விவாதம் படுபாதகமாகப் போய் விடுவது பற்றியும் யோசிக்க வேண்டும்.**

ஈழத்தமிழினம் முழுவதுமே பேரினவாதப் போரின் பீரங்கி வாய்களுக்குத் தீனியாகும் கட்டம் மிக அண்மைக் காலம்வரை ஏற்பட்டிருந்தது. குறிப்பாக மிகப் பெரிய யாழ்ப்பாண இடம் பெயர்வும் அதனைத் தொடர்ந்து சிறிலங்கா அரசு மேற்கொண்ட தொடர்ச்சியான படையெடுப்புகளும் மரணவாசலைத் தமிழர்களுக்குத் திறந்து விட்டிருந்தன.

அப்போதே வன்னியைத் தளமாகக் கொண்டிருந்த புலிகள் படைவலுச் சமநிலை பேணப்படுவதன் மூலமே சமாதானத்தைக் கொண்டுவர முடியும் எனவும் அதற்காகத் தமது படையணிகள் பலப்படுத் தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி வந்தார்கள்; அதற்கான செயற்பாடுகளில் மக்கள் முன்வந்து பங்கெடுத்துக் கொண்டும் இருந்தார்கள்.

அந்தவேளை யாழ்ப்பாண மக்கள் கையாலாகாத நிலைக்குத் தள்ளப்பட்ட போது இந்த எதிர்ச் சக்திகள் படைவலுச் சமநிலை தேவையற்றது; சாத்தியமற்றது; மிக விபரீதமான விளைவுகளைக் கொண்டு வரும் எனக் கொக்கரித்தன. அது பற்றி சிந்தனைகளில் இருந்து மக்களைத் திசைதிருப்ப இயன்ற வழிகளில் எல்லாம் பாடுபட்டன.

ஆனாலும் அவர்கள் நினைத்ததற்கு மாறாக விடுதலைப் புலிகள் நினைத்தது நடந்தேறியது; எந்த விபரீத விளைவுகளும் ஏற்படாது தமிழர் தரப்பு இராணுவச் சாதனைகளை நிகழ்த்தி பேரம் பேசும் வலுவையும் பெற்று விட்டமை இந்தச் சக்திகளின் போலி முகங்களை மிகத் துலக்கமாக அம்பலப்படுத்தியது போலாகி விட்டது.

இப்போது அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களின் ஒரு கட்டமாக உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி யாழ் குடாநாட்டில் இடம் பெயர்ந்துள்ள மக்களை மீளக் குடியமர்த்துதல் பற்றிய விவாதம் எழுந்துள்ளது. சிறிலங்கா படைத்தரப்பு கடுமையான நிபந்தனைகளை விதித்தது. அது பற்றிய காரசாரமான கருத்துக்கள் மோதும் நிலையில் சர்வதேசப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கை வெளியாகியுள்ளது.

அது தனது அறிக்கையில் படைச் சமநிலை என்பது யுத்தநிறுத்தத்தின் அடிப்படையிலானது. அந்தப் படைச்சம நிலைக்கு இடையூறு செய்வது யுத்த நிறுத்த உடன்படிக்கையை குழப்புவதாகும்... முற்று முழுதாக உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதற்கு இன்னமும் காலம் கனிந்து விடவில்லை என்று கூறியுள்ளது. இதனை இவர்கள் பிடித்துக் கொண்டு விட்டார்கள்.

எப்படி படைவலுச் சமநிலையைப் பாதிக்கும் நடவடிக்கையை மேற் கொள்ளுமாறு புலிகள் வலியுறுத்தலாம்? அப்படிச் செய்து சமாதானம், இப்போதுள்ள அமைதி எல்லாமே சீர்குலைந்து பதற்ற நிலை தோன்றி விடுவதா? என்று இவர்கள் பேசத் தொடங்கியுள்ளார்கள். சர்வதேசப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவே நடு நிலையில் நின்று தீர்ப்பு வழங்கியிருக்கும் போது அதை ஏற்கத்தானே வேண்டும் என்று பிரலாபிக்கிறார்கள்.



படைவலுச் சமநிலையை மிகக் கரிசனையோடு ஆதரித்துப் பேசும் இவர்களிடம் முன்னர் ஏன் அதை எதித்தீர்கள் எனக் கேட்டால் என்ன சொல்வார்கள்? முன்னர் புலிகள் தானே படைவலுச் சமநிலை வேண்டும் என்று பிரச்சாரம் செய்தார்கள். பின்பு ஏன் இப்போது ஏற்க மறுக்கிறார்கள்? என்று தான் கேட்பார்கள்; கேட்கிறார்கள்.

இந்தக் கருத்தினர் பொது இடமொன்றில் இவ்வாறே விவாதித்தார்கள். அப்படியானால் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது என்பது தேவையற்றது தானா என்று கேட்டேன்.

அப்பகுதியில் இருந்து படையினர் வெளியேறினாலும் கூட அங்கு குடியிருக்க யாரும் இல்லையே, எல்லோரும் தென்னிலங்கையிலும், வெளிநாடுகளிலும் குடியேறி விட்டார்கள் என்று ஒரு சப்பைக் கட்டுக் கட்டினார்கள். புலி எதிர்ப்பையே கொள்கையாக வரித்துக் கொண்டவர்களோடு பேசிப் பயனில்லை என்பது விளங்கியது. இத்தனைக்கும் தம்மை கல்வியாளர்கள், போதனையாளர்கள் என்று சொல்லிக் கொள்ளும் அவர்கள் யாழ்ப்பாணத்தில் குடியிருப்புக்காக பிரச்சினைக்குள்ளாகும் மக்களைப் பற்றி அறியவில்லையா என்பது புரியவில்லை.

இன்னும் சற்றே சில நாள்கள் முன்நோக்கி அவர்களது கருத்துக்களைப் பார்த்தால் - கொள்கையே தீவிர புலி எதிர்ப்புத் தான் என்பதும் மக்களின் வாழ்க்கை பற்றிக் கவலை இல்லை என்பதும் புலப்படும். சிறிலங்கா சனாதிபதியும் அவரது கட்சி சார்ந்தோரும் சமாதான முயற்சிகள் முன் னேற்றம் அடைவற்கு ஆதாரமாக புலிகள் தம்வசமுள்ள கனரக ஆயுதங்களை ஒப்படைக்கத் தொடங்க வேண்டும் என்று கூறியிருந்தனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீள் குடியேற அனுமதிப்பது தொடர்பான நிபந்தனைகளில் ஒன்றாக யாழ். பிராந்தியக் கட்டளைத் தளபதியும் இதனை வலியுறுத்தியிருந்தார். உடனேயே அதனை ஆதரித்து இந்தச் சக்திகள் பேசிய போது படைவலுச்சமநிலை பற்றி கவலைப்படவே இல்லை.

**ஞாபகன்**

சனநாயக சூழல் என்ற ஒரு கருத்தாயுதத்தை வைத்துக் கொண்டு தமது முன்னைய கொலைக்கரங்களுக்கு கையுறை போட்டுக் கொள்ளமுயன்றார்கள்; இப்போது அந்த சனநாயக பாதுகாப்புக்கு படைவலுச் சமநிலை அவசியமானது என்றார்கள். எல்லா விடயங்களையும் தர்க்க ரீதியாகப் பேசுவதென்பது சரிதான். சில வேளைகளில் தர்க்க விவாதம் படுபாதகமாகப் போய் விடுவது பற்றியும் யோசிக்க வேண்டும்.

சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பு. நடு நிலைமை வகித்து நிலைமைகளை விளக்குவது ஆலோசனைகூறுவது என்பன அதன் இப்போதைய கடப்பாடுகளாக உள்ளன. அது தனது இக் கொள்கைப்படி மேற்கண்ட படைவலுச் சமநிலை என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறது.

யுத்த நிறுத்தத்தின் அடிப்படையாக படைவலுச் சமநிலை பேணப்பட வேண்டும் என்பது அதனது நோக்கு நிலையில் சரியாக இருப்பது தமிழ் மக்களின் அவல வாழ்வுக்கு பொருத்தப்பாடாகவில்லை - என்பது தான் பிரதானமானது. இதுவரை காலமும் புலிகள் மேற்கொண்ட போரோ சமாதான மோ அதன் பிரதான அடிப்படை தமிழ்மக்களின் இயல்பு வாழ்க்கை மீளமைதலே ஆகும். அதனை மறுதலித்த படைவலுச் சமநிலை எந்தளவு தூரத்திற்கு ஏற்றுக் கொள்ளத் தக்கது?

நடு நிலைமை வகிக்கும் அமைப்பையே விமர்சிக்கத் தொடங்கும் இவர்களால் சமாதான முயற்சிகள் எப்படி போய் விடும் என்றும் விதண்டாவாதப் போர்வழிகள் கேட்கத் தலைப்படுகின்றனர். இதில் நடு நிலைமைக்கும் உண்மைக்கும் மத்தியில் இடைவெளி காணப்படுவதாக பல தத்துவார்த்த விளக்கங்கள், விவாதங்கள் உண்டென்பது கவனிக்கப்பட வேண்டும். நீதித் துறையில் கூட நடுநிலைமை என்ற கருத்தியல் சிலவேளைகளில் உண்மையை முற்றுமுழுதாகவே கருத்தில் கொள் வதாக இல்லை என்ற வாதங்கள் இதற்கு ஆதாரமாகக் காட்டப்படுகின்றன; மொத்தத்தில் உண்மை என்பதே சரியானது, வேண்டப்படுவது; நடுநிலைமை என்பது உண்மையை புறக்கணிப்பதாகவும் அமையும் என்ற விவாதம் இச் சந்தர்ப்பத்தில் நினைவு கொள்ளத்தக்கது.


போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் நடுநிலைமை என்ற கோதாவில் தனது தீர்ப்பைக் கூறியுள்ளது. அது சரியான முறையில் உண்மையை விளங்கிக் கொள்ளவில்லை. சமாதான முயற்சிகள் அடுத்த கட்டத்திற்கு ஆக்கபூர்வமாக நகரத் தேவை யான முன்தேவைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும் என்பதை, சிறிலங்கா படைத்தரப்பின் கடும் போக்குவாத பக்கத்தில் நின்று அணுகி தவறவிட்டுள்ளது.

உண்மையில் உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது சிறிலங்கா படையினரின் பலத்தை பாதிக்கக் கூடியதுதானா என்பது முக்கியமானது. உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி மக்களை மீளக் குடியமர்த்துவது என்பது சிறிலங்காப் படைபலத்தை நிர்மூலம் செய்வது அல்ல. மக்கள் குடியிருப்புக்களை விட்டு விலகியிருத்தல் என்பதே அதன் செயற்பாடாகும்.

இதற்கும் விடுதலைப்புலிகள் தமது படைபலத்தைக் குறைக்க வேண்டும் என்று கூறுவதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்பது புரியவில்லை. சரத்பொன்சேகாவின் இந்த நிபந்தனை, சமாதான செயல் முறைகளிலான நம்பிக்கையை கடுமையாக மலினப் படுத்தியிருப்பதுடன் மக்களின் விரக்தியையும் ஆழமாக்கியுள்ளது என புலிகள் கூறியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள புலிகள் ஆயுதத்துடன் இல்லை அவர்களது ஆயுத தளபாடங்கள் வன்னியிலேயே உள்ளன. இந்த நிலையில் அவற்றை வேறெங்கும் பின்தள்ள வேண்டிய தேவையும் இல்லாத போது மக்களை மீள் குடியமர்த்தும் முயற்சிக்கு இப்படி யெல்லாம் கதைப்பானேன் என்று அவர்கள் கேட்கத்தயாரில்லை.

## மதவடி மயிலர்



**செய்தி: பொன்னாலையில் மக்கள் மீளக் குடியமர முடியுமாம்!**

**எனினும் பிரதான வீதி படையினரின் கட்டுப்பாட்டில் தானாம்!!**

மயிலர்: உங்கடை வீட்டிலை நீங்கள் வந்திருக்கலாம். ஆனால் பூட்டுத்திறப்பெல்லாம்எங்கடை கையில்தான் இருக்கும் எண்ட கதைமாதிரியெல்லே கிடக்குது.... உதொண்டும் சரிவருகிற மாதிரித் தெரியேல்லை பாருங்கோ.... சந்திரிகா ஒரு ஆட்சி, ரணில் இன்னொரு ஆட்சி 'ஆமி' வேறொரு ஆட்சி..... ஒரு வகையிலும் சனத்துக்கு மீட்சி கிடையாதுபோல.........

**செய்தி: குருநகர் கரையோரப் படையினரை 200 மீற்றர் பின் நகர்த்த முடிவு!**

மயிலா: மைல்கணக்கிலை ஆக்கிரமிச்சுப் போட்டு மீற்றர் கணக்கிலை பின் நகரப் போகினமாம்.... 200 மீற்றர் என்றால் ஏதோ கனதூரம் விலகிறது மாதிரியெல்லே கதைவிடுகினம்.... கூப்பிடு துலையிலை போய் நிண்டால் குழப்பம் செய்யமாட்டினமே...!எங்கடை ஊரிலை அதுவும் எங்கடை கடலிலை மீன்பிடிக்க ஆராரிட்டையோ அனுமதி கேட்க வேண்டியிருக்குப் பாருங்கோ.... ஒண்டாவந்த பிடாரிகள் ஊர்ப் பிடாரிகளையெல்லே வெருட்டுதுகள்.....

**செய்தி: ஜே.வி.பி.யினருடனான கூட்டணி சுதந்திரக் கட்சியை அழித்துவிடும் கட்சியின் மூத்த பிரமுகர்கள் கருத்து!**

மயிலர்: மூத்த பிரமுகர்கள் கருதி என்ன பிரயோசனம்.... மூத்த தலைவி கருதவில்லையே..... கெட்டே தீருவேன் எனக் கங்கணம் கட்டி நிக்கேக்கை ஒருத்தரும் ஒண்டும் செய்யேலாது பாருங்கோ... தன்ரை புருசனைக் கொன்றவை என்று தெரிந்தும் அவையின்ரை தாளத்திற்கு அம்மணி ஆடவெளிக்கிட்ட பிறகு கட்சி ஆட்டம் காணாமல் என்ன செய்யும்.... பாருங்கோ....?

☞ குற்றத்தை மன்னித்து விடலாம் துரோகத்தை மன்னிக்க முடியாது. - ஈரான் பழ மொழி

# தாய்மடி வாசம் -7

இரவு 1.27 பயணித்துக் கொண்டிருந்த வீதியின் குறுக்கே கற்களின் சிதறலும் தண்ணீரும் அந்த ஏற்றத்தின் மீது ஏறமுடியாமல் வான் நின்று விட்டது. பின்னால் நித்திரையாகியிருந்த உதவியாளனையும் அழைத்து வாகனத்தில் என்ன பிழை எனச் சோதித்தான் சாரதி. ஒற்றை ரோர்ச்லைட்டைத் தவிர அந்த வீதியில் வேறு எந்த வெளிச்சமும் இல்லை.

**வானத்தை** நிமிர்ந்து பார்க்கிறேன். சில நட்சத்திரங்கள் மட்டும் மின்னிக் கொண்டிருந்தது. சுற்றிவரக் காடுகள் ஆளரவம் எதுவுமே அந்த இடத்தில் இல்லை. யாரும் உதவிக்கும் வரமுடியாத இடம். அங்கிருந்த மரங்களுக்கிடையே சிறு ஒளித்தெறிப்புத் தெரிகிறது. அவை மின்மினிப் பூச்சிகள். இந்தக் காடுகள், மின்மினிப்பூச்சிகள் எல்லாம் பார்த்து எத்தனையாண்டுகள் ஓடிவிட்டன.

கிட்டத்தட்ட அரைமணி நேரப் போராட்டத்தின் பின் வாகனம் மெல்ல இயங்கத் தொடங்கியது. பத்துமணித்தியாலத்துக்கும் மேலாக ஓய்வின்றி ஓடிய வாகனம் அதற்கும் களைப்புப் போல.... இயந்திரமானாலும் அதற்கும் ஓய்வு வேண்டும். அதுவும் மனிதனைப் போலத் தானே. எனக்கு எங்காவது விழுந்து படுக்க வேண்டும் போலிருந்தது. ஒரு கிழமையானாலும் அலுப்புத் தீராது. அந்தளவுக்கு உடல் அலுத்திருந்தது. குண்டும் குளியுமான வீதிகளில் வாகனம் ஓடும் இந்த வாகனச் சொந்தக்காரர்களுக்கு எத்தனை அலுப்பிருக்கும்......? தினம் இதுவல்லவா இவர்களது வாழ்வு

"நாளைக்கு என்ன பிரச்சினை தருகுதோ தெரியாது."
சாரதி சொன்னான்.
"ஒவ்வொருநாளும் ஓடுறனீங்களோ...... "
கேட்ட எனக்கு
"கிழமையிலை 4 நாள். ஆனா நாளைக்கு வெள்ளண பள்ளமடுவுக்குப் போகவேணும்" என்றான்.
இப்போதே சாமம் தாண்டிவிட்டது. எங்களை மல்லாவியில் விட்டுவிட்டு கிளிநொச்சிக்குப் போய் நாளையும் ஓட்டம். பாவம் அந்த இளையவர்கள். பத்து நாளுக்கு எழும்பவிடாத களைப்பும், அலுப்பும் தந்த இன்றைய ஒருநாள் பயணமே எனக்குப் பெரும் அலுப்பாயிருந்தது. நாளையும், நாளைமறுநாளும், தினமும் இவர்களது வாழ்வே இதுவாய்.....

இரவு 2.40 மல்லாவிக்குப் போய்விட்டோம். காலை ஆயத்தமான பயணம் இப்போது தான் நிறைவுக்கு வந்தது. எங்களிடம் விடைபெற்று அவர்கள் கிளிநொச்சிக்குத் திரும்ப நாங்கள் முகம் கழுவி நித்திரைக்குப் போக... புற்பாயும், குட்டித் தலையணையும் எங்களை வரவேற்றுத் தன்னில் உறங்க வைக்க உறங்கிப் போய்விடுகிறேன்.

அலாரத்தையே கேட்டுப் பழகிய காதுகளில் கோழிகளின் கூவலும் பறவைகளின் இசையும் ஏதோவொரு இனிய சங்கீதத்தை என் காதுகளில் வார்த்தது போலிருந்தது. பத்து வருடத்தின் பின் இயற்கையான காலையின் புலர்வும், பூபாளமும், மெல்லிய பனிக்குளிரில் லேசாய் உடல் குளிர பல் விளக்கிறேன். இந்த இயற்கையான துயிலெழுப்பல் எனக்கு எப்போ நிரந்தரமாகும்...? இன்னும் எத்தனை காலம்தான் அலாரமும் இயந்திர வாழ்வும் எனதாகப் போகிறது.....?


15.02.02. மதியம் மல்லாவியிலிருந்து முல்லைத்தீவு பயணமாகிறோம். சுதான்ரி இடங்களை எனக்குச் சொல்லிக் கொண்டு வந்தா. போரின் வடுக்கள் சுமந்த வீதிகளின் வழியே எங்களது பயணம். அங்கங்கே சில இடங்களில் இந்த மண்ணில் இனியதொரு விடியல் வேண்டி தங்கள் இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரமணிகளின் துயிலுமில்லங்கள். வானில் பறப்பதான.... இல்லை அதிலும் மேலான உணர்வுகளுடன் அங்கே சென்றடைந்தாயிற்று......

தென்னைகளின் நடுவே அமைந்திருந்த அந்த அழகிய சிறுவீடு. இல்லை அழகிய சிறு மாளிகை. அங்கு என்னை வரவேற்ற மனிதர்கள், எல்லோருமே புதியவர்கள். எனினும் எனது வருகைக்காய் காத்திருந்து, எனது வருகையை விரும்பியவர்களின் உபசரிப்பிலும், கவனிப்பிலும் திக்குமுக்காடி விடுகிறேன்.

ஓ..... எனக்காகவும்
இந்த மண்ணில்
மனிதர்கள்
இருக்கிறார்கள்
என்னை
நேசிப்பதற்கும்



நெஞ்சோடு சேர்த்து நினைவில் வைத்திருக்க
நேசமுள்ளவர்கள் இருக்கிறார்கள்.
ஏன் இங்கு வருகிறாய்
என்று கேட்ட ரத்த உறவுகளுக்கு முன்னமே
எப்ப வருகிறாய் என
என்வரவை விரும்பியவர்களல்லவா இவர்கள்.
இந்த நேசிப்பும், இந்த நேசமும் போதும்
இனிவரும் நாட்களில் – நான்
உயிர்ப்புடன் இருக்க
இது போதும்
இப்படியான நேசத்துக்காக
இப்படியான நேசமுள்ளவர்களின்
உறவுக்காகப் பத்தாண்டுகள்
எத்தனை துடிதுடித்திருந்தேன்.
இன்று என் துடிப்பெல்லாம்
நிறைந்தாற் போல்.......
நீண்ட அந்த வான்வெளி தாண்டி
நான் இறக்கை கட்டிப் பறக்கிறேன்...
இது போதும்
எனக்கிது போதும்
வாழ்ந்திடுவேன்.........



இரவு அப்பப்போ வந்து ஊசி போடும் நுளம்புகளிலிருந்து என்னையும் எனது நித்திரையையும் காக்க தலைமாட்டிலும், கால்மாட்டிலும் நுளம்புத்திரியும், விடிவிளக்கும் எனைத் தாலாட்ட உறக்கம் விழிகளை வாங்கிவிடுகிறது.

கோழிகள் கூவி, பறவைகள் சங்கீதமிசைத்து பொழுது விடிந்து ஐ.பீ.சீ யின் சிற்றலை ஒலிபரப்பு துயிலெழுப்பிவிட எழுகிறேன். லதாக்கா வளவைச் சுற்றிக் கூட்டிக் கொண்டிருந்தா. மதுராவின் சுட்டி மகள் சுரபியும், ராகவனும் என்னருகில் வந்திருந்து கதை சொல்லிக் கொண்டிருந்தார்கள். சுரபிக்குட்டி தனது பாடசாலை பற்றிச் சொன்னாள். கதை சொன்னாள். எனது மகனின், மகளின் அருகில் இருப்பதான உணர்வு அவளது பேச்சிலும் குறுகுறுப்பிலும், சிரிப்பிலும் என்னையே அள்ளியெடுத்துக் கொண்டாள் சுரபிக்குட்டி.

மதுராவின் கைவாசம் சேர்ந்த புட்டும் சம்பலும் அம்மம்மாவின் கைவாசத்தை நினைவுபடுத்தியது.

16.02.02 காலை 10.30 என்னை அழைத்துப் போக நந்தா வந்திருந்தாள். நேற்றிரவு அமைதியாய் என்னையே பார்த்துக் கொண்டு நின்றவள். சிரிப்பை மட்டுமே எனக்குச் சிந்திய நந்தா நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையுமாய் அவள்.... இரட்டைப் பின்னலை உயர்த்திக் கட்டி, நீளக் காற்சட்டை, முளங்கை வரை மடித்துவிடப்பட்ட சேட்,

"பாரதி பாட்டில் பாடிய புதுமைப் பெண்ணை எங்கள் தலைவன் காட்டில் உருவாக்கிக் களத்தில் காட்டுகிறான்."

எனும் கப்டன் வானதியின் கவிவரிகள் என் நினைவுகளில் வந்து போனது. மொத்தத்தில் நந்தா ஒரு போராளிக்குரிய அத்தனை அம்சங்களுடனும்...... ஒரு அடக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதியாய் அல்ல..... நல்நெறியில் வளர்க்கப்பட்ட தலைமையின் பெயர் சொல்லும் போராளியாய் என்முன் அவள் போகலாமா.....என்றாள். தயாராய் நின்ற அவளது சயிக்கிளில் என்னை ஏறச் சொன்னாள்.

முல்லைத்தீவு மாவட்ட மண்ணின் ஏதோ ஒரு ஒழுங்கையது. நேரே சயிக்கிளில் ஆண்களும், பெண்களும், சிறுவர்கள், பெரியோர்களுமாய் என்னைக் கடந்தனர்.

அந்தத் தெருவில் 60 கிலோ பாரமான என்னை......
"என்னக்கா 60 கிலோவெண்டியள்.. ஆனால் ஆறரைக்கிலோ மாதிரி இருக்கிறியள்"
எனச் சிரித்துக் கொண்டு அந்த வீதியில் என்னை சுமந்த அவளது சைக்கிள் போய்கொண்டிருந்தது.

அந்தத் தென்னஞ் சோலைக்குள் பிரவேசிக்கிறோம். தென்னோலைகளின் சலசலப்பு என் காதுகளில் வார்த்த சங்கீதத்தில்.... என்னைத் தொட்டுச் சென்ற இனிய தென்றல் என்னை அப்படியே அள்ளிச் சென்று யாழ்ப்பாணத்தின் வடக்கேயமைந்த என் கிராமத்துத் தோட்ட வெளியின் தென்னைகளின் நடுவே இறக்கியது. பெரியமாமாவின் தோட்டத்து வரம்புகளைச் சுற்றி அந்தத் தென்னைகள்.... மதியம் பாடசாலை விட்டு வந்து சாப்பிட்டுவிட்டு புல்லுப்பிடுங்கப் போவதாய் அம்மாவுக்குச் சொல்லிவிட்டு மூக்கறைச்சிப் புல்லைப்பிடுங்கி கடகத்தை நிரப்பிவிட்டு அன்று பாடசாலையில் எனக்கு அடித்த வாத்தியாரின் பெயரைச் சொல்லிச் சொல்லி பேசியதும், ஏன் மரமண்டை பேசாம நிக்கிறாய் ஏன் நீ ஒழுங்காப் படிக்கேல்ல. அதுதான் அந்த வாத்தி என்னைப் பேசிப்போட்டுது.எனத்தென்னைக்குச் சொல்லி அழுததும் எல்லாம் மறந்து

**சுதந்திரா**

அந்தத் தென்னையடியில் சாய்ந்திருந்து பொன்னுத்துரையின் தறையிலிருக்கும் அறுகம் புல்லையும், சீலம்பாச்சிப் புல்லையும் களவாக அறுத்ததும், ஒவ்வொரு நாளும் அந்தத் தென்னையில் வந்திருந்து கீ..கீ...கீ.. எனும் கிளியைப் பிடிக்க ஒளித்ததும் எனக்கு எட்டாத தூரத்திலிருக்கும் கிளி எனக்கு எட்டாது போக தென்னையைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கிளியே கிளியே என் தலையில் வந்திருந்து உன் சிறகுகளை எனக்குத் தந்து விடு.....என அந்தப் பலட்டன் தோட்ட வெளியே கேட்கும்படி வரம் கேட்டது எல்லாமே.....எல்லாமே...கனவாகி....

அந்தத் தோட்ட வெளியில் 1987 குரும்பசிட்டியில் இராணுவம் புகுந்திருந்து அடித்த செல் தென்னைகளுக்குச் சற்றுத் தள்ளியிருந்த பயற்றம் தறைக்குள் விழுந்து சிதற ஓடிப்போய் அந்தத் தென்னையைக் கட்டிப்பிடித்து அடைக்கலம் தேடியதும்.... அதன் பின்னால் அடுத்து வந்த ஒரு நாளில் விழுந்த செல் நானொளிந்து விளையாடிய தென்னைகளைச் சிதறடித்து என்னை அழுவித்ததும்..... கனவுகளில் என்னிடம் வந்து போகும்.
அந்தத் தென்னைமரங்களும், பனை மரங்களும் இப்போ எப்படியிருக்கும்....?

ஓ....பலட்டன் வெளியே உன்னைச் சுற்றி நின்ற
அந்தத் தென்னைகள் எங்கே....

அந்தப் பெரிய வற்றாக் கிணறுகளின்
ஊற்றுநீரை அப்படியே
வாய்க்கால் வழி அழைத்துப்போய்
ஒவ்வொரு தறைகளுக்கும்
ஊட்டிய உயிர்ப்பாலில்
தன்னையும் உயிர்ப்பித்த
அந்தத் தென்னைகள்
அங்கே இருக்கிறதா.....?

அருகமர்ந்த கமுகுகளும்
அதற்கப்பாலும்
குரும்பசிட்டியையும்
புன்னாலைக் கட்டுவனையும்
அடையும் வழிசொல்லி நின்ற
ஓங்கியுயர்ந்த அந்த
பனைமரங்களும்
அங்கே இருக்கிறதா.....?

முத்தர் வளவின் முதிசமான
அந்த மூன்று காணிப் பனைகளும்
பத்திரமாய் அங்கு இருக்கிறதா....?

சின்னத்தங்கச்சியக்கா வீட்டுத் தென்னையும்
சுகமாய் இருக்கிறதா.....?

ஓ....என் ஊரே....நான் ஓடித்திரிந்த
அந்தத் தென்னைக் காணிகளும்
ஒளித்து விளையாடிய பனைகளும்
ஒழுங்காய் இருக்கிறதா......?

ஊர் நினைவுகளில் என்னோடு உறவாடிய அந்த மரங்களின் நினைவுகள் அப்படியே ஒழிந்து போகிறன.

தொடரும்....

புகழ்ச்சியால் நல்லவன் மிக நல்லவனாகின்றான் கெட்டவன் மிகக் கெட்டவனாகின்றான். - டென் மார்க் பழமொழி



சிறுகதை

# நல்ல குருநாதர்

ஆதித்த நிளா

ஜெனார்த்தனிக்கு அவள் படிச்சு ஆளான பாடசாலையிலேயே நியமனம். தமிழ் படிப்பிச்ச ரீச்சர் திருமதி சதாசிவம் தான் அதிபராய் இருந்தார்.

மனிசியின்ர தன்னலமற்ற உழைப்புக்கு உகந்த பணி. வெள்ளை வெளீரென்ற மிடுக்குத் தோற்றம். மனிசி ஆசிரியராய் இருக்கேக்கையே அதிபர் மாதிரி சுற்றிச் சுற்றி வலம் வரும். கடமையில கண்ணியம். தன்ர கடமையில மட்டும் இல்ல, எல்லாருமே தங்கட தங்கட கடமையைச் சரியாயச் செய்யோணும். அப்பத்தான் மனிசியால நிறைவாய் இருக்க முடியும்.

இடம்பெயர்வுகளின் அவலங்களில அந்தப் பாடசாலையும் எத்தனையோ தடவைகள் இடம்பெயர்ந்திட்டுது. திக்கொன்றாய் சிதறுகிற போதெல்லாம் ஒரு மாதிரி ஒருங்கிணைச்சு நிமிர்திக் கொள்ளுகிற கைங்கரியம் மனிசியிடம்.

ஜெனார்த்தனி போனபோது 1500 பிள்ளையளுக்கு 30 ஆசிரியருடன் மூன்று மரக் கொட்டகைளை மட்டுமே கொண்டும் பாலை மரங்களே மரக்கொட்டைகைகளாக, தளபாடங்களோ போதிய புத்தகங்களோ அற்ற நிலையிலும் பெறுபேறில முன்நிலையில தான் வைச்சிருந்தது மனிசி.

றோட்டால போற வாற வாகனங்களின்ர செம்மண் புழுதியால வெள்ளை யூனிபோம்கள் சிவந்து போகும். மூக்குச் சீதம் கூட செந்நிறமாய்த்தான் சிந்தும்.

இப்ப வாகனப் போக்குவரத்து அதிகம். டொல்பின், கஜஸ்...அது இது என்று...! அலுங்காமல் குலுங்காமல் ஒரு சமுதாயம் செங்குருதியில குளித்து இப்பவும் செம் மண்ணில குளிக்குது ஒரு சமுதாயம். அவையின்ர நிமிர்வுக்கு செங்குருதியில குளித்த சமுதாயத்தின்ர நிமிர்வுதான் காரணம் என்று எத்தனை பேருக்குத்தான் தெரியும்.

"மிஸ் நீங்கள்தான் நற்சிந்தனை சொல்ல வேணும்" வெள்ளிக் கிழமை பிரார்த்தனையை ஒழுங்கு படுத்தும் மாணவி அழைக்கவும்,

"நளினி மிஸ் வரேல்லையோ!"

"நளினி மிஸ்தான் இண்டைக்குச் சொல்லுறதா இருந்தது. அவா வரமாட்டா போல. நான் வரேக்க மிஸ் வெளிக்கிடாம நிண்டவா. வரேல்லையோ மிஸ் என்று கேட்கப் பாப்பம் எண்டவா.

எப்பதான் நேரத்துக்கு வந்திருக்கிறா...! ஒழுங்காக வரமாட்டா. ஒரு நாளும் விடியாது. பலரிட்ட உள்ள பெரிய குறைபாடு இந்த நேரம்தான். நேர முகாமைத்துவம் தொடர்பாய் வகுப்பெடுக்க வேணும். என்னத்த எடுத்துத்தான் என்ன இண் டைக்கு நிறையப் பேர் பொறுப்புணர்வற்றவையளாய் இருக்கினம். தயார்படுத்தல் இல்லாமல் எண்ணெண்டு சொல்லுறது....! சொல்லலாம ஆனா... திட்டமிடல் அற்ற தயார்ப்படுத்தல் அற்றவை....?

" சரி நீங்கள் போங்கோம்மா நான் வாறன்".

ஜெனார்த்தனிக்கு அவள் கற்ற காலம்நினைவில் சுழன்றது சதாசிவம் ரீச்சர்...!மனிசியின்ரஅனுபவத்திற்கு...! ஆனாலும், மனிசி போதிய தயார்ப்படுத்தல் இல்லாம எதையும் செய்யாது. வேலைத் திட்டம் இல்லாம வகுப்பெடுக்கவராது. மனிசி படிப்பிச்சா படிப்பிச்சதுதான். திருப்பிப் போய் படிக்கத் தேவையில்லை. ஆசிரியர் கைநூல், பாடத்திட்டம், பாடப்புத் தகம் . எண்டு வழிகாட்டல் புத்தகங்கள்ல எல்லாத்தையும் ஒருங்கிணைச்சு கருப்பம் சாராய் பிழிஞ்சு தாறதில மனிசிக்கு நிகர் மனிசிதான்.

ஒரு அலகு முடிச்ச கையோட அந்த அலகு தொடர்பாகவுள்ள மாதிரிக் கேள்வியின், பயிற்சி புத்தகங்கள், கடந்தகால பரீட்சை வினாத்தாள்கள் எண்டு செய்து அந்த அலகிலை எந்தச் சந்தேகமும் எப்பவும் எழாதவகைக்குச் செய்து போடும்.

ஒரு நிமிசம் சும்மா இருக்க விடாது.

" பிள்ளையள் என்ன பாடம்...? போய் ரீச்சரைக் கூட்டிக்கொண்டு வாங்கோ"

"எங்களுக்குத் தெரியும்தானே உந்த மனசி ஏன் பிரின்சிப்பல் வேலை பாக்குது" பொறுப்பற்ற சக ஆசிரியர்களின்ர முணு முணுப்ப மனிசி பொருட்படுத்திறதே இல்ல.

மணி அடிச்சா அந்த நிமிசமே வகுப்புக்க நிற்கும். 45 நிமிசமும் 45 நிமிசம்தான். அளவெடுத்து உடுப்புத்தைச்ச மாதிரி மனிசியின்ர தயார்படுத்தல் இருக்கும். அன்றைய பாடப்பரப்பை விளக்கி, பயிற்சி தந்து, பாடப் பதிவு செய்து நிமிரவும் மணி அடிக்கவும் சரியாய் இருக்கும். ஒரு நிமிசம் முந்தியும் வராது. ஒரு நிமிசம் பிந்தியும் போகாது. "படைச்சான் பிரமன்..." மனிசி போனதும் எங்கட பெடியளிட வசவு தொடரும்.

படிப்பில மட்டும் இல்ல, டிசிப்பினிலையும் மனிசி கண்டிப்பு. ஒருக்கா மனிசி உள்மேற் சட்ட போட்டுக்கொண்டு வராத பிள்ளையள் ஓராளை ஓராள் பார்த்துக் கொண்டு நிற்கச் சொல்லிப் போட்டு துள்ளவிட்டுட்டுது. எப்படியிருக்கும் நிலம. அண்டை யோட திருந்தினவை தான். இண்டைக்கும் சொல்லுவினம்.

மனிசியோட படாதபாடு.

"உங்களுக்கு காஞ்சிபுரம கட்டி கனகாம்பரம் சூடி சரக்குச் சரக்கெண்டு வரவேணும் அப்பத் தான் உங்களுக்குப் படிப் பேறும் போல் ...."

உடற்கூறுகளை அளவிட கருவி கண்டுபிடிச்ச மனிசனுக்கு உளக் கூறுகளைக் கண்டுபிடிக்க கருவி கண்டுபிடிக்கேலையே. எண்டு ஆதங்கப்படுவோருக்கு எங்கட சதாசிவம் ரீச்சர் சவால் தான்.

மனிசி உளக்கூறுகளையும் உள்ளதை உள்ளபடி படம் பிடிக்கும் எக்ஸ்ரே கருவி.

பாடம் முடியும் வரையில் வைத்தகண் வாங்காமல்மனிசியையே பார்த்துக் கொண்டிருக்கவேணும். திரும்பினாப் போச்சு! கையில இருக்கிற எதுவும் முகத்துக்கு வரும். பிள்ளையள் பெடியள் எண்டு பார்க்காது. வளர்ந்த பிள்ளையள், எண்டும் பார்க்காது.

'இந்திரா' அவன் எப்பவும் நேர பார்க்க மாட்டான். குனிஞ்சு கொண்டுதான் இருப்பான். சரியா கிரகிப்பான். ஆனாலும், மனிசிக்கு நேர பார்த்துக் கொண்டு இருக்கவேணும். மனிசி அவனையும் கூட பழக்கி எடுத்திட்டுது.

கண்கள் உளக்கூறுகளை காட்டிக்கொடுத்துப்போடும். களவு கண்டறிய இயற்கையே அளித்த வரப்பிரசாதம். ஜீ.ஜீ பொன்னம்பலம் கேஸ் எடுக்கிறார் என்றால், எதிர்க்கட்சி வழக்கறிஞர் தன் கட்சிக்காரருக்கு படிச்சுப் படிச்சு அறிவுறுத்துறது, மறந்தும் மனுசன்ர கண்ணைப் பார்த்துப்போடக் கூடாது எண்டுதான்.

மனிசி எங்கட கண்ணைக் கொண்டே விளங்கிட்டுதோ, விளங்கேல்லையோ எண்டு கண்டு பிடிச்சுப்போடும்.

மனிசியின்ர கற்பித்தல் மட்டுமில்ல, கண்டிப்புக்களும் கனதி தான். நேர்கொண்ட பார்வையும், கடமையில கண்ணியமும், மாணவர்கள் மட்டும் இல்ல, சக ஆசிரியர்களும் வெறுப்புக் கொள் ளக் காரணம். அந்த வெறுப்பில உதயமான கோட்நேம்தான் 'அம்மையார்'.

'டேய் அம்மையார் வாறார்" எண்டா பெடியள் கப்சிப். ஆளுக்காள் மூச்சு விடுறதுகூடக் கேட்கும்.அப்படியொரு அமைதி. எங்களில பல பேர் அம்மையாரின்ர கண்டிப்பால படிச்சு ஆளானவையள் தான். மனிசியை எப்பவும் மறக்கேலாது. மனிசியில அப்ப இருந்த கோபம் இப்ப இல்ல.

ஆனா... இப்ப எப்ப நினைச்சாலும் இந்து நாகரீகம் படிப்பிச்ச மாஸ்ரரை நினைக்க கோபம்கோபமாய் வரும். மனிசன்ர பிரியமான வார்த்தைக ளால மனிசியை சரியா மதிப்பிடத் தவறிப்போட்டம். மனுசன்ர அனுசரணையான வார்த்தைகளில மயங்கிப்போனம். மனுசன் எங்களுக்கு எதைப் பிடிக்குமோ, அதைக்கதைக்கும், அதைச் செய்யும். அந்த வயதில பாடம் நடக்காட்டி நல்ல சந்தோசம்தான். எங்கட வாழ்க்கேல அந்த மனுசன் அக்கறைப்படேல. பேந்துதான் எல்லாம் புரிஞ்சுது. ஆள் நல்ல லுக்கான மனுசன். இளம் ஆள்.

"எனக்குத் தெரியும் நீங்கள் ஏன் இந்து நாகரீகத்திற்கு மாறினியள் எண்டு" மாஸ்ரரும் இருக்க மாஸ்ரருக்கு முன்னாலேயே அபிஷேகம் நடந்தது மாஸ்ரருக்கும் சங்கடம் சமாளிச்சுக் கொண்டு இருந்தார்.

ஆனா... மனிசி சொன்னதிலையும் உண்மை இல்லாமலும் இல்ல. பாடத்த ஏன் எடுக்கிறம், அதுன்ர பயன்பாடு என்னவென்று ஆராயாம எழுந்தமான புள்ளிகள் தரும் எண்டதுக்காக எடுக்கிற விவேகம் அற்றதுதான். எங்கட படிப்பு பயன்பாடு உடையதாக இருக்கவேணும். படிக்கிற காலத்தில நல்லது பொல்லாதது ஏனோ தெரியிறதில்ல. நல்லது சொல்லுறவையளையும் பிடிக்கிறதில்ல. போலிகளைக் கண்டு ஏமாந்து போறதே வாழ்க்கையாப் போச்சு .

எங்கடஇந்து நாகரீக மாஸ்ரர் எங்கட எக்கணமிஸ் மாஸ்ரர் மாதிரி அதிர்ந்தே கதைக்க மாட்டார். ஒரு நாள் கூட கண்டிச்சதில்ல. பயிற்சியளும் தரமாட்டார். பயிற்சி தந்து செய்யாமல் விட்டாலும் கேட்கமாட்டார். பிள்ளையள் பிள்ளையள் எண்டு நல்லாப்பாணி போட்டு கதைப்பார். அவரையெண்டா எல்லாப் பிள்ளையளுக்கும் பிடிக்கும். மாஸ்ரர் மாஸ்ரர் எண்டு சுத்தி நிற்பம். மாஸ்ரர் இண்டைக்கு ரயேட்டா இருக்கெண்டா அதுக்கென்ன ரெஸ்ற் எடுங்கோ எண்டுட்டுப் போடுவார். மாஸ்ரர் எண்டா மாஸ்ரர்தான் எண்டு வாழ்த்தினம்.

எங்கட எக்கணமிஸ் மாஸ்ரர் பாவம். கண்டிச்சு கதைக்காட்டியும் கடமையில் கண்ணியம். எங்களுக்கேனோ அவரில பயபக்தியில்லை. அதாலதானோ என்னவோ அவற்ற பாடத்தில அக்கறையில்ல. ஆள் நல்ல தோற்றம். அவருக்கு வைச்ச கோட்நேம் 'சகடை' வகுப்புக் கதவில குண்டுபோடுற மாதிரி சகடை கீறியிருந்தவர்கள் எங்கட பெடியள். அவர் வகுப்ப அண்மிக்க எல்லாருமாச் சேர்ந்து 'உம்... உம்....' என்ற இரைச்சல். வகுப்பு வாசலில கால் பதிக்க எல்லாருமாச் சேர்ந்து ஓரே குரளில "டும்".. எண்டொரு போடல்.

இந்தச் சேட்டையெல்லாம் அம்மையாரில வாய்க்காது.

ஆசிரியர்கள் கரைசேர்க்கிற ஓடம் மாதிரி. எத்தினபேர் கடமையைச்செய்திச்சினம் எண்டதெல்லாம் பரீட்சைப் பெறுபேறு வந்த போதுதான் விளங்கிச்சு. கண்டிச்சுப் படிப்பிச்சிருந்த அம்மையாரின்ர பாடத்தில அதிவிசேட தேர்ச்சி! எக்கணமிஸ்லையும், இந்து நாகரீகத்திலையும் சாதாரண தேர்ச்சி!

எக்கணமிஸ்தான் கொஞ்சம் கனதியான பாடம்! ஆனா... இந்து நாகரீகம் ....' என்ன படிப்பிச்சிருந் தவர் எழுதிறதுக்கு! பாணி போட் டுக் கதைச்சு காலத்தைக் கடத்தி னதுதான்.

அம்மையார் துடிச்சுப் போனா. செக்கன்சே தான்தான் இந்து நாகரீகம் படிப்பிக்கிறது, எல்லாரையம் 'ஏ' எடுக்கப் பண்ணுறது எண்டு சபதம் எடுத்தா! மனிசி எடுத்த சபதம் சபதம்தான்.

ரீயூசனோ ரீயூட்டுக்களோ இல் லாத வசதி வாய்ப்புக்கள் அற்ற நெருக்கடியான காலத்திலையும் மனிசி தனித்து தன்ர கற்பித்துலைக்கொண்டே தமிழ்ப் பாடத்தில மட்டும் இல்ல, இந்து நாகரீகம் பாடத்திலையும் 'ஏ' எடுக்கப் பண்ணிப்போட்டுது.


'நல்லகுருநாதர் வருத்துவது கொல்லவல்ல. கொல்லவல்ல! பொல்லாப் பிணியகற்றவே!'

எனக்குத்தலைப்புக் கிடைச்சிட்டு. தயார்படுத்தல் போதும்.

அசம்பிளி அமைதியாய் இருந்தது. ஊசி போட்டாலும் கேட்கும் பேரமைதி. " நல்ல குருநாதர் வருத்துவது... மாணவர்களினது பார்வையில கூர்மை.... புத்துயிர்ப்புப் பெறுவது போல ஒரு உணர்வு.

கலைந்துபோகும் மாணவர்கள் " நல்ல குருநாதர் வருத்துவது கொல்லவல்ல... கொல்லவல்ல... என்று முணு முணுத்துப் போவதையும் என்னையும், மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தது மனிசி.

மனிசிக்கு கடமையை நிறைவேற்றின நிறைவு கிடைச்சிருக்க வேணும். மனிசியின்ர முகம் பிரகாசமாயிருந்தது.



> "ரீயூசனோ ரீயூட்டுக்களோ இல்லாத வசதி வாய்ப்புக்கள் அற்ற நெருக் கடியான காலத்திலையும் மனிசி தனித்து தன்ர கற்பித்தலைக் கொண்டே தமிழ்ப்பாடத்தில மட்டும் இல்ல, இந்துநாகரீகம் பாடத்திலையும் 'ஏ' எடுக்கப்பண்ணிப் போட்டுது.



நூலின் பெயர் : வன்னி மான்மியம்

எழுதியவர் : நிலாந்தன்

வெளியீடு : நியதி

361, 4ஆம் யூனிட்,

திருநகர், மல்லாவி.

# நூல் நோக்கு




**01**

**நிலாந்தனின்** வன்னி மான்மியம் ஜனவரி 2002இல் வெளியாயிற்று. அதில் (01) மண் பட்டினங்கள், (11) பாலியம்மன் பள்ளு அல்லது ஓயாத அலைகள் மூன்று, (111) வன்னி நாச்சியாரின் சாபம் (VI) மடுவுக்குப் போதல் என நான்கு ஆக்கங்கள் இடம்பெறுகின்றன. இவை நான்கு பரிசோதனைகளின் தொகுப்பு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரிசோதனை முயற்சி என்று இவை குறிக்கப்பட்டிருப்பது ஏன்? பரிசோதனை என்றால் என்ன?

கலை இலக்கிய முனைவுகள் காலந்தோறும், இடந்தோறும் நிலவும் சூழ் அமைவுகளின் நடுவிவே தான் எழுகின்றன. ஒவ்வொரு சூழமைவிலும் சிற்சில கலை யாக்க முறைகள் பலராலும் பொதுவாக ஏற்றுக் கொண்டாடப்படுவது வழக்கம். வழக் கங்களின் சேர்மானங்கள் மரபுகள் ஆகின்றன. மரபுகளைப் பெரிதும் போற்றித் தயாரிக் கப்படுவன சராசரியான எதிர் பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய முயலுகின்றன. இவற்றைப் பரிசோதனைகள் என்று நாம் கூறுவதில்லை.

ஆனால், கலைஞர்களுட் சிலர், தாம் உண் டாக்குவன யாவுமே, அல்லது அவற்றுட் பெரும்பாலனவையாவது, முன்னுதாரணம் இல்லாத புத்தம் புதுமைகளாக இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். அவை பரிசோதனைகள் ஆக அமைந்து விடுகின்றன.

நிலாந்தன் பரிசோதனை வேட்கை கொண்டதொரு படைப்பாளி. அவர் ஓவியரும், கவிஞரும், சிந்தனையாளரும் ஆகத் திகழ் கின்றார்.அதனால், அவர் படைபபபற்றிற் பெரும் பாலானவை பரிசோதனைகளாக இருக் கின்றன. அதனாலே தான் அவர் இயற்றிய வன்னி மான்மியம் பரிசோதனைகளின் தொகுப்பு என்று குறிக்கப்பட்டது போலும்.

**02**

இந்த நூலில் இடம்பெறும் நான்கு பரிசோதனைகளும் பொதுவான சிற்சில பண்புகளைக் கொண்டவையாய் உள்ளன. அதேவேளை ஒவ்வொன்றும் தனித்தன்மை கள் சிற்சிலவற்றைப் பெற்றும் உள்ளன.

நூலின் தலைப்புச் சுட்டிக் காட்டுவது போல, வன்னி மண்ணின் வாழ் நிலையும் எண்ணப்போக்கும் உணர்ச்சிச் சாய்வும் புத்த கத்தில் வரும் நான்கு கவிதைகளும் விரவிக் கிடக்கின்றன. பிரதானமாக, வன்னி நிலத்தின் தொல் கதைகளும், நாட்டார் வழக்கியலின் கூறுகளாய் உள்ள பாட்டு, கூத்து, மருந்து, மாயம், சடங்கு, சம்பிரதாயம், சொற்பிரயோகம், உலகியல் நோக்கு, நம்பிக்கைகள் ஆகிய பலவும் வன்னி மான்மியத்தின் நாற்பத்துமூன்று பக்கங்களிலும் வெவ்வேறு அளவுகளிலும் வெவ்வேறு நோக்கங்களின் பொருட்டும் வெவ்வேறு விதமான அழுத்தங்களுடனும் இடம் பெறுகின்றன.

முதலாவதாக வரும் மண்பட்டினங்கள் வன்னியின் எல்லைகளுக்கு அப்பாலும் பரந்து, தன் உணர்கொம்புகளை நீட்டி விரிகிறது. மோட்டிமர் வீலர், ஜோன் மாஷல் முதலான தொல்லியல் அறிஞரின் கவனிப்புக்கு உள்ளான சிந்துச் சமவெளியின் நாகரீகப் பரப்புகளை, இங்குள்ள தமிழர்களின் பரவணிப் பாங்குடன் இணைத்து நோக்கமுற்படுகின்றது. ஐயத்திக்கிடமின்றி போதிய சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ள வரலாற்று முடிவுகளுடன் இந்த நோக்கு முழுமையாக ஒத்திசைந்து போகுமா என்பது, அறிவியல் வழி நின்று நன்கு பரிசீலிக்கப்பட வேண்டியது.

குமரிக்கண்டம் தான் முதல் மனிதர் தோன் றிய இடம் என்ற கருதுகோள் ஒன்றை மைய மாகக் கொண்டு சிவனொளிபாதமலை தான் முதல் மனிதர்களான ஆதாமும் ஏவாளும் வசித்த ஈடான் பூங்கா என்ற கருத்துருவம் கூட, சிலரால் முன்வைக்கப்பட்டதுண்டு. ஆர்வ மேலீட்டால் உந்தப்பட்ட ஈழத்துக் கவிஞர் ஒருவர், Adam- அத்தன்: Eve - அவ்வை என ஒற்றுமை கண்டு பாட்டெழுதி உள்ளார். எம்.ஜீ.ஆர். காலத்தில் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின்போது, குமரிக்கண்டம் பற்றிய கற்பனைப் புனைப்பு படம் ஒன்று தயாரித்துக் காட்டப்பட்டதுடன் முதல் மனிதனின் மொழி தமிழ்தான் என்ற கருத்தினை ஊட்டும் முயற்சி ஒன்றும் இடம்பெற்றது. (நல்ல காலமாக, இந்தத் திரைப் படம் வெகுசனங் களின் நுகர்ச் சியை இலக்காகக் கொண்டு தயாரித்துக் காட்டப்பட்தே தவிர, ஆய்வாளர்களின் அமர்வுகளுடன் தொடர்பு படுத்தப்பெறவில்லை) நிகழ்கால எழுச்சி களுக்கு இவ்வித ஊகங்களை அடிப்படை ஆக்குவது எவ்வளவு விவேகமாகும்? இது சற்று யோசித்துப் பார்க்க வேண்டிய சங்கதி.

ஆனால், மண்பட்டினங்கள் என்னும் ஆக்கத்தினை மேற்காட்டியவாறான முயற்சி களுடன் சமப்படுத்துவது முறைஆகாது. இதற்கும் பல விதமான வாசிப்புகள் சாத்தியமே என்றாலும், நிலாந்தன் கையா ண்டுள்ள கலையாக்க முறை தொன்மங்களை நுட்பமானதோர் உத்திக்கூறாக அமைத்துக் கொள்ள முயல்கிறது.

குடாநாட்டிலிருந்து வன்னி நிலத்தை நோக்கி இடம்பெற்ற வெளியேற்றத்தை கவிதையின் முற்பகுதி தொட்டுக் காட்டுகிறது. இந்த நிகழ்வின் தொடர்ச்சியையும் சொல்லோவியம் கொண்டு கோடிகாட்டுகிறார்.

"யாப்பு பட்டுணவுக்குப் பதிலாக முல்லைத்தீவு/ முல்லைத்தீவுக்குப் பதிலாக கிளிநொச்சி.... முந்தநாள் கிளிநொச்சியும் வீழ்ச்சியுற்றது/ சனங்கள் நெரியும்.அதன் சிறிய வீதிகளைப் பீரங்கிகள் பிளக்க/ அவர்கள் நகருக்குள் நுழைந்தபோது/ ஒரு நாய் மட்டும் மிஞ்சியிருந்தது."

கைவிடப்பட்ட பட்டினத்திலே தனியொரு நாயை மாத்திரம் காட்சிப்படிமம் ஆக்கியுள்ளது. நிலாந்தனின் நுண்ணுணர்வு. காடுகளில் ஒளித்த வெல்லப்பட இயலாத அந்த மக்கள் ஒரு பட்டினத்தைக் கட்டு வார்கள். அதுவும் ஒரு மண் பட்டினம் ஆகத் தான் இருக்குமாம். வேதத்தைவிட மூத்த மக்களான தஸ்யுக்கள்தான் பின்னாளிலே கந்தரோடைப் பட்டினத்தையும் கட்டினார்கள் என்பது கவிதையின் குறிப்பு பொருள்- 'கதிரமலையரசு' எனப்படும் கந்தரோடை அரசு கல்லுண்டாய்வெளி வரைக்கும் பரவியிருந்தது. என்பது புதைபொருள் - வரலாற்று ஆய்வாளர் சிலரின் கருதுகோள் கல்லுண்டாய் வெளியிலே தொடங்கப்பட்ட புதை பொருள் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வில்லை. இதனை, 'மண்பட்டினங்கள்' என்னும் பாட்டுக்குத் தரப்பட்டுள்ள பிற்குறிப்புகளிலி ருந்து நாம் அறிகிறோம்.

சிந்துவெளிலே தஸ்யுக்களின் எதிரியாக இருந்தவன் இந்திரன், தஸ்யுக்களை விரட்ட வந்த இந்திரக் குதிரைகளைப்போல (?), "போத்துக்கீசர், ஒல்லாந்த, சோழக் குதிரை களும் கடைசியில் சிங்களக் குதிரைகளும், நிவிரசக் குதிரைகளும்" ஆகிய இவை யெல்லாம் (வடக்கிலங்கைக்கு) வருகின்ற னவாம். இந்திரத் தரப்பின் பிரதிநிதிபோல, பாலகெமுனு வருகிறான்: "சப்புமல் குமா ரையா பேராசையால் விழிகள் பளபளக்க" வருகிறானாம் (பக்.14). இந்த விளக்கங்கள் எல்லாம், 'தஸ்யுமான்மியம் என்னும் பகுதி - 2 இல் வருகின்றன. பகுதி - 2 ஆனது, 'மண்பட்டினங்களை' மேடையில் நிகழ்த்திக் காட்டத் தேவையான உதவிக் குறிப்புகள் என்று கூறப்பட்டுள்ளது. (பக்கம் 10 பார்க்க)

'மண்பட்டினங்கள்' இன் இறுதியில் வரும் வரிகள் சில நமது விசேட கவனத்துக்கு உரியன.

"இதோ இந்திரன் படை கொண்டு வருகிறான்/ இடியோடு மழையோடு பீரங்கிகளோடு/இதோ/தஸ்யுக்கள் எழுகிறார்."

தஸ்யுக்களின் தற்காப்புத் தாக்குதலின போது எழும் குரல்கள் பின்வருமாறு-

"இந்திரனே ஓடு/இனியும் உனக்கு அவிர் பாகும் இல்லை/ அறுவடையில் பங்கும் இல்லை... பட்டினத்தின் மீது பட்டினம் எழும் / பட்டினத்தை எதிர்த்துப் /பட்டினம் எழும் / பட்டினத்தைப் பட்டினம் வெல்லும் /பட்டினங்கள் போர்ப் பட்டினங்கள்/ வீரப்பட்டினங்கள்/ வெற்றிப் பட்டினங்கள்.

இப்படித்தான் வன்னி இந்தப் பரிசோதனை நேரடியானதல்ல: இலேசானதும் அல்ல: கருத்தூன்றிப் படிக்க வேண்டியது: காத்தி ரமானது: முன்பின்னாக 'கொண்டுசுட்டிச்' சேர்த் துக் தெளிந்து கொள்ளப்பட வேண்டியது.

இதன் ஓட்டத்தை எளிமைப்படுத்தினால், இந்திரனுக்கும் தஸ்யுக்களுக்குமிடையே தோன்றும் தொடர் மோதலாக இதைக் காணலாம். இந்திரன் = ஆரியர்: தஸ்யுக்கள் - திராவிடர் = தமிழர் என்றும் இந்தக் கவிதையை வாசிக்கலாம்.

அப்படி வாசிக்கும் போது, கவிதையின் உள்ளடக்கமும் அடிப்படை நோக்கமும் சரியாகப் பிடிபடாமல் நழுவிவிடவும் கூடும். தமிழகத்துத் திராவிடக் கட்சியாளர் இராம - இராவண மோதலை ஆரிய - திராவிட - மோதலாகக் காட்ட எத்தனித்த காலத்தில், புலவர் குழந்தையின் 'இராவண காவியம்' எழுந்தது. அதன் கரிக்கேச்சர் போல, எம்.ஆர்.ராதா 'கீமாயணம்' என்ற நாடகத்தை உருவாக்கி, மிகப்பல மேடைகளில் நடத்திக் காட்டினார். அப்படி எல்லாம் ஊட்டம் பெற்ற 'திராவிட உணர்வு' இன்று என்ன ஆயிற்று? சிதைந்து, தேய்ந்து உருமாறிப்போய் உள்ளது. அந்தத் திரா விட எண்ணக்கரு, இன்றைய ஈழத்தின் சங்க டங்களை எப்படி எல்லாம் அலட்சியம் பண் ணிக் கொச்சைப்படுத்திப் பார்க்க முற்படு கிறது.

மிகை - எளிமையாக்கத்தின் ஆபத்துக்கள் பற்றி நாம் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

ஆனால், நிலாந்தனின் படைப்பு எளிமை யான ஒன்று அல்ல. இதனை நாம் ஏலவே அவதானித்தோம். அதனை மேலோட்டமா யேனும் கிரகித்துக் கொள்வதற்கு நாம் நிறைய முயற்சி செய்ய வேண்டும். கவிதை யின் 'பாடம்' ஒன்பது பக்கங்களைப் பிடிக்க, அதன் மேடையேற்றத்துக்கென எழுதப்பட்ட உதவிக்குறிப்புகள் பத்துப் பக்கங்களைப் பிடிக்கின்றன. இந்தக் குறிப்புகள் விசுவா சமாகக் கடைப்பிடிக்கப்பட்டால், அந்த ஆற் றுகை மிகவும் செழுமையாய் அமையும் என் பதில் ஐயமில்லை. எனவே, தவறான விளக் கங்கள் தவிர்க்கப்பட வேண்டுமானால், செம் மையான ஆற்றுகை இன்றியமையாதது என்பதை எவ்வளவு வற்புறுத்தினாலும் தகும்.

நிலாந்தனின் 'வன்னி மான்மியம்' நூலில் இடம்பெறும் நான்கு பரிசோதனைகளில், முதலாவது ஆக்கமாகிய 'மணபட்டினங்கள்' பற்றிச் சற்று விரிவாக இதுவரை கண்டோம். இனி ஏனைய மூன்று பரிசோதனைகளையும் பார்க்கலாம்.

**03**

இரண்டாவது ஆக்கம் பாலியம்மன் பள்ளு அல்லது ஓயாத அலைகள் மூன்று! 'படைப்புத் தொழில்' (The Act of creafion) என்னும் நூலில் ஆதர் கோஸ்லர்(Arthur Koestler) என்பார் 'ஈரோட்டு' என்னும் ஓர் எண்ணக கருவினை விரிவாக விளங்கப்படுத்தி உள் ளார். அதன்படி, முற்றிலும் வேறுபட்ட இருவேறு தளங்களிலுள்ள அம்சங்களி டையே எதிர்பாராத ஓர் ஒற்றுமையைத் திடீரெனக் கண்டறிந்து அதனை விருத்தி செய்து காட்டுவதே படைப்புத் தொழிலின் இரகசியம் என, கலை, இலக்கியம், அறிவியல், தொழில் நுட்பம் ஆகிய பல்வேறு துறைகளிலிருந்து எடுத் துக்காட்டுக்கள் பலவற்றைத் தந்து அவர் நிறுவுகிறார். அந்த விதமான bisociation களை, நிலாந்தனின் கலையாக்க நெறியிலும் நாம் அடிக்கடி சந்திக்கின்றோம் - 'வன்னி மான்மியத்தில்' இடம்பெறும் 'பாலியம்மன் பள்ளிலே' (i) அம்மன் வழிபாட்டில் ஓர் அங்கமாய் அமையும் சன்னதம், (ii) குருவிப் பாட்டுக்கு நாட்டார் வழக்கியலிலே தரப்படும் 'தமிழ் மொழி பெயர்ப்பு' - அதாவது "வாடா பாப்பம் கொட்டைப்பாக்கா" என்பது, (iii) எல்லாளன் கெமுனு கதையில் வரும் முரண்பாடு ஆகிய மூன்று அம்சங்களுள் ஒவ்வொன்றும் முறையே, (அ) கோப உருவேறிய போர் வீறு, (ஆ) "வாடா பாப்பம் கெமுனு குமார" என்ற அறைகூவல், (இ) நிகழ்காலத்துப் போர் முனைவுகள் என்பவற்றுடன் அருகருகாக வைக்கப் படுகின்றன. இங்கு, கோஸ்லர் கூறிய ஈரோட்டு களை நாம் இனம் காணுகிறோம்.

மூன்றாவதான, வன்னி நாச்சியாரின் சாபம்' என்னும் ஆக்கத்திலும் இதே மாதிரியான 'பை' கோசியேசன்களை நாம் சுட்டிக் காட்டலாம். தளபதி ட்றிபேக்குங்கும் பண்டார வன்னியனுக்கும் இடையிலான மோதல், பழைய வரலாறு. ஆனால் அதுபற்றிய செய்திக்கதைகளை மக்கள் இப்பொழுதும் பொன்னேபோற் போற்றிப் பேணி வருகிறார்கள். பண்டார வன்னியனின் தோல்வியைத் தாங்கிக் கொள்ள வன்னிநாச்சியாரால் இயலவில்லை.

"அவள் வழிபட்ட சிவனாலயத்தில் / துர்க்குறிகள் தோன்றின...பெருந்தீயை மூட் டினாள் / ஆபத்தில் தன் சகோதரனுக்கு உதவாத / அறுபத்து நான்கு கிரா மங்களின் பெயர்களை ஓலையில் எழுதி, அந்தத் தீயில் போட்டாள்... சபித்தாள்... பிறகு அந்தத் தீயில் பாய்ந்து / தன்னை மாய்த்துக் கொண்டாள்... அவள் சாபம் /ஊர்களின்மீது / குலைப்பன் காய்ச்சலாக வந்தது"

இப்படி ஒரு செவிவழிக்கதை கூறுகிறதாம்.

இந்தச் செவிவழிக் கதையையும் 'ஜெயசிக்குறு' என்ற 'வெற்றி நிச்சயம்' நடவடிக்கையையும் தொடுத்துக் கண்டு காட்டுகிறார். நிலாந்தன். இதுவும் ஓர் ஈரோட்டுப் படைப்பாக்கம் தான்.

செவிவழிக்கதைக்கு ஒரு பின்னிணைப்பையும் படைத்துத் தருகிறார் கவிஞர். ஜெயசிக்குறு புசுபுசுத்துப் போனமை. வன்னிநாச்சியாரின் முறுவலிப்பாகக் காட்டப்பட்டுள்ளது.

"தனது சகோதரனின் / பிதிர்க்கடனை / முடித்தாள்... / பிறகு துயிலப் போனாள்"

என்று மூன்றாவது பரிசோதனை முடித்து வைக்கப்படுகிறது. இதில், செய்தி கூறும் எடுத்துரைப்பாக வருவனவே, பெரும் பகுதியைப் பிடித்துக்கொள்ளகின்றன.

நாலாவதாய் வருவது 'மடுவுக்குப் போதல்' - பயணக்குறிப்புகள்' என்பதாகும்.

இந்தப் பயணம் நட்டாங்கண்டல் காட்டுப் பகுதியிலே தொடங்குகிறது. கைலாய வன்னியன், பண்டாரவன்னியன் ஆகியோரின் ஆள்புலங்களிலே நின்றாவது கர்ணபரம்பரைச் செய்தியோன்று நினைவு கூரப்படுகிறது.

"பாதி புதைந்த அரண் மனையின் / சிதிலங்களின் அடியில் / மறைத்து, வைக்கப்பட்டிருக்கும் பண்டார வன்னி யனின் வாளை எடுக்க / யாரோ ஒரு வீரன் வருவான் என்று / ஆறும் காடும் காத்திருப்பதாக / ஒரு வேட்டைப்பாடல் கூறுகிறது"

என்று தெரிவிக்கிறார் கவிஞர். ஒரு காலத்திலே, முன்னோரின் கதைகளைச் சொல்லி, புகழைப்பேசி, வாழ்ந்த நடைமுறை போய் மறைய, 'ராங்கிகள்' உறுமித் திரியும் போர்க்காலம் பிறகு வந்ததாம். காட்டின் நடுவிலே எரிந்த காப்பரண்கள். உடைந்த ஏவுதளங்கள், தகர்த்த பாலங்கள் அழிந்த விநியோக வழிகள் - இவற்றின் அச்சத் திலிருந்து விடுபடாத காடுகள் பெருமூச் செறிந்து கிடக்கின்றன. இவற்றின ஊடாகப் பயணம் தொடர்கிறதாம்.

பகல் 12.00 மணி. மருதமர நிழலில் மடுமாதா மினிர்கிறாளாம். "திறைகொடாக் காட்டின் / மூர்த்தம் அவள் / ஆறு கண்ட கனவு அவள் / நிழலற்ற வழிகளில் வரும் பயணிகளின் ஆறுதலும் அவள்."

பிள்ளையாரின் மூர்த்தங்களை வெவ்வேறு நோக்கில் வரைந்து காட்ட வல்ல ஓவியரான நிலாந்தன், மடுமாதாவின் மூர்த்தங்களையும் வெவ்வேறு கோணங் களிலே கண்டு காட்டுகிறார்.

"காணாமல் போன எங்கள் / வேட்டைக்காரரிற்கும் தாயாய் / காடுகளை மீட்டு வீரவாளின் கூராய்... காடுகளின் கேந்திரத்தே / வீற்றிருக்கிறாள் / நிச்சலனமாக"

என்று காட்டும் நிலாந்தன் மேலும் ஒரு செய்தியைத் தெரிவிக்கிறார். அந்தச் செய்தி எது? புதிய வேட்டைக்காரர்கள், புதிய வேட்டைப் பாடல்களோடு வருகிறார்களாம். அந்த வேட்டைப் பாடலின் முடிவு இது.

"காடு மாறிய பறவைகளே / வீடு திரும்புங்கள்/ அரசர்கள் ஆற்றங்கரையில் காலாற நடப்பார் இனி"

**04**

வன்னி மான்மியத்தின் அமைப்பியல்புகளை ஆடையாளம் கண்டு, அதன் உள்ளடக்கம் பற்றிய அறிமுகத்தையும் சுருக்கமாக மேலே தந்தோம்.

இந்த நூலிலே, 'மண்பட்டினங்கள்' என்பதையே தலைமைப் பாட்டாக நாம் கொள்ளலாம். ஏனையவற்றின் இழைப்புச் செறிவுகள். இறுகியும், இளகியும், சில இடங்களிலே ஐதாகவும் உள்ளன. படைப்பாளியின் தேவைப்பாடுகளுக்கு இசைவாக, இந்த அம்சங்கள் வேறுபட்டன போலும்.

இனி, நான்கு 'பரிசோதனைகளிலும்' ஈரோட்டு என நாம் விதந்து கூறிய அம்சம் எடுப்பாக மிளிர்கின்றது.

இவை பரிசோதனைகள் ஆகையால், வாசகர், சுவைஞர், திறனாய்நர் என்போரின் மதிப்பீடுகள் எப்படிப்பட்டனவாய் இருந்தாலும், நிலாந்தன் அவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கத் தயாராய் இருப்பார் என நாம் கருதலாம்.

அந்த வகையிலே மேலே தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பயன் உள்ள வையாய் இருக்கும் என எதிர்பார்ப்பது தவறாகாது.

புதுப்புதுப் பரிசோதனைகளில் நிலாந்தன் மேலும் மேலும் ஈடுபடுவாராக.

**முருகையன்**

பணத்தால் விசுவாசம் பெற முடியுமாயின், பணத்தாலேயே விசுவாசத்தை இழக்கவும் நேரிடும். - டென் மார்க் பழமொழி

# இளைய நாதம்



## புத்திசாலி

"... ஹலோ.. இது காமதேனு லொட்ஜ் தானே! ஆ..ஆமாம்.. யார் வேணும்...

எக்கவுண்டன் மாதவனோட கதைக்கவேணும்... மாதவன்ர அம்மா கதைக்கிறன்...

"மாதவன் வெளியே போயிருக்கிறார்... உங்கட நம்பரைச் சொல்லுங்கோ... வந்த உடனம் கதைக்கச் சொல்லுறன். பபரப்பில்லாமல் நம்பரை எழுதிக் கொண்டு போனை வைத்தான் மாதவன்.


"போனில ஆரு மாதவன்... இருந்து கொண்டே ஏன் இல்லை எண்டு சொல்லி வைச்சிட்டாய்... யாரு கேள் பிறண்ட் ஆருமே..? தெரிந்து கொள்ளும் ஆர்வம்... அடக்கமுடியாமல் கேட்டான் பக்கத்து இருக்கையிலிருந்த ஆதவன்.

சீ...சீ...என்னுடைய அம்மாதான்... சங்கடமில்லாமல் பதில் சொன்னான் மாதவன்.

அடப்பாவி... ஏன்ரா? பெத்த தாயிட்டகூடவா பொய்... ஏன்ரா நீயெல்லாம் ஒரு மனுசனா? இவ்வளவு தூரத்துக்கு அங்கால இருந்தும் உனக்கு தாய்ப்பாசம் இல்லாமல் போச்சுதாடா?

ஆத்திரத்தை அடக்க முடியாமல் வார்த்தைகளால் திட்டினான் ஆதவன்.

மாதவன் அதைப் பெரிது



படுத்தவுமில்லை கோபப் படவுமில்லை - ஆதவன் தான் மறுபடியும் கிளறினான். ஏன்ரா... என்ன பிரச்சினை... எனக்குக் கூட சொல்லக் கூடாதா... ஏன் மறைக்கிறாய்.... என்ன சொல்லு.... பிரச்சினை ஒண்டுமில்லையடா... அது... அம்மா கதைக்கேக்க நான் கதைச்சிருந்தா போண் காசு அம்மா கட்டவேணும்... இப்ப நான் எடுத்துக் கதைச்சா அலுவலகச் செலவோட சேர்ந்திடும்... அதனால தான்... சொல்லிக் கொண்டே போண் நம்பரைச் சுழற்றினான் மாதவன்... ஆச்சரியத்தால் கண்கள் விரிய அவனை நோக்கினான் ஆதவன்.

எம்.எஸ்.வரன்.
கிளிநொச்சி


## வாரம் ஒரு குறள் அறிவோம்



ஒருவனை ஒருவன் தீயினால் சுட்டு விட்டால் அது அப்பொழுதே ஆறிவிடும். ஆனால் அவனை நாவினால் சுட்டுவிட்டால் அது எந்தக்காலத்திலும் மாறாத வடுவாக காணப்படும். ஆகவே இளையவர்களாகிய நாம் கெட்ட வார்த்தைகளைக் கொண்டு யாரையேனும் வஞ்சிக்காது நல்ல வார்த்தைகளையே பேச வேண்டும் என்பதை வள்ளுவனார் இப்படிச் சொல்கிறார்.

"தீயினால் சுட்டபுண் உள் ஆறும் ஆறாதே
நாவினால் சுட்டவடு"

## அன்னை



உதிரத்தை உணவாக்கி
உயிரை வளர்ப்பவள்
உறவுகளை அறிமுகப்படுத்தி
உலகத்தை உணரவைப்பவள்
தீமையை அழிக்க
நன்மையை விளக்குபவள்
அன்பு எனும் பாசத்தையும்
பண்பு எனும்
ஒழுக்கத்தையும்
பண்பாட்டையும் ஊட்டி
என்னை உலகிற்கு கொண்டு
வந்த
உத்தமி என் அன்னை.

சி.துர்க்கா
கிளி/பிரமந்தனாறு
மகா வித்தியாலயம்.

## அறிந்து கொள்ளுங்கள்

01) பூநகரியில் தொல்லியல் ஆய்வு என்ற நூலை எழுதிய ஆசிரியர் யார்?
கலாநிதி பரமு புஸ்பரத்தினம்.

02) 94ம் ஆண்டு 11ம் மாதம் சுதந்திரப்பறவை வெளியீட்டின் தலையங்கம் என்ன?
வெளிநாடு செல்லும் பெண்களின் அவல நிலை.

03) யாழ்ப்பாண பல்கலைக்கழக பீடங்கள் எவை?
கலைப்பீடம், விஞ்ஞானபீடம், மருத்துவபீடம், விவசாயபீடம், வர்த்தகபீடம்.

40) இந்திய விண்வெளியின் தந்தை யார்?
டாக்டர் அப்துல் கலாம்.

05) சரியாக இரவு பன்னிரண்டு மணிக்கு மலரும் பூ எது?
நிஷா காந்திப் பூ

06) பல்கலைக் கழகம் இல்லாத மாநிலம் எது?
சிக்கிம்

07) தமிழ் வர்த்தக சேவையின் முதல் பெண் அறிவிப்பாளர் யார்?
புவனலோயினி.

பிரவீனா,
நல்லூர், முட்கொம்பன்.

## நகைச்சுவை




**மாணவன் 01:**
நான்கும் இரண்டும் தான் ஆறு.
**மாணவன் 02:**
இல்லை ஐந்தும் ஒன்றும் தான் ஆறு.
**கணிதஆசிரியர்:** டேய்! மொக்குப்பையன்களே மூன்றும் மூன்றும் தான்ரா ஆறு.
**ஒருவர்:** எடேய்! மடையன்களே ஓடினாத்தான்ரா ஆறு.

இ.ராஜ்குமார்
மு/புதுக்குடியிருப்பு ம.வி

## எது பலம்?

கதை: சு.கௌசிகா
தரம் - 07
ஓவியம்: சு.கௌரிசன்

01




## குறுக்கெழுத்துப் போட்டி 03

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | 02 | | | 05 |
| | | | 09 | |
| 11 | | 13 | | |
| | 17 | | 19 | |
| 21 | | 23 | | |

**இடமிருந்து வலம்**
01.அகத்தியர் தமிழ் வளர்த்த இடம்
09.தலை இறுதி எழுத்தை இழந்துள்ளது
11.இது இளமையில் கொடியது என்பதனால் குளம்பியுள்ளது.
17.பாத்திரம் குளம்பியுள்ளது.
21.இது சுடும்.
23.தண்ணீர்.

**மேலிந்து கீழ்**
01.இதைக்கடைப்பிடித்தல் நன்று
02.பொருட்களின் வகைகளில் ஒன்று
05.இதில் நிரந்தர நண்பனும் இல்லை. பகைவனும் இல்லை.
13.நிறங்களில் ஒன்று ஒரெழுத்தை இழந்துள்ளது.
19.முதலெழுத்தை இழந்த தீவு..

குறுக்கெழுத்துப்போட்டி -1 இற்கான விடைகள்

இடமிருந்து வலம்
01.தேங்காய்,
06.வத்தல்,
12.கடல்,
15.குற்றாலம்,
20.நாடு

மேலிருந்து கீழ்
01.தேவாங்கு
03.காதல்
05.நாடகம்

பாராட்டுப்பெறுபவர்கள்
01.சுந்தரி, நிதர்சனம்,முள்ளியவளை.
02.நா.கொண்சி, உடுப்புக்குளம், அளம்பில்
03.இ.செந்தூரன் கொக்காவில், துணுக்காய்.

இளையவர்களே!
கட்டங்களை தாள் ஒன்றில் வரைந்து சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.3
**வேள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.



# 'கணபதி கணேசன்' அகாலத்தில் இழந்து விட்ட ஒரு கவிதை




**கணபதி கணேசன்**

சிறுகதை எழுத்தாளன் - பத்திரிகையாளன் - கவிஞன் என பல்வேறு துறைகளில் தன்னை இனங்காட்டிய மனிதன். மிக இளவயதிலேயே இலக்கியத்துறையில் காலடி வைத்து அதை ஆழப்பதித்த ஆளுமை கொண்டவன். தமிழுணர்வாளன் தவறானவர்களை நம்பி அரசியலில் போராட்டத்திலும் ஆரம்பத்தில் தடுமாறினாலும் இறுதியில் தன்னை உரிய இடத்தில் நிலைநிறுத்திக் கொண்டவன். பல நூல்களின் ஆசிரியன் அகால வயதில் எமைப்பிரிந்துவிட்டான்.

ஆர்ப்பாட்டமும், பரபரப்பும், கொண்ட இலக்கிய வாதிகளிடையே அமைதியாக தன்னாலான தமிழ்ப்பணியைச் செய்தவன். இது அவரின் நினைவாக..

கணபதி கணேசனின் அண்மைக்காலப் படைப்புகளை உள்ளடக்கிய குருதி பூத்த 'வெள்ளரசு' கவிதைத் தொகுதிக்கு உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர் வழங்கிய அணிந்துரையும் அத்தொகுப்பில் உள்ள 'ஒரு யாழ்ப்பாணத்து மரணம்' கவிதையும் அந்தக்கவிஞன் குறித்த உங்களின் கணிப்பீட்டுக்காக கீழே......

கடலைத் தாண்டின
கணபதி கணேசன்
உடலும் உயிரும்.
தாயகத்திலேயே தரித்தன அவர்
தமிழ்நெஞ்சும் உணர்வும்.
அவரை நான் அறிவேன்.
தமிழீழ மண்ணில் ஆழ
வேரூன்றிய
எங்களூர்க் கிணற்றடிச்
செம்பருத்தியாய்
அவர் தமிழ்.
சிவப்பு எழுத்துக்கள்.
போர்க்களத்தின் சீற்றமும்
பொருமலும்
பொங்கி அலையெறியும் தமிழ்க்
கோலம்.
பெருமூச்சுக்களின் வெடிப்பு.
கணபதி கணேசனின் எழுதுகோல்.
கால் ஒடிந்து நடைதளர்ந்த
தமிழினம் கைபற்றி நிமிரும்
உன்றுகோல்.
இலக்கியத் திறனாய்வாளர்
சொல்வதுபோல் காலத்தின்
கண்ணாடிதான்
இலக்கியம் என்பதால்-ஈழத்தின்
கண்ணாடியாகவும்
அவர் படைப்புக்கள்.
மண்ணின் முகங்களோடு
தமிழின் மலர்வு.
எழுத வேண்டும் அவர்
இன்னும் இன்னும் என்பதே என்
ஆசை.
உலகத்தைப் பற்றி எல்லாருமே
இலக்கியங்கள் உருவாக்கி
ஆயிற்று.
இன்றைய தேவை
உலகத்தைக் காப்பாற்றும்
தமிழன் அல்ல - தமிழனைக்
காப்பாற்றும் உலகம்.

**உணர்ச்சிக் கவிஞர்.காசி ஆனந்தன்**

## ஒரு யாழ்ப்பாணத்து மரணம்!

எல்லாம் ஆயிற்று !

செத்துப்போன அம்மாவின்
பாதங்களை இணைத்து
கால்பெருவிரல்களில்
கட்டுப் போட்டாயிற்று!

கிழக்காசிய நாடு ஒன்றில்
வேறு பெயரில் வேறு
மனிதனாய்
வாழ்ந்து கொண்டிருக்கும்
கணவனுக்குத்
தொலைபேசி செய்யச் சொல்லி
கொழும்புக்கு ஆள்
அனுப்பியாயிற்று!

தகவல் கிடைத்தாலும்
பணம்தான் வரும்;
ஆள்வராது என்பது
அவளுக்குத் தெரிந்ததே!

ஊருக்கும் உறவுக்கும்
சொல்லி அனுப்பியாகி விட்டது!
இன்னும் கொஞ்ச நேரத்தில்
எல்லோரும் வந்து
விடுவார்கள்!

எல்லாம் ஆயிற்று!

கண்களின் மையப் புள்ளியில்
பதிந்திருந்த குண்டை
எடுக்க வேண்டாம் என்று
இவளே
மருத்துவரிடம்
சொல்லியிருந்தாள்! மரண
விசாரணை அறிக்கையிலும்
அதைக் குறிப்பிடும்படி
வேண்டிக் கொண்டாள்!
இதைக் காரணம் காட்டியே
நாளை யாராவது
ஐரோப்பிய நாடு ஒன்றில்
அடைக்கலம் கோரலாம்!

மரணத்தின் செய்தி எல்லோர்
முகத்திலும் எழுதப்பட்டிருக்க;
அம்மாவின் முகத்தில் மட்டும்
முத்திரையாய்ப் பதிந்திருந்தது!

'சுண்ணம்' இடிக்க
உரலும் உலக்கையும்
பக்கத்து 'சோமர்'
வீட்டில் இரவல் வாங்கி
வந்து போட்டாயிற்று!

யார் வேண்டுமானாலும்
இறந்து போகலாம்!
ஆனால் -
மரணம் மட்டும்
வாழ்ந்து கொண்டிருக்கும்!

நோர்வே நாட்டின்
உணவு விடுதி ஒன்றில்
பீங்கான் தட்டுக் கழுவும்
இயந்திரம் ஒன்றின் எடுபிடியாய்
இருக்கும் மூத்த மகனுக்கு;
செய்தி அனுப்பும் பணியை
வாத்தியார் 'வளையல்'
பெரு மனதுடன் ஏற்றுக்
கொண்டார்!

அங்கிருந்து -
அவன் அனுப்பும் பணம்
அவர் அக்கவுண்டுக்குத்தான்
வரும்!

பறையடிக்க 'ரத்தினத்து'க்கும்
சவக்கிரியை செய்யப்
பிள்ளையார் கோவில்
ஐயருக்கும்
இவளே போய் -
செய்தி சொல்லி வந்தாள்!

எல்லாம் ஆயிற்று!

இந்தியாவில் ஆங்காங்கே
அகதிகளாயும் அதிதிகளாயும்
அலைந்திருக்கும் உறவினர்கள்
எல்லோருக்கும் தகவல்
சொல்ல,
'கட்டை வாத்தி'
தன்னைத் தானே
நியமித்துக் கொண்டார்!

எல்லாத் தேசங்களிலும்

உதிரமும் உறவும்
பிரிந்திருக்க - இவளும்
தாயுமே
தாயகத்தில் தனித்திருந்தனர்!
இப்போது இவள் மட்டும்!

ஆஸ்திரேலியாவில்
மாட்டுப் பண்ணை ஒன்றில்
புல் வெட்டிக் கொண்டிருக்கும்
கடைசித் தம்பிக்கும்
செய்தி அனுப்பியாகி விட்டது!
சித்தி பெண்கள் ராணியும்
கலாவும்
பெரியம்மாவுக்கு மாலை
கட்டிக் கொண்டிருக்கின்றனர்!
எல்லாம் ஆயிற்று!

என் தம்பி எவ்வளவு
பணம் அனுப்பினான;
என் புருஷன் என்ன
பார்சல் அனுப்பினான்;
என் மகன் எவ்வளவு
பணம் அனுப்பினான்;
யாழ்ப்பாணத்தின் -
பொருளாதாரச் சந்தை ஒன்று
இன்றைய இழவு வீட்டில்
அரங்கேற இருக்கிறது!


எல்லாம் ஆயிற்று!

தமிழகத்தில் மருத்துவம்
படிக்கும் இளைய மகள்
அனுப்பிய புதுப்புடவை
தாயாரின் இறுதிப்
பயணத்துக்குத்
தயாராக இருக்கிறது!

எதிர் வீட்டுப்
பரமு அண்ணர்
கொடுத்துச் சென்ற
பணக் கட்டுப் பையில்
தயாராக இருக்கிறது!
தம்பிகள் பணம் அனுப்பியதும்
திருப்பிக் கொடுக்க வேண்டும்,
வட்டி போட்டு!

எல்லாம் ஆயிற்று!
எல்லா ஏற்பாடுகளும் தயார்!
இனி அழ வேண்டியது தான்!
அம்மா! ஐயோ! அம்மா!

## பன்முகம் -05



## அறச்சொல்

**கவிஞர்களின்** வாய்ச் சொல்லும் பலித்துவிடும் என்பது பலரது அனுபவக் கூற்று. அவர்கள் வாயால் வசைச் சொற்கள் பாடக் கேட்கக்கூடாது. திட்டு வாங்கக் கூடாது என்பது அவர்கள் கருத்து. அதன் பொருட்டே அந்நாளில் அரசவையில் கவிஞர்கள் மன்னர்களை ஏற்றிப் புகழ்ந்து பாடுதலும் அவர்களது புகழுரைகளைக் கேட்ட புரவலர்கள் புளகாங்கிதம் அடைந்து பரிசில்களை பொன்னாகவும், பொருளாகவும் அள்ளிக் கொடுத்தனர் என்பர்.

அமங்கலமான சொற்களால் பாடப்படுதலை அறம் பாடுதல் என்பர். இது விடயத்தை எண்ணும் போது எங்கள் வீட்டில் முதியவர்கள் சொன்ன சில சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவரான வன்னியூர்க் கவிராயர் என்ற புனைபெயருடைய திரு. எஸ். எல். சவுந்தரநாயகம் சிறந்த கவிஞரும், சிறுகதை ஆசிரியருமாவார். அதேவேளையில் சிறந்த இயற்கை வைத்தியராகவும் திகழ்ந்தார்.

"ஈழத்துக் காவிய தீவகம்" எனும் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்ட இவர் "அமுத கங்கை" எனும் பெயரில் தனது கவிதைத் தொகுப்பினை வெளியிடக் கண்ட கனவு நனவாகுமுன்னரே அமரராகி விட்டார்.அதிலும் வேதனைக்குரிய விடயம் என்னவெனில் அதுவரை காலமும் பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் வெளிவந்த கவிதை, கதைகளின் கோப்பும் அவரது கையெழுத்துப் பிரதிகளும் இடப்பெயர்வுகளில் இல்லாமற்போனது தான்.

வன்னியூர்க் கவிராயரின் தந்தையார் சந்தியோகுப்புலவர். சந்தியோகுப் புலவரின் தந்தையார் விசேந்திப் புலவர் என புலவர் பரம்பரையில் வந்தவரே வன்னியூர்க் கவிராயர்.

வன்னியூர்க் கவிராயரின் தந்தையரான சந்தியோகுப் புலவரிற்கு ஊரில் அனைவர் மத்தியிலும் நல்ல மதிப்பு உண்டு. கத்தோலிக்கரின் தவக்காலம் ஆரம்பிக்கும் திருநீற்றுப் புதனுக்கு முதல் நாளான செவ்வாய்க்கிழமை முட்டையடிப் பெருநாளாக கொண்டாடும் வழக்கு ஒன்று உண்டு. நண்பர்கள், உறவினர்கள், போவோர், வருவோர்க் கொல்லாம் முட்டை அடித்துக் கேலி செய்து விளையாடுவார்கள்.

சந்தியோகுப் புலவரின் மைத்துனர் முறையான சுப்பர் ஒரு முறை இந்த விழாவன்று புலவரின் தலையில் முட்டை அடித்து விட்டார். புலவரும் மைத்துனர் மீது வஞ்சகம் இன்றி ஒரு பாடலைப் பாடினார்.

''முட்டையடித்திடு மைத்துனர் சுப்பர்க்கு
மெத்தவும் நலமுண்டாம்
பெட்டையொருத்தி சீக்கரம்
வருவாள்
பேய்தனமாய் நடப்பீராகில்
வெட்டுவாள்ளாகப் பையினால்
அப்பொழுது நல்ல மதி
வருந்தானே.

இந்தப் பாடல் பாடப் பெற்ற சில காலத்தில் சுப்பருக்கு திருமணம் நடந்தேறியது. சுப்பர் ஒரு கட்டி வைத்தியர். நோயாளி ஒருவரின் கட்டிக்குக் கத்தி வைத்தபோது அது சறுக்கி சுப்பரின் தொடையில் பட்டு ஆளமான காயமொன்றை ஏற்படுத்தி விட்டது. இந்தக் கத்தி வெட்டானது ஏற்பாக்கி சம்பவம் நடந்த எட்டாம் நாள் ஏற்புவலி கண்டு சுப்பர் இறந்து போனார். சுப்பரின் சாவுக்கு கத்தி வெட்டு காரணம் என்பதை விட புலவரின் பாடல்தான் காரணம் என்று அன்று பலரும் நம்பினர்.

ஏனெனில் பாடலில் வரும் "வெட்டுவாளகப்பையினால்" என்ற வரியில் "வெட்டுவாள்" என்பது "வெட்டும் வாள்" என்ற பொருளைக் கொண்ட அமங்கலச் சொல்லாக அறச்சொல்லாக அமைந்த படியாற்றான் இந்த அவலம் நிகழ்ந்தது என்பர்.

இதே போன்று அந்நாளில் அபூபக்க நைனார் எனும் ஒரு புலவர் வாழ்ந்தாராம். அவர் தினமும் காலை உணவாக உட்கொள்வது ஒரேஒரு அப்பம் மட்டுந்தானாம். புலவரின் மனைவியார் அப்பம் கொண்டு வந்து வைக்கவும் புலவர் எழுந்து கிணற்றடிக்குப் போய் வந்தாராம். அவர் திரும்பி வருகையில் பூனை ஒன்று அவருடைய ஒரே அப்பத்தை தின்று கொண்டிருப்பதைக் கண்டார். புலவரைக் கண்ட பூனை ஓடிவிட்டது. புலவருக்கோ அன்று காலை தன்வயிற்றில் அடித்துவிட்ட பூனையின் மீது அடங்காத ஆத்திரம். எனவே பூனை மீது புலவர் இப்படிப் பாடினார்.


"அபூபக்க நைனார்
என்றறியாயோ பூனையே
அறிந்திருந்தும் அப்பத்தைத்
தின்றாயோ பூனையே
தின்றாலும் அது உனக்குச்
செமிக்குமோ பூனையே
செமித்தாலும் உயிரோடு
இருப்பாயோ பூனையே

புலவர் பூனைமீது இந்தப்பாடல் பாடிய சில மணி நேரத்தில் பாவம் அந்தப் பூனை இறந்தே போய் விட்டதாம்.

புலவர்கள் வாய்தவறியும் அமங்கலச் சொல்லால் அடுத்தவரைத் திட்டவும் கூடாது, அவர்கள் வாயால் திட்டு வாங்கும் படியாக மற்றவர்கள் நடந்து கொள்ளவும் கூடாது என்று எங்கள் வீட்டில் முதியவர்கள் சொல்லுவார்கள்.

**நாவண்ணன்**

# தாய்லாந்து - சமாதானப் பேச்சின் - புதுப்பரிமாணம் பயணமும் - பார்வையும்



**தாய்லாந்தின்** 2ம் கட்டப் பேச்சுக்களின் நான்காம் நாள் விடிந்தது. காலை 7 மணிக்கு நாம் இருந்த அறைக்கு எம்மை வருமாறு ஒரு அழைப்புக் கிடைத்தது.

TTN, ATBC என்ற அவுஸ்ரேலிய தமிழ் வானொலி ஒலிபரப்பு - மற்றும் நாம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூம் ஹக்கீமை செவ்விகாண அந்த அழைப்புக் கிடைத்தது. மலையக மக்கள் முன்னணித் தலைவர் அமைச்சர் பெ. சந்திரசேகரனின் செயலாளர் விக்கிரமசிங்கம் என்பவரே அந்த செவ்விக்கான ஏற்பாட்டைச் செய்தவர்.

ஹக்கீமின் அறைக்குச் சென்று செவ்வியை ஆரம்பித்தோம் TTN குகன் படப்பிடிப்பாளர்-டென்மார்க் சிவா, ATBC யின் கோகுலன், நிதர்சனம் சேரலாதன், தவா ஆகியோர் இதில் பங்குபற்றினர்.

அந்த செவ்வியில் வெளியான ஒரு முக்கிய விடயத்துக்காகவே இதனைக் குறிப்பிடுகின்றேன்.

முஸ்லிம்களுக்கு தனி அலகு வேண்டும் என்ற கோரிக்கையை ஹக்கீம் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி விட்டுத்தான் 2ம் கட்டப் பேச்சுகளுக்கு வந்தார்.

அது விடயம் குறித்து கேள்விகளைக் கேட்டபோது முஸ்லிம் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும் என்ற புதிய கருத்தை அவர் முன்வைத்தார்.

முஸ்லிம்களுக்கு தனிச்சுயநிர்ணய உரிமை உண்டு. அது வழங்கப்பட வேண்டும் என ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர் தாயகப்பகுதியில் வாழும் தமிழர், தமிழ் பேசும் மக்கள் யாவருக்குமான சுயநிர்ணய உரிமைகளை பெறவே விடுதலைப்போராட்டம் தொடர்கின்றது. இதில் நீங்கள் புதிதாக சுயநிர்ணய உரிமை கேட்பது யாரோ விதைக்க, யாரோ அறுவடை செய்வது போலிருக்கிற தல்லவா எனக் கேட்டபோது.

தாம் அரசியல் ரீதியாக தொடர்ந்து போராடிவருவதாகவும், ஆயுதப் போராட்டம் போல் - இதுவும் ஒரு வலுவான போராட்டம் எனவும் - இதன் விளைவாகவே தாம் முஸ்லிம்மக்களுக்கு சுயநிர்ணய உரிமைகளை கேட்பதாகத் தெரிவித்தார். ஆனால் இந்த நேரத்தில் தான் முஸ்லிம்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்று கேட்பதற்கு நேரம் வந்ததா எனக் கேட்டபோது.

தாம் நீண்டகாலமாக முஸ்லிம்களுக்கு சுயநிர்ணய உரிமைவேண்டும் எனக் கேட்டு வந்ததாக அவர் குறிப்பிட்டார்..

இப்படி இவர் கேட்டதாக எந்த ஒரு செய்தியிலிருந்தும் எமக்குத் தெரியவில்லை. இந்தளவில் அவருடனான நேர்காணல் முடிய ஹக்கீம் அங்கிருந்து புறப்பட்டார்.

காலை 9 மணிக்கு பேச்சுக்கள் ஆரம்பமாகிவிட்டன.

நாம் றோஸ்காடன் விடுதியில் பல வண்ணக்கிளிகள், மைனாக்கள் இருந்த ஒரு உணவகத்துக்குச் சென்றோம். சென்றது உணவு உண்பதற்காக அல்ல அந்தப் பறவைகளைப் பார்ப்பதற்காக.

அந்தக் கிளிகளும், மைனாக்களும், அங்கு வருவோர் கூறுவதை திருப்பிக் கூறிக்கொண்டிருந்தன, மிகுந்த தெளிவாக அவை திருப்பிக் கூறின. நாமும் அவற்றுக்குக் கிட்டவாகச் சென்று வணக்கம் என்றோம். கிளி-'வ' எழுத்தை விட்டுவிட்டு 'ணக்கம்' என்று தெளிவாக கூறிவிட்டு அஹ்ஹ்...ஹஹ்ஹா எனச் சிரித்தது சிரிப்புக் குரல் உயர் சுருதியில் (Pitch) இருந்தது.

மைனாவும் 'ணக்கம்' என தெளிவாக கூறிவிட்டு - தாழ் சுருதியில் 'ணக்கம்' எனக் கூறிவிட்டு உயர்சுருதியிலும் தாழ் சுருதியிலும் மனிதரைப் போல் சிரித்தது. ஒருவியப்புக்குரிய விடயம்தான். கிளிகளுடன் மேலும் பேசுவோமென்றால் - உல்லாசப் பயணிகள் நெருக்கியடித்துக் கொண்டிருந்தனர்.

இதன் பின் - அங்கிருந்த விடுதி மண்டபங்களைப் பார்க்கச் சென்றோம். அங்கு இரவு நேரம் உல்லாசப்பயணிகளை கழிப்பில் ஆழ்த்தி உணவகங்களில் உணவு உண்ணப் பண்ண (காசு சேர்க்கத் தான்) இசை நிகழ்ச்சிகளுக்கும், பெண்கள் கவர்ச்சி நடனங்களுக்கும் (தமிழ் சினிமாக்களில் வில்லன்கள் விடுதியில் பெண்கள் கவர்ச்சி நடனத்தில் மூழ்கியிருக்க நடனக்காரனாக கதாநாயகனும், நாயகியும் அடி வில்லன்களை வீழ்த்தும் சாகசத்தை நினைக்கிறீர்களா) தயாரிப்புக்கள் நடந்து கொண்டிருந்தன.

மீண்டும் பேச்சுவார்த்தை மண்டபப் பக்கம் திரும்பினோம். தாய்லாந்து படையினர் எம்மைப் பார்த்து உறுமிப் பேசினர். என்ன பேசினார்களோ எமக்கு விளங்கவில்லை.

பின்னர் அங்கிருந்து நகர்ந்தோம் அப்போது தான் தென்பட்டது ஒரு இடம் - ஒருபெரிய வரைபடம் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தது. அதனைச் சுற்றிநின்று தாய்லாந்து கொமோண்டோ தலைவர்கள் கதைத்துக் கொண்டிருந்தனர்.

அப்பால் மோப்ப நாய்கள் நாக்குகளைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தன. ஆண், பெண் அதிகாரிகள் சீருடையில் உரையாடிக் கொண்டிருந்தனர்.

ஏதோ ஒரு போர்முனைத் தலைமையகம் மாதிரி அது இயங்கிக் கொண்டிருந்தது. ஆனால் அது - பேச்சுவார்த்தைப் பிரதிநிதிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளாகும்.

இப்படியாக உலவிக் கொண்டிருக்க மதிய நேர இடை வெளி அரசுப்பிரதிநிதிகள் வெளியே வந்தனர். செய்தியாளர்கள் அவர்களை மொய்த்துப் பிடித்தனர் அவர்களில் G.L. பீரிஸ் கூறினார்.. விடுதலைப்புலிகள் வடக்குக் கிழக்கில் இடைக்கால அரசு அமைப்பது என்ற திட்டம் கைவிடப்பட்டதாக மேலதிகமாக எதுவும் கூறவில்லை.

றவூப் ஹக்கீமை செய்தியாளர்கள் மொய்த்தனர். அவர் காரணங்கள் முழுதையும் கூறி விட்டார்.

பேச்சுக்கள் முடியும் வரை இருதரப்பு பிரதிநிதிகளும் பேச்சுக்களின் விடயங்களை வெளியிடக் கூடாது என்பது நோர்வே அனுசரணையாளர்கள் கூறிய கட்டுப்பாடு. ஆனால் இது அரசுப் பிரதிநிதிகளுக்கு இல்லைப் போல் தெரிந்தது. அதிலும் றவூப்ஹக்கீமுக்கு அதிலிருந்து முற்றாக விலக்களிக்கப்பட்டது போல் தெரிந்தது.

அந்தளவுக்கு பேச்சுக்களின் நிலவரங்கள் பற்றி அவர் தாராளமாக தகவல்வெளியிட்டார். 3ம் நாள் மாலை பேச்சுக்களின் முடிவின் பின் மீண்டும் அரசுப் பிரதிநிதிகளை செய்தியாளர்கள் சுற்றி வளைத்தனர்.

G.L பீரிஸ் கூறினார் - வடக்குக் கிழக்கு புனர்நிர்மாணத்துக்கென உபகுழு ஒன்று அமைக்கப்பட்டதாகவும் - இரு தரப்பிலும் தலா 4பேர் இருப்பர் என்றும் - அதன் தலைமையகம் கிளிநொச்சி அரச அதிபர் செயலகத்தில் அமையும் எனவும் அரச குழுவுக்கு சமாதான செயலகப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக தலைமை வகிப்பார் எனவும் குறிப்பிட்டார். அத்துடன் இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண - உலக நாடுகளில் இந்தவகையில் தீர்க்கப்பட்ட பிரச்சினைகள் - திட்ட வரைபுகள் பற்றி அரசு - விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் நேரடியாக உரிய நாடுகளுக்குச் சென்று ஆராய்வதென்றும் - தேவைப்படின் நிபுணர்களை இலங்கைக்கு வரவழைத்து ஆராய்வதென்றும் அரசு தரப்புக் குழுவில் தானும் (G.L பீரிஸ்) றவூப் ஹக்கீம் உட்பட நால்வரும் - தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் உட்பட நாலுபேரும் அங்கம் வகிப்பர் எனவும் மேலதிக தகவல்களை வெளியிட முடியாது எனவும் கூறினார்.

சரி மேலதிக தகவல்களுக்கு ஹக்கீமை அணுகினார்கள் செய்தியாளர்கள், புனர் நிர்மாணஉபகுழுவில் அரசு தரப்பில் பேர்னாட் குணதிலக, M.D.D. பீரிஸ், முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் M.H.M, றபீக், வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கை பற்றி செயற்பட மன்னாரைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரும் நியமிக்கப்படுவர் எனவும் கூறினார்.

விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர். சு.ப.தமிழ்ச்செல்வன், வே.பாலகுமாரன், நிர்வாகசேவைப் பொறுப்பாளர். பூவண்ணன், ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் அங்கம் வகிப்பதாகவும்.

உயர்பாதுகாப்பு வலய விவகாரத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் - கேணல் கருணா, கேணல் பதுமன், கேணல் ஜெயம், கேணல் தீபன், கௌசல்யன், திலக், எழிலன், இளம்பருதி ஆகியோர் அங்கம் வகிப்பர் எனவும் தெரிவிக்கப்பட்டது.


அரசதரப்பில் தலைவராக பாதுகாப்பு அமைச்சுச் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோ இருப்பார் எனவும் ஏனையோர் நியமிக்கப் பட வில்லை எனவும் ஹக்கீம் கூறினார்.

2ம் கட்டப் பேச்சுக்கள் பெரும்பாலும் முடிவுக்கு வந்தன. 3ம் நாளில் - அடுத்தநாள் செய்தியாளர் சந்திப்பில் வெளிவர வேண்டிய தகவல்கள் 3ம் நாள் மாலையே வெளிவந்துவிட்டன.

3ம் நாள் இருண்டு போனது.

(மேலும் வரும்)

**தி.துவபாலன்**



## பாதுகாப்பு 'வளையங்கள்' கரணம் தப்பினால் மரணமா?



**இராணுவ** கட்டுப்பாட்டு பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்கள் சமாதான பேச்சுக்களில் தடங்கலை ஏற்படுத்துமோ என்பதான அச்சம் அண்மையில் நிலவி வருகிறது.

இராணுவம் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மக்களின் பிரதேசங்களில் நிலை கொண்டுள்ளது. சாதாரண இராணுவ முகாம் அமைப்பை விடுத்து பெரிய இராணுவ வலயங்களையே அவர்கள் அமைத்துள்ளனர்.

அவ்வலயங்களின் உள்ளும் அவர்களுக்கு பாதுகாப்பு பற்றி சந்தேகமோ என்னவோ தெரியவில்லை. அவ்வலயங்களைச் சுற்றி வளையங்கள் (முட்கம்பி) இட்டிருக்கிறார்கள்.

ஓர் இராணுவ முகாமெனின் முதலில் கண்ணி வெடிவயல்கள், நிலப்படுக்கை முட்கம்பி அமைப்பு, பின்னர் முட்கம்பிச் சுருள்கள் எனத் தொடரும் பாதுகாப்பு அமைப்பு வீதிகளிலும் தொடர்வதே அவலம். நல்லவேளை கண்ணி வெடிகள் மட்டும் இல்லை.

ஒரு A தரத்து பிரதான வீதி எனின் அதன் இரண்டு கரைக்கிடையாக அவ்வீதியின் அகலம் என்பது தனியே 25 அடிகளாக வரையறுக்கப்பட்டு இருபுறமும் முட்கம்பிச் சுருள்களை வேலியாக அடுக்கியிருக்கிறது இராணுவம். இவ்வாறானதொரு இடைவெளிக்குள் ஓடும் கனரக வாகனங்களை விலத்தி சைக்கிலோ அல்லது மோட்டார் சைக்கிலோ ஓட்டுவது என்பது அபாயகரமானது. ஆனாலும் இதற்குள்ளாகவும் மக்கள் வாகனங்களை ஓட்டுகிறார்கள் என்பது திறமையே. உண்மையில் இவர்களுக்கு வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரங்கள் (லைசன்ஸ்) பரீட்சை இன்றியே கொடுத்து விடலாம் என எண்ணத் தோன்றுகிறது.

தவறுதலாக வீதிவிபத்து ஒன்று ஏற்படுமிடத்தில் ஏற்படும் சேதம் என்பதை நினைத்துக் கூடப்பார்க்க முடியாத அளவிற்கு இந்த வளையங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. வீதியால் செல்பவர்களை பெரும் சிரமத்திற்கும் பீதிக்கும் உள்ளாக்கும் இவ்வளையங்களை நீக்குதல் என்பதே பாதி இயல்புநிலையை கொணர்விக்கும் என்கிறார் ஒருவர். சமாதானப் பேச்சுக்கள் - சமஷ்டி - உச்சபாதுகாப்பு வலயம் என நீளும் பெரிய விடயங்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை என்றால் காரணம் இவ்வாறான வளையங்கள் போல பல சிறு விடயங்கள் தீர்க்கப்படாமையே ஆகும். **சின்னச் சின்ன பிரச்சினை தீர்க்கப்படுமாயின் பெரிய பிரச்சினை தானாக தீர்க்கப்படும்.**

**விஜயன்**








## இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் 'லக்பொஹொர' வடபகுதிக் களஞ்சியத்தினர் விடுக்கும் நற்செய்தி!

வடபகுதி விவசாயிகள், அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள் விவசாய சேவை நிறுவனங்கள் கூட்டுறவுச்சங்கங்கள், தொகை சில்லறை வியாபாரிகள் அனைவரும் விவசாயத்திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட தரமான உரம், விவசாய இரசாயனம், விவசாய உபகரணங்கள் என்பவற்றை நியாய விலையில் பெற்றுக்கொள்ள

(சி-7531) **வேலும் மயிலும் களஞ்சியம்**

353, முதன்மைச்சாலை. (ஈழநாதம் பணிமனை முன்பாக) கிளிநொச்சி.

ஈழ மண்ணில்

**லாலா** சோப்

தயாரிப்பான

**சன்சயின்**

பாவித்துப் பயனடையுங்கள்

**லாலா**

சோப் தொழிற்சாலை

அச்சுவேலி

(சி-7226)

## பேர்ணில் தமிழ் நாடகக்குழுவினர்

# மக்களின் மனதில் நுழையும் நாடகம்



**சுவிஸ** பேர்ணில் தமிழருக்கான ஒரேயொரு நாடகக்கல்லூரி. தனது நாடகப்பட்டைய விழாவினைக் கொண்டாடுகின்றது. சிலாஹற் கௌஸ் அரங்கில் நிகழ்த்திக் காட்டிய கடலம்மா, மலையப்பா போன்ற நாடகங்கள் கற்கை நெறியை நிலைநாட்டுவதுடன் எம் சிந்தனையையும் மாற்றியது.

தமிழ் கலாச்சாரமன்றம் லுற்சேர்னில் (தமிழ் மன்றம்) நாடகக்கலைஞர்கள் தம்மைத் தயார் படுத்திக் கொள்கிறார்கள். புத்தளித் தலினால் திரு. ஊர்ஸ் அன்டர்ஸ் கிராவ் இயக்குநர் மலையப்பா ஒரு காட்சியை ஒத்திகை பார்க்கிறார் அக்காட்சியானது. தமிழ்க்கலாச்சார விழாவிற்கு வருகை தந்திருந்த சுவிஸ் பிரஜையான 'பிரதமவிருந் தினர் ஒருவர் விழாவில் வரவேற்பு நடனமாடிக் கொண்டிருந்த தமிழ் நண்பியை மேடையில் வைத்து தழுவ முற்பட்ட போது ஏனைய சில தமிழர்கள் தடுத்து பிரதம விருந் தினரை தூசிக்கின்றனர். இது ஒரு புது முயற்சியல்ல புலம் பெயர் வாழ் வில் நாளாந்தம் நடைபெறும் ஒரு நிகழ்வாகவே இக்காட்சி அமைக் கப்பட்டுள்ளது.

பல் கலாச்சார நிகழ்வு இலகுவானதல்ல.

அன்ராஸ்கிரால் என்பவர் மலையப்பா எனும் நாடகக்கருவை பலமுறை நாடகக் கலைஞர்களுடன் கலந்தாலோசித்து எழுதியிருந்தார். அகதியாக புலம் பெயர்ந்த பெற்றோருக்கும் சுவிஸ்ஸில் பிறந்த பிள்ளைகளுக்குமான உறவு நிலையை பண்பாட்டை சித்திரிக்கும் வகையில் மலையப்பா நாடகம் உருவாக்கப் பட்டுள்ளது.

முதற்தலைமுறை தாயகத்திற்கு திரும்பும் கனவிலும், தமது கலாச் சாரத்தினை முழுமையாகக் கைக் கொள்ள வேண்டும் என இருக்கும் பொழுது, இரண்டாம் மூன்றாம் தலைமுறையினரான குழந்தைகளும் இளையவரும் இருகலாச் சாரச் சூழலில் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக இன்றைய நாட்களில் காதல் விடயங்களில் பல தரப்பட்ட இரக்கமற்ற அளவீடுகள் முரண்பாடுகளுக்கான பதார்த்தமாகின்றது.

கிராவ் அவர்கள் தமிழ் நாடகக் கலைஞர்களுடன் இணைந்து ஒத்திகை பார்க்கையில் ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி உடல்ரீதியான தொடுகைக் காட்சிகளைப் பொருட்படுத்தாது இயல்பாக இணைந்து செயலாற்றும் தன்மை மிகுதியாக இருந்ததையும், அதனை மேடையில் தமது தமிழ்ப்பார்வையாளர்களின் முன்பு நிகழ்த்துகையில் ஆண், பெண் களுக்கிடையிலான சிறு உடற் தொடுகைகளைக்கூட கையைப் பிடிக்கும் காட்சிகளில் தவிர்ப்பதை அவதானித்தார். இது தாங்களாகத் தயங்குகிறார்களா அல்லது பார்வையாளர்களைக் கவனத்தில் கொண்டு இவற்றைத் தவிர்க்கின்றார்களா என்பது எனக்குத்தெரியவில்லை. எனவே பலகலாச்சாரச் செயற்பாடானது இலகுவான காரியமல்ல.

ஒத்திகையின் போது அன்ரன் பொன்ராசாவும் உடனிருந்தார் (அவரின் பேட்டியைப் பார்க்கவும்) ஜேர்மன் மொழியினை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாத கலைஞர்களுக்காக, இடையிடையே நாடகவசனங்களின் மொழி பெயர்ப்பைச் செய்து கொண்டிருந் தார்.. அவர் பின்னணியில் இருந்த பொழுதிலும், அவரின் ஆளுமையும் அவருக்கான மரியாதையை உற்று நோக்கக் கூடியதாக இருக்கிறது. இம் முழுமையான நாடக நிகழ் விற்கான காரணகர்த்தாவாக இருப் பவர் அவரே என்பதால் அது அதிசயிக்கக் கூடிய விடயமல்ல.

தமிழ் நாடகக் கல்லூரியானது சுவிஸ்ஸில் இருக்கின்ற நாடகம் இரண்டாம் மூன்றாம் தலைமுறையினருக்கு நாடகத்தினைக் கற்கை நெறியில் போதிப்பதற்கும், அவர்கள் தாயகம் திரும்புகையில் அதனை ஒரு தொழில் முறையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கும் ஒரு பரீட் சாத்தத் திட்டமாக உருவாக்கப் பட்டது.

மன்றங்கள் தமிழ்மொழியையும் கலாச்சாரத்தையும் கற்பிக்கின்றதனால் கலாச்சார முன்னெடுப்புக்கள் இதயபூர்வமாகத் துளிர்விட்டுத் துள்ளுகின்றன. நாடகம் - நடனம், இசையுடன் கூடிய நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த பாரம்பரியம். அவை உணர்வு பூர்வமாகப் பாதுகாக்கப் பட்டுவருகின்றன. எனவே இலங்கையைப்போல் சுவிஸ்ஸிலும் இப் பழைய உத்திகள் பல்வகையான பிரச்சினைகளை எடுத்துக்காட்டப் பெரிதும் பயன்படுகின்றன. இவற்றை அன்ரன் பொன்ராசா இலாகவமாகக் கையாளுகின்றார். உதாரணத்திற்கு நாட்டுக்கூத்து ஒரு பாரம்பரிய ஜனரஞ்சக நாடகவடிவம் இவ்வடிவமானது கிராமப்புறங்களின் வயலோரங்களிலும், ஆலமரத்தடிகளிலும் நிகழ்த்தப்பட்டு வந்து இவற்றில் நாளாந்தப் பிரச்சினைகள், இதிகாச வீரர்களின் கதைகள், புராண காவியங்கள் போன்றவையும் இணைந்ததுவே நாட்டுக்கூத்து வடிவமாகும். இதே அடிப்படையில் நாடகக் கல்லூரியில் பழைய நாடக வடிவத்துடன் தற்கால பல்கலாச்சார நாடக வடிவத்தையும் இணைக்க விளைகிறார்.

திரு. அன்ரன் பொன்ராசா அவர்கள் சிறுவயதிலிருந்தே நாட்டுக்கூத்தை தனது உறவினரிடமிருந்து அரங்க அளிக்கை செய்து வந்தார். நாட்டுக் கூத்தில் பார்வையாளருக்கும் நடிகர்களுக்கும் இடைவெளி இல்லாது இருப்பது சிறப்பாகும். பெண்களும் குழந்தைகளும் பெரும்பாலும் இக்கூத்தில் இணைக்கப்படு வதில்லை. கூத்தானது கூத்து வல்லுநரிடமிருந்து கற்கப்படுகின்றது. கூத்துரைகள் மனனம் செய்யப்பட்டு தாளக்கட்டுக்குள்ளும் நடன அசைவுகளுக்குள்ளும் இசைவாக்கம் அடையும் வரை பயிற்றப்படும் இவற்றை முழுமையாகக் கற்றவர் கூத்தில வல்லுநராகி ஏனையோருக்கும் கற்பிக்கும் தகுதி பெறுவார் (இவைகள் கலைஞனுக்கான உணவை வழங்கும் தொழிலாக இல்லை) அன்ரன் பொன்ராசா இயந்திரப் பொறியியலாளருக்கான கல்வியைக் கற்று பின்னர் மூன்று வருடம் யாழ். நாடகஅரங்கக் கல்லூரியில் நாடகத்தினைக் கற்றார். அங்கு பல்வேறு பட்ட பாரம்பரிய நாடகவடிவங்களையும் மேலைத்தேய நாடக வடிவங்களையும் கற்றுக் கொண்டார். அந்தவகையில் நாடகக் கல்லூரியின் எழுவரையும் கருத்தில் கொண்டு "நான் எனது மாணவர்களைப்பார்த்து பெருமைப்படுகின்றேன்" என்றார். இவர்கள் 25 தொடக்கம் 52 வயதிற்குட்பட்டவர்கள். வெவ்வேறு மாநிலங்களிலிருந்து கலந்து கொண்டவர்கள் (பேர்ண், லுட்சேர், சூரிஷ்...) இவர்களில் பெரும் பாலானவர்கள் குடும்பத்தவர்கள். இருந்தும் வார இறுதி நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் தங்கள் நேரத்தை ஒதுக்கினார்கள், ஒரு வருடத்திற்கு 500 மணி நேரத்தைச் செலவிட்டார்கள். உலக நாடகவரலாறு, குரல் பயிற்சி, புத்துணர்வூட்டுதல் அத்துடன் பாரம்பரிய தமிழ்நாடகவியலும், பாட்டு, நடனம், சிலம்பு போன்ற பழைமையான கலைகளையும் இக்கல்லூரியில் கற்றனர்.

பேர்த் ஹொல் பிறெற்றை ஒரு போதும் அறியாது நாடகவியலை அமைக்கலாகாது அல்லவா என்கிறார் பொன்ராசா. அத்துடன் முன்பு சுவிஸ் சூரிச்சிலும் கூட பிறெக்ற் அகதியாகவே வாழ்ந்திருந்தார். இந்த அடையாளம் கூட அரசியல் ரீதியாக சிந்திக்கும் பொன்ராசாவுடன் ஒத்துப் போகின்றது. பொன்ராசாவின் ஈடுபாடு சரித்திரக் கதைகளை விடுத்து சமகாலம் சம்பந்தமாகவே இருந்தது. இக் கல்லூரி விரிவுரையாளர்களின் பட்டங்களையும் அவர்கள் வசிக்கம் நாடுகளையும் (இந்தியா, இலங்கை, டென்மார்க்...) பார்க்கும் பொழுது இதற்கான செலவுகளை எவ்வாறு தீர்க்கின்றார்கள் என்ற கேள்வியும் எழுகின்றது. ஏன் இவ்வளவு தூரம் தேடிப்போக வேண்டும்? இங்கே பக்கத்தில் யாராவது சிறந்த ஆசிரியர்கள் தான் இல்லையா? இருப்பதால் தமிழ் மொழி அறிந்த நாடக ஆசான்களை நாடவேண்டி இருந்தது என்பதே உண்மை.

இனிய இணைவு

இதற்கான நிதியினை சுவிஸ் பேர்ண் நகரசபை, தேவாலய உதவி நிறுவனம், மாணவர்களின் கட்டணம் போன்றவற்றாலும் ஆசிரியர்களும் குறைந்தளவு ஊதியத்துடன் கற்பித்ததினாலும் இச்சிக்கலை நிவர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. அதிகமான மணித்தியாலங்களைக் கற்பித்தலுக்கு செலவிட்ட பொன்ராசா தனது ஊதியத்தை ஈகித்தார். ஏனெனில் நாடகத்திற்கான கலைஞர்களின் வளர்ச்சியே அவருக்கு திருப்தியாக இருக்கிறது. நீண்ட நாட்களாக எதிர்பார்த்த தனது அவாவினை தன் சந்ததிக்கு கடத்த கிடைத்த வாய்ப்பினை ஒரு அதிஷ்டமாகவே நினைக்கிறார். இவரின் சேவை தமிழர்களுக்கு இனியதொரு சந்தர்ப்பம் என்பதை உணரக் கூடியதாக உள்ளது.

நான் பல்வகை மக்கள் வாழும் உலகத்தைச் சேர்ந்தவன். இயக்குநர் எனும் வகையில் சமூக அங்கீகாரம் நிறைந்துள்ளது. எனவே சமூகப்பிரச்சினை எதுவாயினும் நாடகக் கல்லூரி மாணவர்கள் என்னையே நாடினார்கள். ஆனால் நாளாக நாளாக அவர்கள் ஒவ்வொருவரும் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நேரடியாகவே தங்களுக்குள் கதைத்து தீர்வு காண்கிறார்கள். கடலம்மா, மலையப்பா போன்ற அரங்க அளிக்கைகள் மீண்டும் செய்யச் சந்தர்ப்பங்கள் ஏற்படும் பொழுது, இம் மாணவர்கள் தனித்தியங்கும் தன்மைக்கான இப்பட்ட விழா அமைகிறது.

**மாயா குன்ஸ்லர்**

---

நேர்காணல் கண்டவர்
மாயாகுன்ஸ்லர்



## அன்ரன் பொன்ராசாவுடனான ஒரு நேர்காணல்..

*அன்ரன் பொன்ராசா அவர்களே சுவிற்சர்லாந்தில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களில் நடிகனுக்கான தொழில் அனுமதியைப் பெற்றிருக்கும் முதல் தமிழ்மகனாவார்.*



அன்ரன் பொன்ராசா

*நிருபர் : நீங்கள் சுவிற்சர்லாந்துக்கு வந்து ஜேர்மன் மொழி அறியாத காலங்களிலேயே நாடகங்களை நடித்துள்ளீர்கள். இது எவ்வாறு முடிந்தது?*

*பதில் : நான் அகதியாக இங்கு வந்த போது சுவிஸ்சில் ஒன்றையும் அறிந்திருக்கவில்லை, நான் ஆங்கில மொழியையே தொடர்பு மொழியாகக் கொண்டிருந்தேன். ஒருவாரம் அகதிகள் பராமரிப்பு நிலையத்தில் இருந்த பொழுது அதன் நிர்வாகி என்னிடம்கேட்டார், ஏனையநாட்டு அகதிகளுடன் சேர்ந்து மேடை நாடகம் நடிக்க விருப்பமா என்று. அப்படி ஏழு மொழிகளில் ஒரு நாடகம் உருவானது ஒவ்வொருவரும் தமது மரபு மொழிகளில் பேசி நடித்தனர் சிறிது காலத்தின்பின் சுவிஸ் நாடக இயக்குநரான பீற்றர் பிராஸ்லர் என்பவர் தொழில் முறையாக நாடகத்தைக் கொள்ள ஊக்கமளித்தார். ஒரு ஈரான் நாட்டு கலைஞருடன் இணைந்து பல்கலாச்சார இணைவு கொண்ட "மரளம்" நாடக மன்றத்தை உருவாக்கினோம். நான் வேகமாக ஜேர்மன் மொழியைக் கற்பதற்கு விழைந்தேன். அவ்வேளையில் இயந்திரப் பொறியியலாளராக பணியாற்றிக் கொண்டிருந்தேன். நாடகத் துறைக்காக வேலையை இராஜினாமாச் செய்த போது நண்பர்கள் சொன்னார்கள் "உனக்குப் பைத்தியமா?" என்று.*

*நிருபர் :- நீங்கள் சுவிஸ் பிரஜை ஆவதற்கு முயற்சிக்கிறீர்களா? அல்லது வேறு வகையில் கேட்பதானால் சுவிஸ்சிற்குள்ளேயே உங்களை ஐக்கியப்படுத்தி விட்டீர்களா?*

*பதில் :- நான் "எம்மன்" (EMMEN) என்ற ஊரில் வசிக்கிறேன். எனக்கு பிரஜா உரிமை கிடைக்குமா என்பது தெரியாது. (சிரிக்கிறார்) சிலவேளைகளில் நான் நினைக்கிறேன் சுவிஸ் சமூகத்துடன் ஐக்கியப்பட்டு விட்டேன் என்று. சில வேளைகளில் சந்தேகம் கொள்கிறேன். அனுபவங்களின் மூலமாக எனது வாழ்க்கைக்குரிய சிந்தனைகளும், செயற்பாடுகளும் மாற்றப்பட்டுள்ளது. முன்பு நான் ஒழுங்கான வேலை, நிலையான வருமானம், பாதுகாப்பான வாழ்க்கைக்குள் இருந்தேன். இன்று அன்றாடம் காட்சியான வாழ்வே மேற் கூறியவைகள் எல்லாம். தற்போது என்னுடைய கைகளில் இல்லை என்று எனக்குத் தெரியும். முன்பு நான் யாழ்ப்பாணத்தில் ஒரு சிறிய வட்டத்தில் வாழ்ந்திருந்தேன். இன்று நான் ஒரு உலகில் வாழ்கிறேன். நான் அரசியல் விடயங்களுக்கிடையிலான விடயங்களைத் தெளிவாகப் பார்க்கிறேன், அரசியல் நிலைமைகள் சாதகமாக அமைந்தால், இலங்கைக்கு திரும்பிச் செல்வது எனது நீண்டகால அவாவாக இருந்தது. இன்று எனக்கு அது ஒரு விருப்பம் மட்டுமே ஏனெனில் இங்கு பிறந்த எனது 3 குழந்தைகளும் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதுவே நடைமுறை.*

*நிருபர்:- சுவிஸ் மக்களின் மனோபாவம் உங்களின் சொந்தப் பண்பாட்டில் எவ்விதமான தாக்கத்தை உருவாக்குகிறது?*

*பதில்:- தமிழ் சமூகத்தில் பல கடுமையான பண்பாட்டு விதி முறைகள் உள்ளன. விருந்து பசாரம் என்பது புனிதமானது விருந்தாளி போன்று பேசுவேனானால், எனக்குள்ளேயே எனது தமிழ்க்குரல் "ஏய்,நீ இப்படிப் பேசலாகாது" என அழுத்தும் நாங்கள் சிலாஹற் கௌஸ் அரங்கில் அளிக்கை செய்யும் நாடகத்தின் ஒருபகுதியில் இழிவான வசனங்கள் ஜேர்மன் மொழியில் பேசுவது இணைக்கப்பட்டுள்ளது. இது தமிழ்க்கலைஞர்களுக்கு ஒரு சவாலாக இருந்தது. ஏனெனில் எங்கள் கலாச்சாரத்தில் இவை போன்றவை மேடையில் பயன் படுத்துவதை இணைத்துப்பார்க்க முடியாதவை. அவைபாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கு முரண்பாடானவை.*

# நேர்நோக்கு

## வெறுக்கத்தக்க செயல்

**சிறீலங்கா** கடற்படையினர் வடக்கு - கிழக்கில் வாழும் மீனவர்களை அச்சுறுத்துவதற்கு அண்மையில் புதியதொரு வழிமுறையைக் கையாண்டுள்ளமை புலப்படுகிறது. அதாவது தமது விசைப்படகுகள் மூலம் மீனவர்களின் படகுகளை மோதி அவர்களை மூழ்கடித்துக் கொல்லும் நடவடிக்கைகள் ஒன்றல்ல இரண்டுமுறை மேற்கொண்டுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

முதலாவது நடவடிக்கை கிழக்கில் மூதூரிலும் இரண்டாவது வடக்கே வடமராட்சியிலும் அதாவது கிழக்குக்குக் கரைப்பிர தேசத்தில் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த இரு தாக்குதல்களிலும் ஒரு மீனவர் பலியாகியிருக்கிறார். ஒருவர் காணாமல் போயிருக்கிறார்.

மூவர் காயமடைந்திருக்கின்றனர் இருவர் காணாமல் போய்' மீண்டும் வந்திருக்கின்றனர். காயமடைந்த மூவரும் தமது படகுகளை மோதி மூழ்கடித்தவர்கள் கடற்படையினரே என்பதை உறுதி செய்திருக்கின்றனர்.

யுத்த வேளையிலும், யுத்த நிறுத்த வேளையிலும், கடந்த ஆண்டும் கூட அப்பாவி மீனவர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களில் பலரைக் கொன்றும் காயப்படுத்தியும் உள்ளனர். அவர்களின் படகுகள் மீது பீரங்கித் தாக்குதல் நடத்தி அவற்றை எரித்து அழித்திருக்கின்றனர். அவ்வேளைகளில் அப்படகுகள் எல்லாம் புலிகளின் படகுகள் எனவும் இறந்தவர்கள் எல்லாம் புலிகள் என்றும் சிங்கள ஆட்சியாளர்கள் நியாயப்படுத்தி வந்தமை வழமையான ஒன்றாக இருந்தது.

இப்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டு, யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு 10 மாதங்களுக்கு மேலாகியுள்ள நிலையிலும் கடற்றொழிலாளர் மீதான கடற்படையின் வன்முறைகளும் கெடுபிடிகளும் குறைந்த பாடில்லை.

மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த கெடுபிடிகளில் சிறிது தளர்வு ஏற்பட்டிருக்கின்ற போதிலும் அவை நீங்கிவிடவில்லை என்பது வெளிப்படையான ஒன்றே. கடும் பிரயத்தனத்தின் மத்தியில், சில தளர்வுகளை ஏற்படுத்த முடிந்த போதிலும், பல பகுதிகள் இன்னமும் மீன் பிடிக்குத் தடை செய்யப்பட்ட பிரதே சங்களாகவே உள்ளன. அத்துடன் மீன் பிடிக்கு அனுமதி வழங்கப்பட்ட இடங்களிலும் நாளைக்கொரு சட்டம், இடத்துக்கொரு சட்டம் என கடற்படையால் நடை முறைப்படுத்தப்பட்டு வருவதையே காணமுடிகிறது.

இந்த நடைமுறைகள், சட்டங்களையெல்லாம் பின்பற்றிச் செல்லும் மீனவர்களுக்கே இக்கதி ஏற்பட்டிருக்கிறது.

முன்னர் தூர இருந்து தாக்குதல் நடத்தி விட்டுச் சென்ற கடற்படையினர், இப்பொழுது அருகில் நெருங்கிவந்து உறுதிப்படுத்தக்கூடிய நிலையிலிருந்தும் கடற்றொழிலாளர்கள் தம்மை அடையாளம் காட்டியும் கூட இவ்வாறான கொடூரச் செயலை நடத்தியிருக்கின்றனர்.

இந்த நிலையில் மூதூர் சம்பவத்தில் மீனவர்பலியானது குறித்துக் கருத்துக் கூறிய கடற் படைத்தளபதி கடற்படையினரைப் பாதுகாக்கும் வகையில் கடற்படையினர் இச் சம்பவத்தில் தொடர்புபடவில்லை என்பது போலக்காட்டி நீரில் மூழ்கி அம் மீனவர் மரணமானதாக கூறியிருக்கிறார். ஆனால் கடற்படையினரின் தாக்குதலில் அவர் நீரில் மூழ்கடிக்கப்பட்டு இறந்தார் என்பதே உண்மையான விடயமாகும்.

அவர் இவ்வாறு கூறிய சில மணிநேரத்தில் வடமராட்சியில் இரண்டாவது சம்பவம் நடந்திருக்கிறது. இது கடற்படைத் தளபதியின் உத்தரவுக்கு இணங்க இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுகிறதா? அல்லது தமது இவ்வாறான செயல்களையெல்லாம் நியாயப்படுத்த உயர் மட்டம் இருக்கிறது என்ற துணிவில் மேற்கொள்ளப்படுகின்றதா? போன்ற கேள்விகளை எழுப்புகின்றன. இச்சம்பவங்களை தவறுதலாக நடந்தவை என்று கூறி தட்டிக்களித்து விடவும் முடியாது.

இவ்வாறு தொடரும் சம்பவங்கள் மக்களுக்கு தமது இன்றைய நிலை குறித்த கேள்வியை எழுப்பக் கூடியதாகும். 17 வருடங்களுக்கும் மேலாக கடல் வலயத் தடைச் சட்டத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு பெரும் துன்பங்கள் அனுபவித்து வரும் இக்கடற்றொழிலாளர் சமாதான முயற்சிகள் காரணமாகத் தமது நிலையில் நல்ல மாற்றங்கள் வரும் என எதிர்பார்த்திருக்கையில் தொடர்ந்தும் அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதும், உயிர்கள் பறிக்கப்படுவதும், காயங்கள் ஏற்படுத்தப்படுவதும் உடைமைகள் நாசமாக்கப்படுவதும் அவர்களுக்குப் பெரும் துன்பம் விளைவிப்பதாக இருப்பது மட்டுமல்லாது இச்சமாதான முயற்சிகள் குறித்த அவநம்பிக்கையையும் ஏற்படுத்துக்கூடியதாகும்.

இன்றைய அமைதிச் சூழ்நிலையை மேலும் முன்னேற்றகரமானதாக மாற்றி நிரந்தர அமைதியை இலங்கையில் ஏற்படுத்த விரும்பும் எவரும் சிறிலங்கா கடற்படையினரின் இந்த நடவடிக்கை குறித்து தமது அதிருப்தியை வெளிக் காட்டாது இருக்க முடியாது.

**வேலவன்**

4ம் பக்கத் தொடர்ச்சி..

விட்டால் எப்படியோ இந்தச் சிந்தனையெல்லாம் எங்கோ தொலைந்துபோகிறது. பிறகு, மனிதாபிமானம், கடமையுணர்வு, நேர்மை, சேவை, என்பனவற்றை வெகு அபூர்வமாகச் சிலரிடம் மட்டுமேதான் காணமுடியும்.

மற்றும்படி நேரகாலமின்றி வேலை செய்தவர்கள் நேரம் பார்க்கிறார்கள், முகம் பார்க்கிறார்கள், தகுதி பார்க்கிறார்கள், வெட்டியோடுகிறார்கள், விலக்கி விடுகிறார்கள், தட்டிக் கழிக்கிறார்கள், 'உம்' மென்றிருக்கிறார்கள், வெறுப்பூட்டுகிறார்கள், வீணேபொழுதளக்கிறார்கள்.

இப்படி அதிகாரம் செய்தால்தான் மக்களைக் கட்டுப்படுத்தலாம் என்று நினைக்கிறார்களா? அல்லது அதிகாரம் செய்வதுதான் உத்தியோகத்தின் அடையாளம் அதிகாரத்துக்கான மதிப்பு என்று எண்ணுகிறார்களா?

அல்லது இவ்வாறு செய்யாவிட்டால் மக்களுக்கும் தமக்கும் இடையிலான 'பிரிகோடு' அழிந்து வேறுபாடின்றிப் போகுமென்று அச்சப்படுகிறார்களா?

என்ன நடக்கிறதென்றால் -

ஏற்கனவே கட்டமைக்கப்பட்டிருக்கும் அதிகார பீடத்தின் சுவை சடுதியாக ருசிக்கத் தொடங்கி விடுவதால் பலரும் அதனைச் சுற்றியே குந்திவிடுகிறார்கள். அதிகாரம் பிறகு மெல்ல மெல்ல லாபங்களைக் குவிக்கத் தொடங்கும். கேள்விகளும் நியாயமுமற்ற ஒரு வெளியை சுவீகரித்துக் கொண்டு தன்னை ஸ்தாபித்து வளர்த்து விடுகிறது. பின்பு வந்த பாதையோ ஏறிய படியோ தாங்கும் தளமோ புலப்படாத ஒரு இரும்பு நிலைக்கு அது போய்விடுகிறது.

சேவையென்பது தன்னலத்துக்கப்பாலான இதயத்திலிருந்து வருவது, அப்படி அதுவரவேண்டும். சனங்களை மாடு மேய்ப்பதாக நினைப்பதென்பது உண்மையில் சனங்களின் இதயத்திலிருந்து இறங்கி, அவர்களே மந்தைகளாவதுதான்.

ஆனால் உண்மையான உழைப்பாளரையும் மெய்யான தொண்டரையும் யாரும் மறந்து விடுவதில்லை. இது தெரிந்த விடயம் தானேயென யாரும் நினைக்கக் கூடும். இதிலென்ன புதுமையுண்டென்று கேட்கவும் கூடும்.

எல்லாம் தெரிந்தபின்னும் திரும்பத்திரும்ப இப்படித்தான் எங்கும் நடந்து கொண்டிருக்கிறதே. தொடர்ந்து அலைந்து கொண்டிருக்கவும் வேண்டியிருக்கிறதே.

ஒருவருடைய உரிமை, ஒருவருக்கான மதிப்பு, ஒருவர் மீதான நேசிப்பு என்பதெல்லாம் ஒரு பண்பு நடத்தையே, ஒரு அறிவியற் செயற்பாடே. இவற்றுக்காகப் போராடும் நமது வாழ்க்கையை, அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டால் இச்சமகாலத்திலேயே இப்படி அவர்கள் நடக்கமாட்டார்களல்லவா.

உண்மையில் மெய்யானதொரு சேவைத்தளத்தை நாம் நிர்மாணிக்கவில்லையென்றால் அலைவும், துயரும், வெறுப்பும், சலிப்பும் தான் நம் வாழ்க்கையின் பெரும் பகுதியாக இருக்கும்.

அழுகிய கனிதான் நமக்கென்றிருக்கும்.

---

2ம் பக்கத் தொடர்ச்சி..

இந்த அறிக்கை கையளிக்கப்பட்டதும் அதனை வெகுவாகப் பாராட்டியவர் சந்திரிகாதான். அதனை ஆதரித்து அந்தநிபந்தனைகளில் எந்த விட்டுக் கொடுப்பும் செய்யமுடியாதென்று வலியுறுத்தி - இன்னமும் அதே கருத்தில் உறுதியாக நிற்பவர் இராணு வத் தளபதி பலகல்லே தான்.

எனவே தனது முடிவல்ல அது இராணுவத்தரப்பின் ஆலோசனை மட்டுமே என்று பீரிசின் வார்த்தைகள் மூலம் அரசாங்கம் தனது கருத்தை வெளியிட்டுள்ள மையை எந்தளவுக்கு நம்புவது என்பதும் வேறுவிடயமாகும்

ஏனெனில் இந்த அறிக்கை தயாரிப்பில் அரசுதரப்பில் ஒஸ்ரின் பெர்னாண்டேவின் பங்கையும் நிராகரித்து விட முடியாது என்பதனாலேயாகும்.

சரி - இது ஒருபுறமிருக்க மூன்றாவது ஆதிக்க சக்தியான சிறிலங்காவின் பௌத்த மத பீடங்கள் சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பாக எந்தவொரு உறுதியான நிலைப்பாட்டையும் இன்னமும் எடுக்கவில்லை. எல்லாத்தரப்புக்கும் "ஆசி" வழங்கும் அதேவேளையில் "சிங்கள பௌத்தம்" என்ற கோட்பாட்டில் அவர்கள் சிறிதளவும் இறங்கியுள்ளதாகத் தெரியவில்லை.

அவர்கள் அமைதியையும் - சமாதானத்தையும் விரும்புவர்களாலயின் சனாதிபதியையும், பிரதமரையும், ஏனைய கட்சிகளையும் ஒரு சேர அழைத்து அரசின் சமாதான நகர்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வெளிப்படையான ஆலோசனையைக் கூறி அறிவுறுத்தலாம்.

தென்பகுதி மக்களுக்கும் அவ்வாறு கூறலாம்.

இதனைவிட சிஹல உறுமய போன்ற இனவாத சக்திகளையும் அந்த மதபீட மும்மணிகள் நல்வார்த்தையால்க் கட்டுப்படுத்தலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக சோமதேரர் போன்ற பிக்குகளின் "ஜன விஜய" போன்ற இனவாத அரசியல் கட்சிகளின் உருவாக்கத்தையாவது கட்டுப்படுத்தலாம்.

எல்லாவகையிலும் வலிமை கொண்டவர்களாக, சிறிலங்காவின் அனைத்து அரசியல்த் தலைமைகளும், படைத்தலைமைகளும் பணிந்து நிற்கும் பெருமதிப்புக் கொண்டவர்களாக, மக்களின் வணக்கத்துக்குரியவர்களாக விளங்கும் அரசபீடங்களுக்கும் மேலான பௌத்த மதபீடாதிபதிகள் சமாதானத்தை நிராகரித்து போருக்கு முன்னுரிமை கொடுக்க நினைக்கும் அரசியல் - இராணுவத் தலைமைகளுக்கு ஆசிவழங்கி வாழ்த்துவதும் அவர்களின் செயற்பாடுகளுக்கு வழங்கும் அங்கீகாரமாகவே கருத இடமுண்டு.

சிறிலங்காவுக்கு இன்று மிகவும் தேவைப்படுவதாகக் கூறப்படும் சமாதானம் குறித்து நாவளவில் எல்லோரும் பேசினாலும் கூட இதயபூர்வமாக யாவரும் செயற்படுவதாக இல்லை.

பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களைப் பேணவும் அவர்களின் மனித - மற்றும் வாழ்வியல் உரிமைகளை வழங்கவும், வரட்டுத் தனமான இராணுவ சுயபாதுகாப்பு நலன்களைக் காரணம் காட்டி பின்னடிப்பவர்கள் மக்கள் விரோத சக்திகளாகவே எதிர்கால வரலாற்றில் பதிவு செய்யப் படுவர்.

உயர்பாதுகாப்பு வலயம் என்பது மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் அவர்களின் இயல்பு வாழ்வை நிராகரிப்பதாகவும் அடிப்படை உரிமைகளைப் புறம் தள்ளுவதாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக சமாதான முயற்சிகளை உதாசீனம் செய்வதாகவும் இருப்பதை அங்கீகரிக்கும், ஆதரிக்கும், அதற்கு மௌன ஆசி வழங்கி நிற்கும் எந்த அதிகார வர்க்கமும், ஆட்சியும், படையும் ஏன் மதபீடங்களும் கூட ஒரு நாட்டின் தேசியத்துக்கு மட்டுமல்ல... அங்கு வாழும் தேசிய இனங்களுக்கும் கூட... அச்சுறுத்தலான ஆபத்தான அமைப்புகளாகவே இருக்கும்.

தாய்லாந்தில் நான்காம்கட்டப் பேச்சுவார்த்தைகள் தாண்டவேண் டிய பல கட்டங்களைத் தாண்ட வேண்டிய நிலையில் - அதனை தாண்ட முட்டுக் கட்டையாக உள்ள தடைகளைத் தாண்டுமா? தாண்டாதா? என்ற மக்களின் ஏக்க எதிர்பார்ப்புகளுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில். சிங்கள பௌத்த அரச இராணுவ மற்றும் மதபீடத் தலைமைகள் சமாதானத்தை, அமைதியை உறுதிப்படுத்த எத்தகைய முடிவை எடுக்கப்போகின்றன என்பதே அனைவரதும் கேள்வியாகவும் உள்ளது. ✦

# மாவீரர் நாள் - 2002

# சிறப்பு இலக்கியப் போட்டி முடிவுகள்

### சிறுகதை

**முதல் பரிசு**

**"சேவல்களின் கதையும் சொல்லாத சேதிகளும்"**
*யோ.கர்ணன்,கலட்டி வீதி,*
*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.*

**இரண்டாவது பரிசு**

**"நத்தொலி"**
*கருணைரவி,*
*கரணவாய் மேற்கு,*
*கரவெட்டி.*

**மூன்றாவது பரிசு**

(இருகதைகள் தெரிவு)

**"மாரிகால இரவுகள்"**
*சி.மாதுளா,*
*தமிழீழம்.*

**"கனத்த நாட்களின் நிகழ்வுகள்"**
*ச. இராகவன்,*
*"ஈஸ்வரி வாசம்"*
*கரவெட்டி கிழக்கு,கரவெட்டி.*

**பாராட்டுப் பரிசுக்குரிய கதைகள்**

**"இறுதியாத்திரை"**
*க. கிருபாகரன்,*
*யூனியன்குளம், கோணாவில்,*
*கிளிநொச்சி.*

**"வேதாளம் இறங்கியது"**
*வானதி சூரியகுமாரன்*
*மே/பா - T.தனபாலசிங்கம்,*
*2ம்,வட்டாரம், புதுக்குடியிருப்பு.*

**"புயல் முகங்கள்"**
*திருமதி. றேணுகா செயரூபன்,*
*மு/குமுழமுனை ம.வி*
*முள்ளியவளை.*

**"பரீட்சைக்கு நேரமாச்சு"**
*Dr -S.முருகானந்தன்,*
*வன்னேரிக்குளம்,*
*கிளிநொச்சி.*

**"தட்டித்திறந்த கதவுகள்"**
*வனிதா,*
*திருமதி. இ. அருணாசலம்*
*குருகுலம் அருகாமை*
*ஜெயந்தி நகர்,கிளிநொச்சி.*

**"இலக்கு நோக்கிய பயணம்"**
*மா. மாசிலாமணி,*
*தமிழ்த்தென்றல்,*
*தண்ணீரூற்று,முள்ளியவளை.*

**"அகலிகை"**
*செல்வி. வேணி சின்னத்தம்பி.*
*யூதா கோவில் வீதி,*
*உடையார்கட்டு வடக்கு,*
*உடையர்கட்டு.*

**"சின்னப்பூக்களிடம் சில பொழுதுகள்"**
*கிரிஜா தவலோகராஜா,*
*இல-303,*
*3ம் யுனிற் யோகபுரம்,மல்லாவி.*

**"வன்னியை விட்டுட்டு வரமாட்டன்"**
*வல்வையூரான்,*
*வ.ஆ தங்கவேலாயுதம்*
*பிள்ளையார்வளவு •*
*01ம்,யுனிற்*
*யோகபுரம் மல்லாவி.*

**"ஆறுகரையில் அடங்கி நடந்திடல்"**
*செல்வி- பகீரதி வேலாயுதம்,*
*ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை*
*ஆரம்பக் கல்வி விடுகையாண்டு*
*மட்டக்களப்பு.*

**"மீண்டும் ஒரு அகல்யா"**
*சு.சிவராசா,*
*ஊற்றங்கரை வீதி,*
*தண்ணீரூற்று,*
*முள்ளியவளை.*

**"அவனும் ஒரு போராளி"**
*வீ.தேவபாணு,*
*தமிழீழம்.*

**"ஒரு சொட்டு உசிர்"**
*ஓ.கே. குணநாதன்,*
*64, கதிர்காம வீதி*
*அமிர்தகழி,மட்டக்களப்பு.*

**"இன்னும் நாங்கள் சாகவில்லை"**
*சி. மாதுளா.*
*தமிழீழம்.*

### கவிதை

**முதலாம் பரிசு**

**"உனக்கான தேடல்களோடு"**
*நா.கானகன்*
*183, ஸ்கந்தபுரம்,*
*கிளிநொச்சி.*

**இரண்டாவது பரிசு**

**"தலை வணங்கும் இல்லம்"**
*மா.பரமேஸ்வரன்*
*உடையார்கட்டு.*

**மூன்றாம் பரிசு**

**"ஞாபகம் இருக்கட்டும்"**
*ச.றஜீஸ்குமார்,*
*661, கொத்தம்பியாக்குளம்,*
*துணுக்காய.*

### கட்டுரை

**முதலாம் பரிசு**

**"தேவை"**
*எட்வின்*

**இரண்டாவது பரிசு**

**"தமிழர்உன்மொழி தமிழா..?"**
*திருமதி.சுபோஜினி சிவபாலன்*
*கனகாம்பிகைக்குளம்,*
*கிளிநொச்சி.*


**மூன்றாம் பரிசு**

**"துயரங்களைச் சுமந்த நாட்கள்"**
*வீரபாகு -ரஞ்சி*
*இல 9, சிவன் வீதி,*
*திருநெல்வேலி.*

என் நண்பர்கள் ஏழைகள், ஆனால் நேர்மையானவர்கள். - வில்லியம் ஷேக்ஸ்பியர்.

# 10ம் ஆண்டு நினைவில்...

கிட்டு ஒரு தனிமனித சரித்திரம்.
நீண்ட ஓய்வில்லாத, புயலாக வீசும் எமது விடுதலை
வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.
—தமிழீழ தேசியத் தலைவர் —



16 ★ 01 ★ 2003




**கேணல் கிட்டு**

காலை இழந்தும் நீ காவல் இருந்தாய்
கண் துயிலாது களத்தில் திரிந்தாய்
உன் நினைவால் ஈழம் அமைப்போம்.

16.01.1993 அன்று வங்கக்கடலில் இவருடன் வீரகாவியமான
அனைத்து போராளிகளுக்கும் வீரவணக்கங்கள்.

## படத்திற்கு உயிரூட்டுங்கள் -01



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை வாக்கியங்களாக எழுதி அனுப்புங்கள்.
சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

அனுப்புங்கள்:
படத்திற்கு உயிரூட்டுங்கள் –01
ஈழநாதம் பணிமனை,
யாழ் சாலை, கிளிநொச்சி.




எங்கும் கிடைக்கிறது!
ஈழநாதத்தின் வாரஇதழ் வெள்ளிநாதம்
உங்கள் விமர்சனங்களையும் கடிதங்களையும் எதிர்பாக்கின்றோம்
யாழ் சாலை,
கிளிநொச்சி.
e.mail: natham23ela@yahoo.com

C.B.I புகையிரத நிலையம் முன்பாக
வவுனியா
2005 A\L மாணவர்களுக்கான
கணித, விஞ்ஞானக், கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பமாகியுள்ளன
நிர்வாகி
திரு.எஸ்.தவபாலன்
(பௌதிகவியல் ஆசிரியர்)
(2664)

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.